பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணா

மலர் 1	ஞாயிறு 1-10-'39	இதழ் 13

பொருள் அடக்கம்

18691

விஷயம்		பக்கம்
சரியான சோமில்லையாம்	... ...	2
லோக சஞ்சாரம்	... ...	5
போர் முனையில்	... ...	8
மிளகாய்ப்பொடி அர்ச்சனை	... வ. ரா.	12
கருணைக்கடல்	... து. நாராயணன்	15
ஐரோப்பிய அரண்கள்	... ...	16
ஆளுக்குள்ளே ஆளு ; எத்தனை ஆளு?	... ...	19
தொட்டிலில்	... அசுவதி	24
வைதேகியின் கண்ணீர்	அ. கி. ஜெயராமன்	26
ராமுவின் சாவு	... "ரஞ்சனன்"	31
போங்காணும்! போம்!	... வ. ரா.	33
கும்பிடப்போகாத தெய்வம்	வி. ராமசந்திர ராவ்	39
புரியாத கோபம்	... சீதாபதி	41
சாந்தியின் குரல்	டி. எம். ஜம்புநாதன்	44
பிரதாப சிங்	கு. ப. ராஜகோபாலன்	49
பெண்	... ...	54
விஷ வாயு	... வெ. ம.	57
ஜெனரல் காமெலின்	... ...	63
இந்த உலகம்!	எஸ். டி. ஸ்ரீனிவாசாச்சாரியார்	65
அகத்தியன் ஔஷதம்	... ...	71
ஒய்யார உயில்!	... விகடானந்தன்	74
மின்னக்கலை	... மணி	77
முதல் கடிதம்	... புவனம்	81
விமிஷக் கதைகள்	... ...	86
காற்றூடி	சியாராமசரண குப்தா	88
நட்சத்திர பலா பலன்கள்	... ...	92
திரை உலகம்	... ...	102

சரியான நேரமில்லையாம்!

இந்தியாவைப்பற்றி, பிரிட்டன், எதிர்காலத்தில் என்ன எண்ணங் கொண்டிருக்கிறது என்பதை அறிவிப்பதற்கு, சில சங்கடங்கள் இருக்கிறதென்றும் பிரிட்டனுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், இந்தயா பேரம் செய்வது தவறு என்றும் இந்தியா மந்திரி ஸெட்லண்ட் பிரபு சொல்லுகிறார்.

'பிறனுடைய கஷ்டம் என்னுடைய அதிருஷ்டம்' என்று சொல்லுவது முட்டாள் தனமான தத்துவம் என்பதை, தவக்கமன்னியில், நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், இந்தியா சம்பந்தப்பட்ட வரையிலும், எதிர்காலத்தில், பிரிட்டன் எவ்வாறு நடந்துகொள்ளப் போகிறது என்பதை வெளியே சொல்ல, இந்தியா மந்திரிக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பது தெரியவில்லை.

போலந்தின் சுதந்திரத்தை எவ்வகையாலும் காப்பாற்றப் போகிறோம் என்று உறுதி கொடுத்து, அதன் பொருட்டு, ஜர்மனியோடு போருக்குத் தயங்காமல் போயிருக்கிறது பிரிட்டன். ஜர்மனியோடு போருக்குப் போகிற விஷயத்தில், பிரிட்டன் எவ்வளவோ யோசனை செய்திருக்க வேண்டும்.

இந்தியா சம்பந்தமாக எப்படி பிரிட்டன் நடந்துகொள்ளப் போகிறது என்பதைப் பற்றி யோசனை செய்யவேண்டிய தேவையே இல்லை. இந்தியாவில் பொறுப்பாட்சியை ஸ்தாபனம் செய்வதற்கு 'அடி கோலியாக, இந்தியாவின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, தில்லிநகரில், இந்திய ஜனத் தலைவர்கள் அடங்கிய 'கான்ஸ்டிவெண்ட்' சபையொன்றை,. 1940-ம் வருஷ ஜனவரி மாதத்துக்குள் கூட்ட ஏற்பாடு செய்கிறோம் என்று உறுதி கொடுப்பது வைஸ்ராய்க்குக் கஷ்டமாகி விடுமா?

உலகத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவும் ஹிட்லர் ஆட்சி முறையை அழிப்பதற்காகவும் ஜனநாயகத்தை ஸ்தா

பிப்பதற்காகவுமே, பிரிட்டன் இப்பொழுது போரில் இறங்கியிருக்கிறது என்று பொதுப்படப் பேசுவதில் என்ன பயன்? அந்த நோக்கத்தை இந்தியா சம்பந்தமாய் எவ்வாறு, எவ்வளவு காலத்துக்குள் பூர்த்தி செய்ய முடியும் என்பதை பிரிட்டிஷ் பிரதம மந்திரியோ அல்லது வைஸ்ராய் லின்லித்கௌ பிரபுவோ, ஏன் வெளியிடக் கூடாது?

சுய நிர்ணயக் கொள்கையை உலகத்தில் நிலைநாட்டும் பொருட்டே, 1914-ம் ஆு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது என்று மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜ்யார்ஜ் சொன்னார். அவர் சொன்னது என்னவாயிற்று? சுய நிர்ணயப் பேச்சை, புயல் காற்று அடித்துக்கொண்டு போய்விட்டது. ஜர்மனியின் குடியேற்ற நாடுகளும் வேறு சில நாடுகளும் பிரிட்டனுடைய ஆட்சிக்குக் கீழ் வந்த காட்சியைத்தான் உலகம் கண்டிருக்கிறது. அதைப்போலவே, இந்தத் தடவையும் ஆகிவிடக்கூடாதே என்று காங்கிரஸ் எண்ணி, பிரிட்டனுடைய உத்தேசம் என்ன என்று கேட்டால், அதில் என்ன தவறு இருக்கிறது?

சிலர் இந்தமாதிரி வாதம் செய்யலாம். பிரிட்டன் இப்பொழுது வாக்குறுதி கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த வாக்குறுதியை எதிர்காலத்தில் காப்பாற்றும் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். பகிரங்கமாகச் செய்யும் வாக்குறுதிக்கு, வேறு அத்தாட்சியே தேவையில்லை. வாக்குறுதியே அத்தாட்சியாகும்.

பிரிட்டன் ஏய்த்து விட்டால், அப்பொழுது இந்தியா என்ன செய்யுமோ, அதையே இப்பொழுது செய்ய ஆரம்பித்துவிடலாமே என்று சிலர், யோசனை சொல்லுகிறார்கள். இந்த யோசனை நல்ல யோசனை என்று பல இளைஞர்களும் மற்றும் அதிருப்தி கொண்டவர்களும் வாழ்த்தக்கூடும். கனவான் என்று நாம் மதிக்கும் ஒருவன் வேண்டுமென்றே நம்பிக்கை மோசம் செய்வான் என்று முன்கூட்டியே முடிவு செய்வது கண்ணியமாகாது.

விருந்துக்கு வந்தவன் திருடன் என்று எண்ணி, அவனைக் கண்பார்வையிலேயே வைத்துக் கொண்டிருப்பது, விருந்து அழைப்புக்கு அழகல்ல.

ஹிட்லரின் பேரில், உலகத்தாருக்கு என்ன கோபம்? அவர் மனிதத்தன்மையை மிகவும் கேவலமான நிலைக்குக் கொண்டு வந்துவிட்டு, முறை தவறிக் காரியம் செய்யத்துணிந்து விட்டார் என்று தானே, உலகத்தார் அவர் பேரில் கோபம் கொண்டிருக்கிறார்கள்? மனிதத் தன்மையை உலகத்தில் எப்படி ஸ்தாபிப்பது? எல்லாரும் ஏமாற்றி விடுவார்கள் என்று வீண் முறையில்லாமல் சந்தேகப்பட்டுக் கொண்டு, சந்தேகத்துக்குத் தகுந்தாற்போல

காரியம் செய்தால், மனிதத் தன்மையை ஒரு நாளும் உலகத்தில் நிலைநாட்ட முடியாது.

பொய்யனிடம் பொய்யனாக நடந்துகொண்டால்தான் காரியம் சாயும் என்று சொல்லுவது மிகவும் மட்டமான தத்துவமாகும். பொய்யனுக்காக பொய் சொல்லவேண்டுமானால், உண்மையை உலகத்தில் எப்படி நிலை நாட்டுகிறது? கோணக் கோணக் கோவிந்தா என்பது போல, வாதம் செய்வதில் பிரயோசனம் இல்லை.

இந்தியர்களுக்கு சுயராஜ்யத்தில் ஆவல் இருந்தால், எத்தனை பிரிட்டன்கள் சேர்ந்து எய்த்தாலும், இந்தியாவுக்கு சுயராஜ்யம் வந்துதான் தீரும். சக்தியில்லாமல், இந்தியா, பிரிட்டனுடைய நெருக்கடியை உபயோகித்துக் கொண்டு, பயமுறுத்தியோ அல்லது பேரம் செய்தோ, சுயராஜ்யம் பெறுமாகில், அந்த சுயராஜ்யம் பைசாவுக்குப் பிரயோஜன மில்லாத சுயராஜ்யமாகும். அது நிலைத்து இருக்காது.

இந்திர சந்திரர்கள் வந்தாலும், எதிர்த்துப் போராடலாம் என்ற தைரியம், இந்தியாவுக்கு வந்தாலொழிய, எத்தகைய பேரத்தாலும், இந்தியாவுக்கு கடுகளவுகூட நன்மை ஏற்படாது.

பிரிட்டனுக்கு ஒரு கடமை உண்டு. வாக்குறுதி கொடுப்பதற்கு சரியான நேரமில்லை என்று இந்தியா மந்திரி நிலைமையை உள்ளபடியே தெரிந்துகொண்டு சொன்னதாயிருந்தாலும், அதை மழுப்புதலாகத்தான் சாமான்ய இந்திய மக்களும் சந்தேகிக்கும் அரசியல் வாதிகளும் கொள்ளுவார்கள்.

வழக்கமான மழுப்புதல் என்ற சந்தேகம் இந்தியர்களின் மனதில் ஸ்திரப்பட்டுப் போகுமாகில், இந்தியாவின் அதிருப்தியும் விரோதமும்தான் பிரிட்டனுக்கு மிச்சப்படும். ஆகவே, கணீர் என்ற குரலில், "இனி இந்தியா அடிமை நாடல்ல. அது சுதந்திரம் படைத்த நாடு. அதன் சுதந்திரத்தை பிரகாசிக்கும் படியாகச் செய்வது பிரிட்டனுடைய கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றி வைக்க, என்ன ஏற்பாடுகளை யெல்லாம் சீக்கிரத்தில் செய்யவேண்டுமோ, அவ்வளவையும் பிரிட்டன் செய்யும்" என்று வைஸ்ராய் சொல்ல வேண்டும்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதற்கான யோசனைகளை, காந்தியிடமிருந்து, வைஸ்ராய் பெறவேண்டும்.

லோக சஞ்சாரம்

எப்பவே தெரியுமே!

மனிதர்களுக்குள் பலவகை ரகங்கள் இருக்கிறார்கள். சிலர் எவ்வளவோ தியாகம் செய்தாலும் அதை வாய்விட்டுச் சொல்வதில்லை. மற்றும் சிலர் எவ்வளவோ அழகான யோசனைகளைச் சொன்னாலும், தங்கள் யோசனைகள் தான் பலித்திருக்கின்றன என்று மார் தட்டிக்கொண்டு பகிரங்கப்படுத்திக் கொள்வதில்லை.

வேறு சிலர் நாள் முழுதும் உழைத்தும், சோம்பலே இல்லாமல், 'ஐயோ! பொழுதுபோய் விட்டதே. வேலை இன்னும் சரியாகவில்லையே!' என்று வருத்தப்படுவார்கள். ஆனால் சில படாடோபப் பேர்வழிகள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்களாக எதையும் உருவாகச் செய்வதில்லை. பிறர் வேலை செய்யவும் விடுவதில்லை. காரியம் பழுதாய்ப்போன உடனே, "எப்பவே தெரியுமே!" என்று சொல்லிக்கொண்டு தங்கள் புத்திசாலித்தனத்தை வெளிக் காண்பிக்க எத்தனிப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட கோஷ்டிக்கு தலைமை வகிப்பவர் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள். சென்ற பத்து வருஷகாலமாக உருவாக எந்த வேலையும் அவர் செய்ததே இல்லை. வங்காளத்தில் எவ்வளவு அனியாயமான பிளவுகளை உண்டாக்க முடியுமோ அவ்வளவு பிளவுகளை உண்டாக்கி விட்டார்.

அஹிம்சையில் அவருக்கு நம்பிக்கை இருக்குமோ, இருக்காதோ! அதை ஈசன் ஒருவர்தான் அறிவார். வாயளவிலே மகாத்மாவைப் போற்றுகிறார். ஆனால் காந்தி வழி நாட்டுக்கு பயன்படாத வழி என்று பிரசாரம் செய்வதில் சளைப்பதில்லை. ஏதேனும் ஒரு பெரிய ஸ்தாபனம் சிற்சில சமயங்களில் தவறுகள் செய்யலாம். அந்த தவறுகளை, தவறுகளாக மதித்து மூடிக்கொண்டு போனால் தான், அந்த ஸ்தாபனம் கௌரவமாக நிலைத்திருக்க முடியும்.

அப்படிச் செய்யாமல் அதைப் பற்றி தூஷணையாகப் பேசுவதும், 'எப்பவே தெரியுமே' என்று புத்திசாலியைப்போலப் பேசுவதும் புத்திசாலித் தனமாகாது. ஸ்ரீ. சுபாஷ் சந்திர போஸ் நாளாக நாளாக நல்லவர்களின் வார்த்தையை கேட்பவராக தெரியவில்லை. நாட்டின் துர்ப்பாக்யம்!

படுகொலை.

ருமேனிய பிரதம மந்திரி சில நாட்களுக்குமுன் சுட்டுக்கொல்லப்

பட்டார். அந்தப் படுகொலை ஜெர்மன் நாஜிக் கக்ஷிக்காரர்களால் தூண்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. பட்டப் பகலிலே நடுவீதியில் பிரதம மந்திரியின் காரை மறித்து, நாலைந்து கார்கள் வளைத்துக்கொண்டு அவரையும் அவர் தோழர்களையும் சுட்டு வீழ்த்துவதென்றால் அது படுமோசமான படுகொலை என்றுதான் சொல்லவேண்டும்.

காலம் சென்ற பிரதம மந்திரி இப்படி சுட்டு வீழ்த்தப்பட்டதின் காரணம் என்ன? ருமேனியாவில் நாஜிக் கக்ஷிக்காரர்களுக்கு சாதகமாய் இருக்கக்கூடிய "அயரன் கார்ட்ஸ்" (இரும்புக் காவலாளிகள்) என்ற கூட்டத்தை தலையெடுக்கவொட்டாமல் அடித்து வீழ்த்திவிட்ட பாவத்தைத் தான் அவர் செய்தார். இது ஜர்மன் நாஜி கக்ஷிக்காரர்களுக்கு பிடிக்குமா? போலந்தை நாசமாக்கி, ஜர்மன் சேனை ருமேனிய எல்லைப்புறத்திற்கு வந்ததும், நாஜிகளுக்கு விரோதமான பிரதம மந்திரியை ஒடு கிளப்பிவிட வேண்டும் என்று நாஜி கக்ஷிக்காரர்கள் எண்ணியதில் ஆச்சர்யமே இல்லை.

ருமேனிய கோதுமையும் மண்ணெண்ணெய்யும் ஜர்மனிக்குத் தேவை. ஆகவே ருமேனிய அரசாங்க நிர்வாகிகள் ஜர்மனிக்கு சாதகமாக இருப்பவர்களாக இருந்தாலன்றி, ஹிட்லரின் நோக்கம் பலிப்பதற்கு இடமில்லை. ஆகவே ஜர்மனிக்கு விரோதமாக இருந்த பிரதம மந்திரியை கொன்று விட்டால், தங்கள் காரியம் எளிதில் நிறைவேறிவிடும் என்று பகற்கனவு கண்டு கொண்டிருந்த நாஜிக் கக்ஷிக்காரர்களின் கனவில் இடி விழுந்தது மாதிரி ஆகிவிட்டது.

ஏனென்றால் இந்த படுகொலைக்குப் பிறகு ருமேனியாவில் பல தரப்பட்ட கக்ஷிகளும் ஒன்று சேர்ந்து, ஜர்மனிக்கு விரோதமான கிளர்ச்சி செய்து, காலம்சென்ற பிரதம மந்திரியின் கொள்கையை ஆதரித்து, அவருக்கு நன்றி பாராட்டுவதாக சொல்லப்படுகிறது. இது உண்மையாகத் தான் இருக்கவேண்டும்.

போர்ச் செய்திகள்

சென்ற ஐரோப்பிய மஹா யுத்தத்தில் உண்மையான போர்ச் செய்திகள் அநேகமாக சரியான காலத்தில் வந்ததே இல்லை. உண்மை சமாச்சாரங்கள் குதிரைக் கொம்புகளைப் போல அபூர்மாகப் போய்விட்டன. ஆனால் இந்த யுத்தத்தில் செய்திகள் கூடுமான வரையில் நம்பத் தக்கதாகவே வெளி வருகின்றன.

மேலும் பார்லிமெண்டு மஹா சபை அடிக்கடிக் கூடி அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து சரியாக தனது கடமையைச் செய்து வருவதைக் குறித்து நமக்கு பெரு மகிழ்ச்சி உண்டாகிறது.

கடற்படை இலாகாத் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் போர் ஆரம்பமானது முதல் கடற்படைச் சம்பந்தமான நிகழ்ச்சிகளை தொகுத்துக் கூறி இருக்கிறார். அநேக பிரிட்டிஷ் கப்பல்கள் போய்விட்டன என்பதை அவர் மறைக்கவில்லை. இதுதான் சரியான முறை. பொய்யைச் சொல்லி பிரசாரம் செய்து ஜனங்களுக்கு உற்சாகத்தையும் தைரி

யத்தையும் ஊட்டப் பார்ப்பது பயன் தரக்கூடாத வேலையாகும்.

வின்ஸ்டன் சர்ச்சில் செய்ததைப்போலவே பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் அவர்களும் அடிக்கொரு தடவை போரைப் பற்றி விரிவாக விமர்சனம் செய்து வருகிறார். பிரிட்டனுடைய கொள்கை இன்னது, யுத்தம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? போர் எவ்வளவு காலம் நீண்டுகொண்டு போகலாம்? யுத்தத்தில் இன்னென்ன ஏற்பாடுகளை கைக்கொள்ளுவதாக இருக்கிறது, என்பவைகளைப்பற்றி பிரதம மந்திரி தெளிவாக சொல்லுகிறார்.

இந்தப் போரில், இந்த புதிய முறையை நாம் மிகுதியும் பாராட்டுகின்றோம். உண்மையைச் சொன்னால் உடல் ஒரு நாளும் நடுங்காது. அப்படி உடல் நடுங்குமானால், அந்த உடல் உலகில் இருப்பதற்கு தகுதி பெற்றதல்ல.

போர் முனையில்

செப்டம்பர் 20உ

போலந்தைப் பற்றிய வரையில் யுத்தம் முடிந்து விட்டாலும், மகாயுத்தம் இன்னும் மும்முரமாகவே நடக்கும். ஜெர்மனி, ரஷ்யா இருவருமாகச் சேர்ந்து போலந்தைக் கொன்று விட்டார்கள். ஆனால் ஜெர்மனி, இங்கிலாந்து, இருவரும் யுத்தத்தை நிறுத்தப் போவதில்லை. 'ஹிட்லரிசம்' நாசமாகப் போகும் வரையில், ஒரு கை பார்த்து விடவதென்றே அவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

'முடிவான வெற்றியைக் காணும் வரையில் போர் செய்வதற்கு வேண்டிய பணத்தையும், படைகளையும், பிரான்ஸ் பொருட்படுத்தாது'—என்று பிரான்ஸ் மந்திரி சபை தீர்மானித்திருக்கிறது.

மேலும் ஹிட்லரின் நேற்றைய இடிமுழக்கத்தைக் கேட்டு பிரிட்டன் பயந்து விடவில்லை என்றும், அதனால் 'ஹிட்லரிச'த்தை ஒழிக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பிரிட்டன் கூட்டாளிகள், தங்கள் வேலையிலிருந்து பின் வாங்கிவிடமாட்டார்கள் என்றும், சேம்பர்லேன் பதிலுக்குப் பதில் இடிமுழக்கம் செய்தார்.

பெல்ஜிய, டச்சு எல்லைப் புறங்களிலிருந்து பல கதைகள் வந்து கொண்டிருக்கின்றன. டச்சு எல்லைப் புறத்திலுள்ள காடுகளில் ஆயிரக் கணக்கான ஜெர்மனியர் ஒளிந்துகொண்டு, அந்த எல்லைக்குள் போவதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்.

போலந்தில், தான் முந்திய போரில் இழந்த இடங்களை எல்லாம் ரஷ்யா பிடித்துக் கொண்டு சோவியத் முறைப்படி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

வார்சாவுக்கு மேற்கே நடந்த பயங்கரமான யுத்தத்தில் லட்சம் பேர்களுக்குமேல் போலிஷ்காரர்கள் கைதியாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஜர்மன் அறிக்கையொன்று கூறுகிறது. இவ்வளவு கோரமான யுத்தம் இதுவரையில் நடந்ததே இல்லையாம்.

செப்டம்பர் 21உ

ருமேனியாவின் பிரதம மந்திரி காலினஸ்கு நடுரோட்டில் சுடப்பட்டு, இறந்து விட்டார் என்ற செய்தியை ருமேனிய கவர்ன்மெண்டு அறிவிக்கிறது. பாஸிஸ்ட் கட்சியினராகிய நாஜிகளிடத்திலும் இரும்புப் படையினரிடமும் கொஞ்சமும் அனுதாபம் காட்டப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்தியதுபோல, கரோல் மன்னர் இவரைச் சென்ற மார்ச் மாதம் பிரதம மந்திரியாக நியமித்தார்.

கெபெல்ஸ் உயிருடன் இருக்கிறார் என்பது அவர் பெர்லினில்

நிருபர்களுக்குப் பேட்டி யளித் திருப்பதிலிருந்து தெரிகிறது. மேற்கே முன்னேறி வந்து கொண்டிருக்கும் ரஷ்யத் துருப் புக்களை இன்று ஜெர்மன், துருப் புக்கள் சந்தித்தன.

ஜெர்மன்-பெல்ஜிய எல்லையில் ஜெர்மன் துருப்புக்கள் வந்து குவிகின்றன என்ற வதந்தியை பெல்ஜிய சர்க்கார் செய்தி ஸ்தாப னம் அறிவிக்கிறது.

மேற்கு யுத்த முனையில் மொத் தத்தில் 'இன்று அமைதியே யென்றும்,' ஸார் பிரக்கனுக்குத் தெற்கே ஜெர்மன் பீரங்கிகள் பிரயோகிக்கப்பட்டன என்றும், பிரஞ்சு யுத்த சபை அறிக்கை யொன்று கூறுகிறது. ஸீக்பிரெட் அரணில் ஒரு கோட்டைக்கே, ஆபத்து வந்துவிட்டதாம்.

செப்டம்பர் 22உ

போலந்து முழுவதையும், ஜெர் மனியும் ரஷ்யாவுமாகப் பங்கு போட்டுக் கொள்ளுகின்றன. ரஷ் யாவின் பாகத்திற்குப் பெரிய துண்டு விழுந்திருக்கிறது. வார்சா வும் பிரிக்கப்படுகிறது.

ருமேனிய பிரதம மந்திரியின் கொலையில் சம்பந்தப்பட்ட 82 பேர்கள் சுடப்பட்டார்கள். புது பிரதம மந்திரி நியமிக்கப் பட்டார். அவர், முன்பு யுத்த மந்திரியாக இருந்த அர்க்கிஸீனு என்பவர்.

ஹிட்லர் வார்சாவுக்கு அருகி லுள்ள போர் முனைக்கு விஜயம் செய்து, பிறகு தலைமை காரியால யத்திற்குத் திரும்பினர்.

செப்டம்பர் 23உ

போலந்தில் யுத்தம் செய்து மாண்டவர், காயமடைந்து உப யோகமற்றுப் போனவர்கள், இவர்களுடைய மொத்தத் தொகை லட்சத்து ஐம்பதினயி ரம் பேர் என்று பிரஞ்சு சர்க்கார் விளம்பர இலாகா தலைவர் அறி வித்தார்.

முன்னேறிய செஞ்சேனையிடம் 60 ஆயிரம் போலிஷ் வீரர்கள் சரண் புகுந்தார்களென்றும், இது வரையில் மொத்தம் லட்சத்து இருபதினயிரம் போலிஷ் சோல் ஜர்களும், 380 பீரங்கிகளும், 1400 மிஷின் பீரங்கிகளும் பிடி பட்டன வென்று சோவியத் ராணுவ அறிக்கை கூறுகிறது.

மேற்கு முனையிலிருந்து ஸீப் ரிட்ஜ் அரணுக்கு முன்னல் பிரஞ் சுத் துருப்புகள் முன்னேறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

துருக்கியும் ரஷ்யாவும் ஒரு பரஸ் பர உதவி உடன்படிக்கை செய்து கொள்ளும் உத்தேசத்தோடு, மாஸ்கோவுக்கு துருக்கியின் வெளிநாட்டு மந்திரியும் இன்னும் மூவரும் சென்ருர்கள்.

பாஸிஸ்ட் தலைவர்கள் கூட்டத் தில் பேசும்போது, முசோலினி, தான் நடுநிலைமை வகிக்கத்தான் போவதாக அறிவித்தார். ரஷ் யாவை பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து கண்டிப்பதைக் கண்டு முசோலினி வருத்தப்பட்டார். ஐரோப்பிய யுத்தம் இன்னும் ஆரம்பமாகவில்லை என்றும், அப் படிப்பட்ட ஒரு மகாயுத்தத்தைத் தடுத்து விட இன்னும் நேரமிருக் கிறது என்றும் அவர் தெரிவித் தார்.

செப்டம்பர் 24உ

ஹங்கேரியின்மேல் பாய்வதற்கு ஜெர்மனி தயாராகிறது என்ற

ஒரு ஆதாரமற்ற செய்தி லண்டன் வரைக்கும் வந்து உலவுகிறது. ருமேனிய எண்ணெய்ச் சுரங்கங்களின்மேல் ஜெர்மன் பார்வை விழுந்துவிட்டது.

ஒரு பிரிட்டிஷ் புகைக் கப்பல், ஜெர்மன் சப்மரீனுல் மூழ்கடிக்கப்பட்டது.

போலந்து சாக அடிக்கப்பட்டு, பங்கு போட்டுக்கொள்ளப்பட்டாலும் இன்னும் வார்சாவில் போலிஷ் ஜனங்கள் படும் கஷ்டம் குறையவில்லை. கடந்த இருபத்து நான்கு மணி நேரமாக குண்டு வீச்சுக்கள் நடந்ததாம். பலர் இறந்தனர். பலர் காயமாகப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சோவியத் கவர்ன்மெண்டின் மேல்சபை பல இடங்களிலிருந்தும் செஞ்சேனையைத் தயாரிக்கிறது. வெளி நாட்டு யுத்த நிலையால்தான் இது அவசியமாயிற்றென்றும், இந்த யுத்தத்திற்குப் பிறகு அவரவர்கள் அவரவர்களுடைய பழைய வேலைகளுக்குப் போய்ச் சேர்ந்து விடுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை கவர்ன்மெண்ட் செய்து விடுமென்றும் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

செப்டம்பர் 25 உ

ஸிஜ்பிரீட் அரணை நேருக்கு நேர்நின்று பிரஞ்சுத் துருப்புகள் தாக்க ஆரம்பித்துவிட்டன. பிரஞ்சு 40 மைல் முன்னணி மிகவும் பலமாக ஜெர்மன் அரணைத் தாக்குகிறது. பிரஞ்சு பீரங்கிகளுக்கு எதிரில் ஜெர்மனி பின் வாங்கிற்றும்.

நார்வே தேசத்துக் கருகில் மிகப் பெரிய கப்பல் சண்டையொன்று நடந்தது. பீரங்கிகள் வெடித்த வேகத்தில் வீடுகள்கூட அதிர்ந்தன. பல சண்டைக் கப்பல்கள் சமுத்திரத்தில் சேர்ந்து காணப்பட்டன. ஆனல் விவரங்கள் தெரியவில்லை.

பிரஞ்சு விமானப் படைக்கும் ஜெர்மன் ஆகாயச் சண்டை கப்பல்களுக்கும் நடந்த கடுமையான போராட்டத்தில், பிரஞ்சு விமானங்களின் அழுத்தம் நன்ருகத் தெரிந்தது. ஜெப்ளின் என்னும் ஆகாய விமானங்கள் செய்யும் உற்பத்தி சாலையின்மேல் வெடி குண்டு வீச்சு மணிக் கணக்காக நடந்தது.

செப்டம்பர் 26உ

யுத்தத்தில் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்காவிலிருந்து சாமான்கள் ஏற்றுமதி செய்யப்படுவதைக் குறித்து பல திட்டங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. கடன் வியாபாரமே கிடையாதாம். சாமான்களை வாங்குபவர்கள் அவர்களுடைய கப்பலிலேயே கொண்டு போகவேண்டும். இதைப்போன்ற பல சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

போலிஷ் பிரசிடெண்டும் மொசிகியும், சிமிக்லிரீட்ஸும் ருமேனியாவில் கைதி செய்யப்பட்டிருக்கிறார்கள். பிரிட்டன் அடைந்த கடல் படை வெற்றிகளைப்பற்றி சர்ச்சில் பார்லிமெண்டில் பேசினர்.

மேற்கு முன்னணியில் பீரங்கிகள் இன்னும் மும்முரமா வேலை செய்து கொண்டிருக்கின்றன. முன்னைவிட இப்பொழுது ஜெர்மனி சளைத்திருக்கிறதாம்.

செப்டம்பர் 27உ

சார்பிர்க்கனுக்கு அருகில் உள்ள பிரதேசங்கள் முழுவதும் காலி செய்யப்பட்டது. சீப்ரிட்ஜ் அரணை மிகவும் கடுமையாகத் தாக்கி மிக்க மோசமான நிலையில் கொண்டு வந்து பிரஞ்சுத் துருப்புகள் வைத்து விட்டன என்று பிரஞ்சு கவர்ன்மெண்ட் செய்தியொன்று கூறுகிறது.

ஹிட்லர், கோயரிங், ரிப்பன்டிராப் எல்லோரும்கூடி 25-ம் தேதியன்று பேசினார்கள்; அதற்குப்பிறகும் பலயோசனைகள் நடந்தன. ரிப்பன்டிராப் மாஸ்கோவுக்கு இன்று பிரயாணமாகிப் போய்ச் சேர்ந்தார்.

வார்ஸா சரணாகதி யடைவதற்கு ஒப்புக் கொண்டது என்று வார்சா செய்தியே ஒன்று கூறுகிறது. ஆனால் அது ஊர்ஜிதப்பட வில்லை.

நேற்று சாயங்காலம் 'வடக்கே பிரிட்டிஷ் கப்பல் படையை, ஜெர்மன் விமானப்படை தாக்கிற்றும். ஆனால் ஒரு பிரிட்டிஷ் கப்பலுக்குக்கூட ஆபத்தில்லை என்று சார்ச்சில் இன்று கூறினர். இரண்டரைக் கோடிக் கதிகமான போலீஷ் தங்கத்தை ருமேனிய கவர்ன்மெண்டார் பறிமுதல் செய்து விட்டார்கள்.

சோவியத் கவர்ன்மெண்ட் ருமேனியாவின் நடுநிலைமையை மதிக்கும் என்று மறுபடியும் ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறார்கள். மேற்கு முனையில் பீரங்கி யுத்தம் மிக மும்முரமாக நடக்கிறதென்று ஒரு செய்தி கூறுகிறது.

மிளகாய்ப்பொடி அர்ச்சனை

வ. ரா.

சாக்கிய நாயனார் தினந்தோறும் சிவலிங்கத்தின்பேரில் கல்லை விட்டு எரிந்து, கடைசியில் தமது கண்களை பரமசிவனுக்குக் கொடுத்து, தமது பக்தியைத் தெரிவித்துக்கொண்டார். பரமசிவன்பேரில் மன்மதன் தொடுத்த மலர்க்கணையினால், பரமசிவனுக்குக் கோபம் வந்து, நெற்றிக் கண்ணைத் திறந்து, மன்மதனைப் பொசுக்கி எறிந்தார். ஆனால் சாக்கிய நாயனார் எரிந்த கல், பரமசிவனுக்கு உவப்பாயிருந்ததாம். எல்லாவற்றிற்கும் மனது சுத்தமாயிருந்தால் போதும் என்கிறார்களே, அது உண்மைதான் போலிருக்கிறது.

ஈசுவரன்பேரில் பக்தி கொண்ட சாக்கிய நாயனார் இந்த மாதிரி தமது பக்தியை வெளிக் காண்பித்துக்கொண்டார். தமிழ் இலக்கியத்தின்பேரில் அபரிமிதமான பக்தி கொண்ட சாத்தனார் என்ற பெரும் புலவரின் தலையில் எப்பொழுதும் சீ வடிந்துகொண்டிருக்குமாம். அவருக்கு சீத்தலை சாத்தனார் என்று பெயர். யாராவது கெட்ட நூலைக்கொண்டு போய்க் கொடுத்து, இந்த நூல் எப்படியிருக்கிறது என்று சாத்தனாரைக் கேட்டால், அந்த நூலின் ஆபாசத்தை எளிதிலே உணர்ந்துகொள்ளும், சாத்தனார், எழுத்தாணியால், தன் தலையில் நறுக்கென்று குத்திக்கொள்ளுவாராம். இது ஒரு விசித்திரமான பக்தி.

சாத்தனார் தமிழ் இலக்கியத்தை அரும்பாடுபட்டுக் காப்பாற்றினார். சாக்கிய நாயனார் பக்தியையே காப்பாற்றினார். ஆனால் இவர்களுடைய பக்தி, ஸ்ரீரங்கம் மிளகாய்ப் பொடி அர்ச்சனை பக்திக்கு ஈடாகாது என்பது என் எண்ணம்.

சட்டி அரவணை நைவேதனத்தால், ஸ்ரீ ரங்கநாதஸ்வாமிக்கு, எங்கே அஜீரணம் ஏற்பட்டுவிடப் போகிறதோ என்று அவருக்கு மிளகு கிஷாயமும் கொடுப்பது வழக்கம். ஸ்ரீ ரங்கநாதனுக்கு சலவை வண்ணான் உடுப்பிலேதான் பிரியம் என்று பக்தர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கீரைச் சுண்டல், அவருக்கு ரொம்பவும் பிடிக்குமாம். ஸ்ரீ ரங்கநாதன் எப்பொழுதுமே, உல்லாசமானவர்.

எத்தகைய திட்டங்களுக்கும் கட்டுப்பட்டவரல்ல ஸ்ரீ ரங்கநாதன். தமக்குத் தேவை என்று தோன்றியதை, பட்டர் முகமாகத் தெரிவித்துக்கொண்டு, காரிய சித்தி செய்துகொள்ளுவதில்,

ஸ்ரீ ரங்கநாதனுக்கு இணையாக யாரையும் சொல்ல முடியாது.

ஹரிஜன குடும்பத்தில் அவதரித்த திருப்பாணாழ்வார் தமது பக்தி மேலீட்டால், ஸ்ரீ. ரங்கத்துக்குள்ளே போகாமல், வெளியே நின்று ஸ்ரீ ரங்கநாதனை ஸ்தோத்திரம் செய்துவிட்டு, தமது வீட்டுக்குப் போய்விடுவாராம். "எனது எல்லையை மிதிக்க அஞ்சுகிற திருப்பாணனை தோளில் தூக்கிக்கொண்டு, சகல மரியாதையையும் காண்பித்து, என் சன்னதிக்கு அவரைக் கொண்டு வாரும்" என்று பட்டருக்குக் கட்டளையிட்ட ஸ்ரீ ரங்கநாதன், இன்றைக்கும் ஸ்ரீ ரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கிறார்.

ஆலிலையில் துயிலும் மகாவிஷ்ணு தூக்கிப் போயிருக்கலாம். பள்ளி கொண்ட திருக்கோலத்தில் அமர்ந்து, பக்தர்களுக்கு காட்சி அளிக்கும் ஸ்ரீ ரங்கநாதன், உறங்கவில்லை என்பது நிச்சயம்.

சிலர் மிதமிஞ்சிய பாபம் செய்து, ஈசனுடைய கருணைக்குப் பாத்திரமாகிறார்கள். சிலர் எல்லையில்லாத புண்ணிய கருமங்களைச் செய்து, ஈசனது திருவுள்ளப் பார்வைக்கு இலக்காகிறார்கள். "உனக்கு எதிரியாயிருந்தால், உன்னை ஒரு நிமிஷமும் மறக்க முடியாது. ஆகவே எங்களுக்கு எளிதிலே உய்வு உண்டாகும்" என்று சொன்னார்கள் இரண்டு பக்தர்கள்.

இதைப் போலவே, ஸ்ரீரங்கத்தில் மிளகாய்ப் பொடி பக்தர்கள் செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவ்வளவு மிளகாய்ப் பொடியை அர்ச்சனை செய்ததால், ஸ்ரீரங்கத்தில் மிளகாய் வற்றல் விலை ஏறித்தான் போயிருக்கவேண்டும். நல்ல, இருட்டுகிற சமயம் பார்த்து, ஸ்ரீரங்கநாதனது பக்தர்களும் பக்தைகளும், கூட்டத்தில் மிளகாய்ப் பொடியைத் தூவி, ரங்கநாதனுக்கு யாதொரு ஆபத்தும் வராமல் காப்பாற்றினார்களே! இனி எழுதப் போகும், ஸ்ரீரங்க மாகாத்மிய புராணத்தில், மிளகாய்ப் பொடி அர்ச்சனை காதையும் கண்டிப்பாய் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

கோயில் கொட்டாரத்தில் உலக்கை பிடிக்கிற பெண்பிள்ளைகள் முதற்கொண்டு பல பெண்மணிகளுக்கு ஆவேசம் வந்து, ஸ்ரீரங்கநாதனைக் காப்பாற்ற வேண்டிய கட்டமும் கடமையும் ஏற்பட்டு விடுமானால், அது மகத்தான ஆச்சரியமல்லவோ?

'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற வாக்கியம் பட்டனத்தாரின் மனதை அடியோடு மாற்றி, அவரைத் துறவியாகச் செய்து விட்டது. தெருவிலே பாடிக்கொண்டு போகிற பண்டாரத்தின் பாட்டினால், சிலர் திட வைராக்கியம் அடைந்து விடுகிறார்கள். மந்திரி டாக்டர் ராஜன் ஸ்ரீரங்கத்துக்கு விஜயம் செய்யப் போகிறார் என்று கேள்விப்பட்ட வுடனே, இந்த மாதரசிகளுக்கு பக்தி ஆவேசம் பொங்கி வழிந்தது, கலிகால அற்புதங்களில் ஒன்று என்று தான் சொல்லவேண்டும். மிளகாய்ப் பொடி பிரயோகம் செய்தது உண்மை. பார்க்க வந்தவர்களின்

சண்கள் கோவப்பழமாகச் சிவந்து போனது உண்மை. ஸ்ரீ கொடியாலம் வா. சீனிவாசய்யங்காரின் உருப்புகள் 'டார்டாராய்' கிழிந்து போனது உண்மை. டாக்டர் ராஜன் கோயிலுக்குள் அகப்பட்டுக் கொண்டு வெளியே வர முடியாமல், 2½ மணி நேரம் கோவிலுக்குள்ளாகவே நிர்ப்பந்தமாக இருக்க வேண்டிய ஏற்பட்ட நிலைமை உண்மை.

மிளகாய்ப் பொடி அர்ச்சனைக்கு, இவ்வளவு வேகமாக, இத்தனை பலன்கள் கிடைத்ததைப் பற்றி, யார் தான் சந்தோஷப்படமாட்டார்கள்?

திருப்பாணாழ்வாரைத் தோளில் தூக்கிக்கொண்டு வரவும் என்று பட்டர் முகமாக திருவாய் மலர்ந்தருளிய அதே ஸ்ரீரங்கநாதன, 'மிளகாய்ப்பொடியதைத் தூவு' என்று இப்பொழுது கட்டளையிட்டார்! ஸ்ரீரங்கநாதனுடைய கௌரவம் துளிக்கூடக் கெடக்கூடாது என்ற திடநம்பிக்கையுடன் வேலை செய்த மிளகாய்ப் பொடி பக்தர்களுக்கு, ஸ்ரீரங்கநாதன் தமது விருப்பத்தை எப்படியேனும் தெரிவித்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால், அவர்களுக்கு மிளகாய்ப்பொடி நினைவு எப்படி வரக்கூடும்! எப்பொழுதும், இடைவிடாமல், ஸ்ரீரங்கநாதன் பேரிலேயே நினைவையும் பக்தியையும் செலுத்திக் கொண்டிருக்கும் அன்பர்களுக்கு, திடீரென்று ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனி மறந்துபோய், மிளகாய்ப்பொடி தேவதை பிரசன்னமாவதென்றால், அதிலே ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டும்!

அன்று பட்டர் மூலமாக தமது இச்சையைத் தெரிவித்துக் கொண்ட ஸ்ரீரங்கநாதன், இன்றைக்கு யார் மூலமாக, தமது மிளகாய்ப்பொடி அர்ச்சனை விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டாரோ தெரியவில்லை. அந்த மர்மம் தெரிந்துபோனால், ஸ்ரீரங்க ஸ்தல புராணத்தில், மிளகாய்ப் பொடி அர்ச்சனை அத்தியாயத்தை, தெளிவாகச் சேர்த்து எழுதிவிடலாம்.

ரிஷி மூலம், நதிமூலம், மிளகாய்ப் பொடி அர்ச்சனையின் மூலம்—இவைகளை விசாரிப்பது கூடாதுதான். ஆனால், ஒரே ஒரு சிறு சந்தேகம் எனக்கு. யார் பேரில் வேண்டுமானாலும் மிளகாய்ப் பொடியை அர்ச்சனை செய்யலாம் என்பது ஸ்ரீரங்கநாதனது ஆக்கினையா? அல்லது டாக்டர் ராஜன் பேரில் அர்ச்சனைக்காக காத்துக்கொண்டிருந்த மிளகாய்ப் பொடி, காற்றடித்து, கூட்டத்தி லிருந்தவர்களின் கண்களிலே போய் அடைக்கலம் புகுந்து கொண்டதா?

நான் சந்தேகத்தை தெரிவித்துக் கொள்ளலாம். ஆனால் சந்தேக நிவர்த்தியை யார் செய்யப் போகிறார்களோ; அது ஸ்ரீரங்கநாதனுடைய திருவுள்ளம்!

கருணைக் கடல்

து. நாராயணன்

இந்த சம்பவம் தென் ஆப்பிரிக்காவில் நடந்தது. காந்திஜி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் தன் தோழரொருவருடன் திரும்பி வந்துகொண்டிருந்தார். சிறிது தூரம் சென்ற உடன், ஒருவன் திடீரென்று பக்கத்திலிருந்த சந்திலிருந்து ஓடிவந்து காந்தியின் பாதங்களில் வீழ்ந்தான். காந்தி அவனை எழுப்பித் தட்டிக்கொடுத்துச் சிறிது தூரம் பேசிக்கொண்டே சென்றார்.

தோழருக்கு இதெல்லாம் ஒன்றும் விளங்கவில்லை. அவர் ஆச்சரியத்துடன் விழித்துக்கொண்டே நின்றிருந்தார். அவருக்கு உள்ளூர பயங்கூட!

காந்திஜி திரும்பி வந்தார். உடனே அவருடைய தோழர், "என்ன விசேஷம்? அந்த மனித்னுக்கு என்ன? அவன் ஏன் உங்கள் காலில்விழுந்தான்?" என்று சரமாரியாக கேள்விகளை, அடுக்கிக் கொண்டே போனார்.

காந்தி இதுகாறும் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தியை எடுத்தார். தோழர் பயம் உச்ச நிலையை அடைந்தது! காந்தி சொன்னார் :—"அந்த நல்ல மனிதன் என்னை இக்கத்தியால் குத்திக் கொல்வதற்காக ஒளிந்துகொண்டிருந்தானாம். என்னைத் தூரத்தில் பார்த்ததுமே, அவன் மனம் சிறிது வாட்டமுற்றதாம். நான் நெருங்கி வரவர, அவன் மனம் அறவே மாறிவிட்டதாம்; அவன் துணிச்சலெல்லாம் பறந்து ஓடிவிட்டதாம்; நான் அவ்வளவு கேட்டவன் அல்ல என்று தீர்மானித்தானாம். உடனே மனம் வருந்தி, விஷயத்தை என்னிடம் சொல்லி மன்னிக்கும்படியாகக் கேட்டான். வேறொன்றும் பெரிய விஷயமல்ல!"

உடனே தோழர் "எங்கே அவன்? போலீசுக்குத் தெரியப்படுத்துவோம், வாருங்கள்." என்று கர்ஜித்தார். அவர் குரலில் கோபமும் பயமும் தொனித்தன.

காந்தி உடனே, "அவன் என்னைக் கொன்றிருந்தால் கூட, அவனுக்கு, ஒன்றும் நேர்ந்திராது. அவன் சுலபமாகத் தப்பித்துக் கொண்டிருப்பான். அப்படியெல்லாம் செய்யாமல் என்னை விடுவித்ததற்குச் சன்மானம் அவனைத் தண்டிப்பதா? வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு மேலும் கூறினார். நீ அதைப் பற்றி ரொம்பவும் புண்படுத்திக் கொள்ளாதே. வருவது வந்துதான் தீரும் என்றார் காந்திஜி. இந்த பதில் அந்த நண்பருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஐரோப்பிய அரண்கள்

சென்ற வாரத்தில் மாகினட், சீக்பிரீட் அரண்கள் அமைப்பைப் பற்றி எழுதி இருந்தோம். இப்போது பிரஞ்சுப் படைகள் முன்னேறி ஜெர்மானிய சீக்பிரீட் அரண்களைப் பல இடங்களில் புலமாகத் தாக்கி வருவதாலும், போலந்து யுத்தம் முடிந்து ஜெர்மன் படைகள் இந்த சீக்பிரீட் அரணைப் பாதுகாப்பதற்குக் கவனம் செலுத்தவேண்டி வந்துவிட்டதாலும், இந்த இரண்டு எல்லைப்புற அரண்களைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

இப்போது ஐரோப்பாவில் இரும்பு, காங்கிரீட் முதலியவைகளால் ஆன எல்லைப்புற கோட்டைகள் அமைப்பதின் முக்கியத்வம் வெகுவாகக் கருதப்படுகிறது. இவைகள் எதிரிகளின் போக்கையும், ராணுவ நடவடிக்கைகளையும் முன்னேற விடாமல் செய்யவோ, அல்லத் வேறு வழிகளில் திருப்பி விடவோ நல்ல தடைகளாக உபயோகப்படுகின்றன.

ஐரோப்பாவில் அநேக தேசங்களில் இந்த மாதிரி கோட்டைகள் அமைத்திருந்த போதிலும், பிரஞ்சு தேசஎல்லைப்புற மாகினட் அரணும், ஜெர்மன் ஸீக்பிரீட் அரணும்தான் சிறந்தவை.

இப்போது ஐரோப்பாவின் ராணுவ மன்துகள் எல்லாம், எந்த விதமாக இந்தக் கோட்டைகளை தகர்த்து எறிந்து கொண்டு போக முடியுமென்றே கவனம் செலுத்துகின்றன. பிரஞ்சு அரணோடு ஒட்டி அடுத்து இருக்கும் பெல்ஜியம், நெதர்லாந்து முதலிய தேசங்களும் இந்த மாதிரி பாதுகாப்புகள் செய்திருக்கின்றன.

பெல்ஜியம், நெதர்லாந்து முதலிய தேசங்கள் சிறியதானதால், மாகினட் அரணை மீறி நுழைய சக்தி இல்லாமல், ஜெர்மனியார், இந்தச் சின்ன தேசங்களுக்குள் நுழைந்து பிரான்ஸிற்குள் நுழைந்துவிடலாமென எண்ணக் கூடும். போன யுத்தத்தில் பெல்ஜியத்திற்குள் நுழைந்து வந்த மாதிரி. ஆகவே அந்த மாதிரி எதிர்ப்பையும் சமாளிக்கவேண்டி, பிரஞ்சு—பெல்ஜிய எல்லைப்புறத்திலும்கூட தொடர்ந்து, டன்கிர்க் என்ற கடற்கரை நகரம் வரை பிரான்ஸ் மாகினட் அரணை வகுத்திருக்கிறது. ஆகவே ஜெர்மன் மேற்கு எல்லைப்புறத்திலிருந்து பிரான்சிற்குள் படையெடுத்து வருவது ரொம்பவும் சிரமமாக இருக்கும். குட்டி பெல்ஜியம் செய்திருக்கும் கோட்டை ஏற்பாடும் பலமானதாகத்தான் இருக்கிறது.

அதே மாதிரி ஆல்ப்ஸ் மலை நடுவில் இயற்கை அரணை இருந்த போதிலும், இத்தாலியும் படையெடுத்துவரக் கூடுமாதலால், பிரஞ்சு—இத்தாலி எல்லைப்புறக் கடைசிவரை மாகினட் அரண்

நீண்டு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. மத்தியதரைக் கடலோரம் வரை வருகிறது.

முதலில் 200 மைல் தூரத்திற்கே ஜெர்மன் எல்லைப்புறத்தில் மட்டும் கட்ட ஆரம்பித்து, பிறகு இவ்வளவு தூரத்துக்கு, மேலே சொன்ன எல்லைப்புறங்கள் தவிர, பிரஞ்சு எல்லையில் ஜெர்மனிக்கு தெற்கேயும், இத்தாலிக்கு வடக்கேயும் உள்ள ஸ்விட்ஜர்லாந்து எல்லையிலும் தொடர்ந்து கட்டி இருக்கிறது. இந்த சின்ன தேசங்களால் பிரான்சிற்கு ஆபத்து இல்லை என்றாலும், மற்ற வல்லரசுகள் அவைகளின் பலஹீனத்தை சாதகமாக கொண்டு சூக்ஷமமாக அந்தப் பிரதேசங்கள் வழியாக, வரப் பார்க்கும் என்ற சந்தேகம், பயம்தான் இவ்வளவு நீண்ட அரணை பிரான்ஸ் கட்டத் தூண்டியது.

பிரஞ்சு மாகினட் அரண் கட்ட ஆரம்பிக்கப்பட்டது 1925-ல். இன்றைக்கு 14 வருஷம் ஆகிவிட்டது. இத்தனை வருஷங்களாக தொடர்ந்து கட்டியும் இன்னும் அது முடியவில்லை என்றால் பாருங்கள்! ஒரு மைல் தூரம் இந்த கோட்டை அமைப்புக்கு 20 லக்ஷம் டாலர்கள் என்றால் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு எவ்வளவு செலவாகி இருக்குமென்று பாருங்கள். இத்தனை வருஷமாகப் பிரான்ஸ் தன் பொக்கிஷத் திட்டத்தில் ஒருவித பாதகமும் சிக்கலும் ஏற்படாமல் கோடிக் கணக்கான டாலர்களை செலவழித்து இதைக் கட்டியிருக்கிறது.

இது ஒரு லைன் இல்லை. ஒரு பெரிய அகண்ட கோட்டை அமைத்த பரப்பு என்று தான் சொல்லவேண்டும். எல்லா கோட்டை அமைப்புகளும் ஆழத்தில் தான், தரை மட்டத்திற்கு வெகு கீழே. இதிலே யந்திரங்கள், சூழ்ச்சிக் கருவிகள் எவ்வளவோ இருக்கின்றன. ஒரு அங்குலத்துக்கு அங்குலம் நகருவது அவ்வளவு ஆபத்தாக இருக்குமாம். யந்திர சாதனங்கள் அவ்வளவு மாந்திரீக வேலைகள் செய்கின்றன இந்த காலத்தில்.

இந்த எல்லைப் புறத்தில் இந்த அரணுக்கு பின்னால் உள்ள பலப்படுத்தப்பட்ட நகரங்களை இந்த அரணோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே எல்லைக்குள்ளேயும் வெகுதூரம் வரையும் இந்த ஏற்பாடுகள் செய்திருப்பதாக தெரிகிறது. இந்த கோட்டைகளுக்கு பின்னால், விமானப்படைகள் இருக்குமிடமே தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதாம்.

எல்லாவற்றையும் விட ஜெர்மன், பிரஞ்சு எல்லைப்புறத்தில் அரண் அமைப்பு மிக்க பலம் கொண்டது. இதை ஜெர்மனி எதிர்ப்பதுகூட முட்டாள்தனம் தான் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். தரைக்கு 165 லிருந்து 200 அடிவரை ஆழத்தில் கட்டின கோட்டைகள், சூக்ஷ்ம பள்ளங்கள், வெளியே தெரியாத—ஆனால் உள்ளிருந்து குண்டுகளை பொழியக் கூடிய—பீரங்கிகள், கொத்தளங்கள், இன்னும் என்னெல்லாமோ?

காடு மேடு பள்ளங்களில் எல்லாம் ஏறிப்போகக்கூடிய 'டான்க்' என்ற ராக்ஷஸ பீரங்கி மோட்டார்கள் இருக்கிறதே, அதன்

போக்கைத் தடைசெய்ய, ஏற்ற வாறு, குறுக்கே தாறுமாறாகபதிந் திருக்கும் தண்டவாளங்கள் விசைக்கம்பி கிராதி அடைப்புகள், வெடிக்கும் சுரங்கங்கள், அகழிகள், வெளியே தெரியாதபடி மூடின பள்ளங்கள், இந்தமாதிரி ஒவ்வொரு அடிக்கும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கோட்டைகளுக்கும் பிரமாதமான ஏற்பாடுகள் தான். இந்த கோட்டைப் பக்கம் போகு முன்பே எச்சரிக்க தானாகசெய்து விடும் விசைகள், சத்தத்தை கிரஹிக்கும் கருவிகள் இன்னும் பல இந்த கோட்டைகள் ஒன்றிற்கு ஒன்று சம்பந்தம் கிடையாது. தனக்குத் தானே கவனித்துக் கொள்ளும். ஸ்விட்ஜர்லாந்து எல்லைப்புறத்தில் தான் இவ்வளவு பிரமாதமான ஏற்பாடுகள் கிடையாது. ஆனாலும் அவைகளும் பலம் வாய்ந்தவைதான். அங்கே மலைகளே நல்ல அரணாக அமைந்திருக்கின்றன.

இப்போது பெல்ஜிய கோட்டைகளும் வெகுபலம். மாகினாட் தோரணையில் கட்டப்பட்டிருக்கின்றன. ஜெர்மனி எப்போதும் அதற்குள் நுழையலாம் என்ற பயத்தில் நல்ல அரண் முஸ்தீப்பு, ஜெர்மன்—பெல்ஜிய எல்லைப்புறத்தில் செய்திருக்கிறார்கள்.

ஜெர்மன் சிக்பிரீட் அரண் 1936-ல் தான் கட்ட ஆரம்பிக்கப் பட்டது. இந்த அரண் நெதர்லாந்தின் எல்லைப்புறத்தை அடுத்து, பெல்ஜிய எல்லைப்புறத்தில் ஆரம்பித்து, ரைன் வழியே வந்து ஸ்விட்ஜர்லாந்தின் எல்லைப்புறத்தோடு வந்து முடிந்து, மடக்கி நிற்கிறது. மாகினாட் அரணைப் போலத்தான் இதுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதைவிட சிக்பிரீட் அரண் இன்னும் ஆழத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. எல்லைப் புறத்திலிருந்து அறுபது மைல் தூரம் உட்புறம் வரை, இந்த அரண் ஏற்பாடு செய்திருப்பதாக தெரிகிறது. எல்லா இடத்திலும் போல அதேவித சூழ்ச்சிகள். சூஸ்திரங்கள்தான். மாகினாட் அரணோடு போட்டி போடுகிறது. இதை தகர்த்து உள்ளே போவதும் சிரமம்தான். பாலங்கள் எல்லாம் சுரங்கம் வைக்கப்பட்டிருக்கின்றன. திடீரென வெடிக்கும். டாங்குகளை தடுக்க இவர்கள் புது வழி அமைத்திருக்கிறார்கள். தண்டவாளங்களுக்கு பதில் கான்கிரீட் கற்கள் போட்டிருக்கிறார்களாம். மாகினாட்டில் இருக்கும் இதர வகைகள் போல அமைக்கப்பட்டிருக்கின்றன எல்லைப் புறம் பூராவும்.

கடலிலிருந்து ஜெர்மனியை தாக்காமலிருப்பதற்காக வில்ம்ஸேவனிருந்து கீல் வரையில் அரண் ஏற்படுத்தி பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்த கீல் பிரதேசத்தில்தான் சமீபத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசி ஜெர்மன் கப்பற் படையை தாக்கின.

ஆளுக்குள் ஆளு; எத்தனை ஆளு!

சாம்பசிவன் ஒரு இளைஞன். அவனுக்கு வயது சுமார் இருபது இருக்கும். மற்றவர்களைப்போல, அவனும் படித்து 'பாஸ்' பண்ணினவன்தான். பாஸ் என்றால், சின்ன பாஸா? பெரிய பாஸ் பண்ணியிருக்கிறான். குழந்தை மணி சொல்லுகிறாப்போல, 'மானத்துக்கும் பூமிக்கும்' இருக்கே, அவ்வளவு பெரிய பரீட்சை பாஸ் பண்ணியிருக்கிறான்!

இவ்வளவு படிப்பு படித்திருக்கிறான் சாம்பசிவன். நல்ல புத்திசாலி என்று எல்லா இடத்திலும் அவனுக்கு மதிப்பு. பள்ளிக்கூடத்திலும் காலேஜிலுமாகச் சேர்ந்து, ஒரு பீரோ புஸ்தகங்கள் பரிசுகளாக அவன் அடைந்திருக்கிறான். என்ன நேர்த்தியான புஸ்தகங்கள்! அவைகளைப் பார்த்துக்கொண்டே யிருந்தால் போதும் என்று சொல்லும் படியாக, அவ்வளவு அழகாக அச்சிட்டிருக்கும் புஸ்தகங்கள்.

இந்த பீரோ புஸ்தகங்கள் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பீரோ புஸ்தகங்களையும் அவன் படித்திருக்கிறான். படித்தது எதையும் அவன் மறந்து போவதில்லை; அவ்வளவு உறுதியான ஞாபகசக்தி. எங்கேயாவது, பிரசங்கத்துக்குப் போனாலும், பிரசங்கியார் பேசியதை அப்படியே, திருப்பிச் சொல்லிவிடுவான். சுருக்கெழுத்து எடுத்தால், எவ்வளவு சரியாக இருக்குமோ, அவ்வளவு சரியாகச் சொல்லிவிடுவான்.

அவனுடைய ஞாபகசக்தி மட்டும் அவனுக்கு சிறப்பாக அமைந்தது என்று எண்ணவேண்டாம். எவ்வளவு சிக்கலான விஷயமாயிருந்தாலும், அதை வெகு எளிதிலே அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலும் அவனிடமிருந்தது. நல்ல தைரியசாலி. தேகக்கட்டும் அமைந்தவன். இப்பேர்ப்பட்ட லட்சணங்கள் அமைந்த சாம்பசிவன் ஒருநாள் தன் அறையில், கன்னத்தில் கையைவைத்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த யோசனைக்குக் காரணம் என்ன? எத்தனையோ இங்கிலீஷ் புஸ்தகங்கள் படித்துச் சுவைத்த சாம்பசிவத்துக்கு, திடீரென்று

தமிழிலே, ஒரு அபிமானம் உண்டாயிற்று. தமிழிலே அவனுக்கு சுலபமாக அர்த்தமாகக்கூடிய புஸ்தகம் தாயுமானவர் பாடல்கள் தான் என்று எண்ணிக்கொண்டு, அந்த புஸ்தகத்தைப் படித்தான்.

'எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும், என் இதயம் ஒடுங்கவில்லை' என்ற பாட்டை அவன் திருப்பித் திருப்பி படித்தான். "ஆகா! நான் எத்தனை புஸ்தகங்கள் படித்தும் என்ன பயன்? யான் எனும் அகந்தை எள்ளளவும் மாறவில்லையே? எதைக் கண்டாலும் எனக்கு ஆசை உண்டாகின்றதே! 'சித்த மிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' என்று தாயுமானவர் பாடுகிறாரே! அந்த சித்தத்தில் தெய்வம் இருக்குமானால், ஏன் இத்தனை ஆபாசமான எண்ணங்கள் அதில் தோன்ற வேண்டும்? 'பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ' என்று கடவுளை தாயுமானவர் கேட்கிறாரே. அது மாதிரி எல்லா மனிதர்களும் ஈசனிடம் முறையிட்டுக் கொள்ளத் தான் வேண்டும்" என்று என்ன வெல்லாமோ யோசித்துக் கொண்டிருந்தான்.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறம் அரிது" என்ற பாட்டை, வாய்க்குள்ளாகவே, அவன் பாடிக்கொண்டிருக்கையில், அவனுடைய சிநேகிதன் பிச்சப்பா, அவனிடம் வந்து சேர்ந்தான்.

பிச்சப்பா எப்படிப் பட்டவன் என்று கேட்கிறீர்களோ? அவன் சாம்பசிவனுக்கு நேர் எதிரிடை. அதிகமாகப் படிக்காதவன். 'அகட விகட சாமர்த்திய சாலி' என்று பாட்டிமார்கள் சொல்லுவார்களே, அப்பேர்ப்பட்ட பேர்வழி. குட்டியைத் தூக்கி நாயில் போட்டு, நாயைத் தூக்கி குட்டியில் போட்டு, எப்படியோ மாதம் நூற்றுக்கணக்கில் சம்பாதித்து வந்தான்.

பிச்சப்பாவுக்கு சாம்பசிவனுடைய படிப்பிலே ரொம்ப மரியாதை. சாம்பசிவனுக்கோ பிச்சப்பாவின் சம்பாத்தியத்திலே மரியாதை. ஒருவனிடம் இல்லாதது மற்றவனிடம் இருந்தது. ஆகவே, அவர்கள் ஏகதேசம், கூடிப்பேச ஆரம்பித்தால், பிரிய மனமில்லாமல், பேசிக்கொண்டே யிருப்பார்கள். தனக்கு வேலை இல்லையே என்று சாம்பசிவனுக்கு மனக்குறை. தனக்கு படிப்பு இல்லையே என்று பிச்சப்பாவுக்கு மனக்குறை.

பிச்சப்பா வந்ததும், "ஏ சாம்பு! என்ன தபஸ்வியைப் போல உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? லோகத்திலே பணம் இல்லாமல் போனால், சித்தர் பாடல் முதலிய பாடல்களைப் படித்துக்கொண்டு, காலம் கழிப்பார்கள். அந்த மாதிரி நீ ஒன்றும் செய்து விடாதே. அது ஒரு தவறான பழக்கம்" என்றான்.

"பிச்சா! உன் வாய்க்கு சர்க்கரை போடணும். நீ இப்பொழுது என்ன செய்யப்படாது என்று சொன்னாயோ, அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். பொழுது போகவில்லை. தாயுமானவர் பாடல்களை படித்துக் கொண்டிருந்தேன். தாயுமான

வர் என்ன உருக்கமாகப் பாடியிருக்கிறார் தெரியுமா?" என்று சாம்பசிவன் கேட்டான்.

"போடா, போ, உருக்கமாவது மண்ணாவது! இவர்கள் எல்லாம் ஈசனுடைய பாதாரவிந்தம் வேண்டும் என்று சொல்லி மனிதர்களுடைய மூளையை ரொம்பவும் குழப்பி விட்டார்கள். 'சித்தம் ஒடுங்கவில்லையே' என்று சதா புலம்பிக் கொண்டிருப்பார்கள். சித்தமாவது, ஒடுங்கவாவது! சித்தம் சினிமா படத்தைப்போல. ஒரு காக்ஷிவரும். ஒரு காக்ஷி போகும். சித்தம் என்கிற படம் அரைமணி, ஒருமணி, இரண்டு மணி நேரம் மட்டும் ஓடுகிற படமல்ல. அது எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும். புதுப் புதுக் காக்ஷிகள் தோன்றி மறைந்து கொண்டே இருக்கும். சித்தத்தைக் கொன்றால், முக்தி கிடைக்கும் என்கிறார்கள். அது தவறு என்று தோன்றுகிறது. சித்தத்தைக் கொன்றால் சாவு நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை" என்று பிச்சப்பா சாம்பசிவனுக்கு உபதேசம் செய்தான்.

சாம்பசிவனுக்கு பிச்சப்பா சொன்னது உண்மை போல தோன்றினும், அவன் சொன்ன கக்ஷி பிடிக்கவில்லை.

"பிச்சா! இருக்கட்டும்... சித்தம் சினிமா படத்தைப் போல என்று சொல்லிவிட்டாய். அது நிற்காமல் ஓடும் படம் என்றும் சொல்லிவிட்டாய். ஆனால் அந்த சித்தம் படுத்துகிற பாட்டைப் பார்த்தால் அதை கொன்றுவிடலாமா என்று தோன்றுகிறது. என்ன! எவ்வளவு பொருத்தமில்லாத காக்ஷிகள் சித்தத்தில் தோன்றுகின்றன. எப்படித் தோன்றுகின்றன? யாராவது பின்னே இருந்து அவைகளைத் தள்ளுகிறார்களா? எங்கேயிருந்து அந்த எண்ணங்கள் வருகின்றன? மறையும் எண்ணங்கள் எங்கே போய் சேருகின்றன? என்னமோ? இதெல்லாம் பார்க்கப் பார்க்க வேடிக்கையாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது" என்றான் சாம்பசிவம்.

"நான் சொன்னது பலிச்சுப் போச்சு. இந்தமாதிரி கண்டாவிப் பாட்டுக்களைப் படித்தால், இதைப் பாடியவர்களுக்கு எவ்வளவு பைத்தியம் பிடித்திருந்ததோ அதிலே பாதியாவது படிப்பவர்களுக்கு ஏற்பட்டு விடும். அட பாவமே! எந்தப் பரீக்ஷையிலும் முதலிலே தேறின உனக்கு தாயுமானவர் பைத்தியமா பிடிக்கணும்! இதெல்லாம் வேலையில்லாத குறையின் புலன்கள். வேலையிருந்தால் வேலையில் கவனம் போய்விடும். சித்தம், ஸ்வர்க்கம், பாதாளம், பாவம், புண்ணியம் இதெல்லாம் சோம்பல் மனசுகளின் வேலைகள். சுறுசுறுப்புக் கொண்டவனுக்கு இவைகளைப்பற்றி நினைக்கவே பொழுதிருக்காது. நீ சொன்னது மாதிரி சித்தமும் இருக்காது. அப்பா! நீ தாயுமானவர் படித்தது போதும் வா! எக்கேயாவது வெளியே போய்விட்டு வரலாம்" என்று பிச்சப்பா மிகவும் பிரியத்துடன் பேசினான்.

பிச்சப்பா அனுபவசாலியானதால், அவன் பேச்சை முழுசாக அப்படியே தள்ளிவிட சாம்பசிவ

னால் முடியவில்லை. மறுபடியும் தர்ம சங்கடமான நிலைமைதான்.

“இதோபாரு பிச்சப்பா! நீ இப்பொழுது பேசிக்கொண்டிருக்கும் பொழுதே என் மனதில் இரண்டு தினுசான எண்ணங்கள் தோன்றிவிட்டன. நீ சொல்லுகிறது ‘சரி’ என்று ஒரு எண்ணம் தோன்றுகிறது. நீ சொல்லுவது ‘சரியல்ல’ என்று இன்னொரு எண்ணம் தோன்றுகிறது. நடுவில் இரண்டும் சரியாக இருக்கலாமோ என்ற எண்ணமும் தோன்றுகிறது. நீ சொல்வது மாதிரி எனக்கு பைத்தியம் பிடித்திருந்தால், சரி, சரி இல்லை, என்ற எண்ணம் எப்படி என் மனதில், தோன்றமுடியும்? நீ எவ்வளவு சொன்னாலும் நான் நம்பமாட்டேன். மனிதர்களுடைய சித்தத்தில் ஆபாசமான சக்திகளும் இருக்கின்றன. விசித்திரமான சக்திகளும் தோன்றுகின்றன. கடிகாரத்தின் முள்கள் கணக்குப் பிரகாரம் நகருவதுபோல அவைகள் மாயமாய் நகருகின்ற வேடிக்கையைப் பார்த்தால், எனக்கு காரணம் தட்டிப்போகிறது” என்றான் சாம்பசிவம்.

“பிரமை என்று சொன்னாயே அதுதான் பைத்தியம் பிடிக்கும் வழி. அதுதான் சோம்பல் பிடித்த மனத்தின் வேலை. நல்ல காற்றோட்டமில்லாத இடத்தில் உட்கார்ந்துகொண்டு இந்தமாதிரி பாட்டுக்களைப் படித்தால் இந்த எண்ணங்கள் மட்டுமா தோன்றும்? ஆகாயத்தில் பறப்பது மாதிரியும் கந்தர்வ ஸ்திரீகளை சந்திப்பது மாதிரியும், கின்னரர்கள் கீதம் பாடுவதைப் போலவும், இந்த சமயத்தில் வெடுக்கென்று பாம்பு காலைக் கடிப்பது போலவும் என்னவெல்லாமோ தோன்றும். அப்பா! சிந்தையை அடக்கும் வேலையை வைத்துக் கொள்ளாதே! சிந்தையை வேலையில் பூட்டி அதை ஓட்டுகிற வேலையை வைத்துக்கொள். அந்த வேலைதான் சுலபம்” என்றான் பிச்சப்பா.

“நல்லது! சின்ன வேலையை செய்யவேண்டுமென்றாய். பெரிய வேலையில் புகுந்தால் பைத்தியம் பிடித்துவிடும் என்கிறாய். சபாஷ்! உன் பேச்சைக் கேட்டால் மனிதன் உருப்பட்டால் போலத்தான்! ஒரு ஆராய்ச்சியும் செய்ய முடியாது. ஒன்றையும் புதிதாகக் கண்டு பிடிக்க முடியாது. செக்கிலே பூட்டின மாடுகளைப் போல் யோசனை இல்லாமல் சுற்றின இடத்திலேயே சுற்றிக் கொண்டு இருக்கவேண்டி வரும். இதற்கா மனிதனாகப் பிறக்கவேண்டும்? நம் மனதிற்குள் எத்தனையோ விதமான விசித்திரமான காக்ஷிகளும் மனிதர்களும் தோன்றுவது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட ஒரு பேர் வழி, பார்வைக்கு எவ்வளவோ நல்லவனாக தோன்றினாலும், எப்படியோ மஹா பாதகமான காரியங்களையும் செய்துவிடுகிறான். இதற்கென்ன காரணம்? சொல் பார்ப்போம்” என்று சாம்பசிவம் ஆத்திரத்தோடு கேட்டான்.

பிச்சப்பா விழுந்து விழுந்து சிரித்தான். “இதற்குத்தான் மனித சுபாவம் என்று பெயர். பார்த்தால் பசுவாய் இருப்பதும், பாய்ந்தால் புலியா இருப்பதும் மனித

சுபாவம். பார்த்தால் சாதுவாகவும், பார்க்காவிட்டால் ஸ்திரீ லோலனாகவும் இருப்பது மனித சுபாவம். கண்டால் நாணயமாகவும், காணாவிட்டால் பக்காத் திருடனாகவும் இருப்பது மனித சுபாவம். நாலு பேர் அறிய தர்மம் செய்வது மனித சுபாவம். ஒருவரும் இல்லாவிட்டால் பிச்சைக்காரனை விரட்டியடிப்பது மனித சுபாவம். மனித சுபாவம் ஏன் இப்படி இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்ய எவ்வளவோ பிரயாசைப்பட்டாலும் அதனால் தெளிவான முடிவுகள் ஏற்படமாட்டா. அது பிரயோஜனமில்லாத காரியம். அதை விட்டுவிடு' என்று பிச்சப்பாவும் ஆத்திரத்தோடு பேசினான்.

“பேஷ்! பிச்சப்பா! மனிதனாய்ப் பிறந்தது பிசகு என்று நீ சொல்லுகிறாய் போல தோன்றுகின்றது. உன் கக்ஷியை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஒரு ஆளுக்குள் எத்தனையோ ஆட்கள் இருப்பது மனித சுபாவம் என்று லேசாய் சொல்லி விட்டாய். அதை ஆராய்ச்சி செய்யாமல் விட்டுவிடப் போவதில்லை என்று சொல்லி சாம்பசிவன் பேச்சை முடித்தான்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

தொட்டிலில்

அசுவதி

'அதோ இருக்கு உன் தொட்டில். போய் உட்காரு,' என்று சிரித்துக்கொண்டே யாரோ கூறினர்கள்.

'நீங்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் நான் அதில் போய் உட்கார்ந்து கொள்ளத்தான் போகிறேன்,' என்று கொண்டே அதில் போய் உட்காரப் போனேன்.

இரு, இரு, குழந்தையை விடணும். தூங்கிவிட்டது,' எதிரே எங்கேயாவது உட்கார்ந்து கொள்,' என்று சொல்லி கொண்டே உள்ளே இருந்து ஒரு தாய் தோளில் தூங்கும் குழந்தையுடன் வந்தாள்.

'ஐயோ, சின்னக் குழந்தை மாதிரி இன்னும் தொட்டில் ஆசை விடவில்லையே இவனுக்கு,' என்று ஒரு வயதான குரல் பேசியது.

சின்னக் குழந்தை! ஆமாம் யாருக்குத்தான் சின்ன குழந்தையாக இருக்க பிரியம் கிடையாது? அப்படி பிரியப்படாதவர்கள் யாருமே இருப்பதாக நான் நம்பவில்லை.

வேட்ஸ்வொர்த் கூறி இருப்பதாக ஞாபகம்: 'வயதான மனிதனின் தகப்பன்தான் குழந்தை' என்று. குழந்தைதானே முதல் பிறக்கிறது; அதிலிருந்து வளர்ந்தவன்தானே மனிதன். குழந்தையில்லாவிட்டால் மனிதன் எது? குழந்தை வயதான மனிதனின் வித்து.

அதோடு சொல்லி இருக்கிறான். 'குழந்தைக்கும் மோக்ஷலோகத்துக்கும்தான் நெருங்கிய தொடர்பு உண்டு. வயதாக ஆக இரண்டிற்கும் இடையே உள்ள தூரம் அதிகமாகிக் கொண்டே வந்து மோக்ஷம் மனிதனுக்கு கனவாகி விடுகிறது.'

லௌகுவில் ஒருவித சிரமமும் படாமல் குழந்தை அநுபவித்த சொர்க்க போகத்தை, மனிதன் அடைய எவ்வளவு தீவிரமாக முயற்சி செய்ய வேண்டி இருக்கிறது! அதை அடையும் வகையை ஆராய்வதிலேயே எவ்வளவு கவலைப் பொழுதை போக்க வேண்டி இருக்கிறது!

ஆகவே எப்போதும் குழந்தையாகவே இருந்து, சொர்க்கத்தோடு இருக்கும் உறவை நிரந்தரமாக நிலை நிறுத்திக் கொண்டு நிரந்தரமாக ஆனந்தம் அடைய வேண்டும் என்று மனது துடிக்கிறது. இந்த நிரந்தர ஆனந்தத்திற்கு, என் வயது வளர்ச்சியை, வருஷ அநுபவத்தை கூட விட்டு விடுவதற்கு ஏன் தயங்க வேண்டும்?

நான் வளர்ந்து விட்டேன். இத்தனை வருஷத்தில் என்னென்ன

லாம், எங்கிருந்தெல்லாமோ வந்து என்னைச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. கவலே! இது எங்கிருந்தது என் குழந்தை உள்ளத்தில்? ஆசை எனக்கு எதில், எவ்வளவு இருந்தது? இப்போது என்னல் யூகிக்க முடியவில்லை. பயம்! ஐயோ இப்போது ஒவ்வொரு எட்டு எடுத்து வைப்பதற்கும் எப்படி தயங்குகிறேன், பயப்படுகிறேன். அது அப்போது இருந்ததா?

கையிலிருந்த கல்லை எங்கே வீசி எறிந்தேனே? அப்போது, யார்மீது அது விழுந்ததோ? அதைப்பற்றி நான் கவலைப் பட்டேனு? உற்சாகத்தில் துள்ளிக் கொண்டு எந்தப் பள்ளத்தை நோக்கி ஓடினேனே! தாய் அலறி ஓடிவந்து தூக்கினளோ?

இப்போது வானத்திலே இடி இடிக்கிறது. அது என் தலையில் விழுந்து விடுமோ என்ற பயம். ஒவ்வொரு இடிக்கும் திகைக்கிறேனே!

சற்று எட்டி ஒருகாளை கொம்பை ஆட்டிக் கொண்டு வருகிறது. அது யதார்த்தமாக இருந்தாலும் இருக்கலாம். என்னை முட்டுமோ என்று பயந்து சுவற்றை இடித்துத் தள்ளும்படியாக ஒதுங்கிப் போகிறேனே!

இத்தனையும் இல்லாத அந்த குழந்தை—நான் எனக்கு நிறைவேறப்போகாத கனவுதானே!

'தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்!' இந்தப் பழமொழி எனக்கு சரியாகப் புரியவில்லை.

நான் மேலே கூறின தொட்டில் பழக்கம் அத்தனையும், என் குழந்தை மனது அத்தனையும், இப்போது என்னிடம் இல்லையே. துளிர் விட்ட அந்த மன நிலைக்கும் வாடி வதங்கின இந்த சாகு மன நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்! அப்படியிருக்க சுடுகாடு மட்டும் என்பது எப்படி பொருந்தும்? இன்னும் நான் விலகி விலகித் தானே போகப் போகிறேன்.

என் தொட்டில் பழக்கம் தொட்டிலோடு நின்றுவிட்டது. நான் தரையில் நடக்க ஆரம்பித்தேன். என் காலிலே எல்லா அசுத்தங்களும் வந்து ஒட்டிக்கொண்டு விட்டன. மழை காலத்தில் சகதியிலே நடப்பது போல அடையப்பிக் கொள்கிறது. உதறியும் புதிதாக ஒட்டிக்கொள்கிறது. சுடுகாட்டில் கொண்டு போடுவதற்குள் எவ்வளவு சேரப்போகிறதோ?

ஆனல் நான் அவைகளை உதறிவிட முடியவில்லை. நான்தான் முன்னமே சொன்னேனே, பல ஹீனம் அத்தனையும் அடங்கின மனிதன் நான் என்று.

இப்படியே நான் சகதியை அப்பிக்கொண்டு கடைசியில் மண் அடையில் படுக்கவேண்டியவன்தான். படுத்துவிடுவேன்.

என் வயது முடிந்துவிட்டது; மனிதனுக மறைந்துவிடுவேன்.

ஆனல் ஒரு திருப்தி. மறுபடியும் குழந்தையாகலாம் அல்லவா? கொஞ்ச காலத்திற்காவது அந்த சொர்க்க போகம் எனக்கு வரும் அல்லவா?

வைதேகியின் கண்ணீர்

அ. கி. ஜயராமன்

தினம் பொழுது விடிந்தால் எங்கே மணி பத்தடிக்கப் போகிறதென்று காத்துக்கொண்டிருப்பாள் வைதேகி. அது அவளுடைய தினசரி வேலை. அதில் அவளுக்கு அலுப்புச் சலிப்பு ஒன்றும் கிடையாது. மணி பத்திலிருந்து பத்தே காலுக்குள் அவளைப் பார்த்தால் ஏதோ பைத்தியம் பிடித்தவளைப்போல்தான் இருப்பாள்.

ஒரு நாளா இரண்டு நாளா, மூன்று வருஷமாக இந்தப் பைத்தியம்தான். பத்து மணிக்கு ஜன்னலண்டை வந்து நிற்பாள். ஏதோ கிடைக்கக் கூடாத அபார ஐச்வர்யம் தனக்கு வர இருப்பதைப்போல ஜன்னலண்டை நிற்கும்போது அவள் மனதில் எத்தனையோ எண்ணங்கள் நிமிஷத்தில் எல்லை கடந்து ஓடும். தளிர்த்து எழும் பெண்மை உள்ளத்தில் இளமையின் ஆர்வம் பொங்க, அவனுடைய கடிதத்தை எதிர் பார்த்து நிற்பாள் அவள்.

தபால்காரன் அவள் வீட்டைத் தாண்டி மேற்கே போவான். அவ்வளவுதான். அவள் கற்பனை சிதறும். பின்னோடு ஒரு பெருமூச்சு. அதுதான் அவள் ஒவ்வொரு நாளும் அடையும் ஏமாற்றத்தின் முற்றுப் புள்ளி. பிறகு உள்ளே சென்றால் ஆயிரம் கவலை. தாயார் வீடு பெரிய சம்சார ஸாகரம். இது அவளுடைய நித்தியப்படி வாழ்க்கையாகப் போய்விட்டது. இன்று காலையிலெழுந்ததே அவள் மனம் ஒரு புது ஆனந்தத்தால் பொங்கிக்கொண்டிருந்தது. எல்லோருக்கும் மளமளவென காப்பியைப் போட்டுக் கொடுத்து, தன் தந்தையை துருசு படுத்திக்கொண்டிருந்தாள்.

எல்லோரும் காப்பி சாப்பிட்டு முடிந்ததும், "நான் போய்ட்டு வரட்டுமா?" என்றார் வைதேகியின் தந்தை.

"போய்ட்டு வாங்கோ" என்றாள் வைதேகி. அவள் உள்ளத்தில் மலர்ந்த சந்தோஷத்தின் குரல் அதில் ரீங்காரம் செய்தது. தகப்பனார் வெளியே சென்றார். வைதேகி காப்பிப் பாத்திரங்களை எடுத்து வெளியே வைத்துவிட்டு கூடத்திற்கு வந்தாள்.

எதிரே மாட்டி இருந்தது அந்தப் படம். அது அவளுடைய கல்யாணமானபோது எல்லோருமாக வற்புறுத்தி எடுத்துக் கொள்ளச் சொன்னது. முதலில் அவள் சம்மதிக்கவில்லை. பிறகு ராமச்சந்திரனே அவள் காதில் பட்டதும் படாதுமாக, அவசியம் எடுத்துக்கொள்ள வேண்டும்! என்று சொன்னபோது அவளால் மறுக்க

முடியவில்லை. மறக்க முடியாதது மட்டுமல்ல. முதலில் ஏன் மறுத்தோம் என்றுகூட தோன்றி விட்டது அவளுக்கு.

ராமச்சந்திரனும் கூட வந்திருந்தான். வைதேகி சென்று நமஸ்காரம் செய்துவிட்டு ஒரு ஓரமாக ஒரு நிமிஷம் மருண்டு நின்றாள்.

அவளை நாற்காலியில் உட்கார வைத்து தான் பக்கத்தில் நின்று கொண்டு போட்டோ எடுத்துக் கொண்டான் ராமச்சந்திரன். அதில் அவனுக்கு அவ்வளவு திருப்தி. அவனுக்கு அவள் மேல் அவ்வளவு ஆசை. அவனே தேர்ந்தெடுத்த ஐச்வர்யமல்லவா அவள்! ஆனால் இன்று அவன்?

ராமச்சந்திரன் ஒருமுறை நிமிர்ந்து கீழிருந்து மேலே பார்த்தான். ரோஜா மொட்டுப்போன்ற மாசு மருவற்ற வைதேகியின் எழில் அவன் உள்ளத்தில் படம் எழுதினது போல் பதிந்து விட்டது. அவன் தலை நிமிரும்போது அகஸ்மாத்தாக நிமிர்ந்து அவள் முகத்தைக் கண்டதும் அவனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் பறந்துவிட்டது.

2

நான்கு வருஷங்களுக்கு முன் பெண் பார்க்க வந்திருந்தார்கள்.

சௌந்தர்ய தேவியின் பூரண விகாசமும் அந்த முகத்தில் பிரதிபலித்தது. தன் பாக்கியத்தை எண்ணும்போது ராமச்சந்திரன் மனம் கரையில்லா ஆனந்தத்தின் எல்லையையும் கடந்துவிட்டது.

ஒப்புக்காகத் தன் கூட வந்திருந்த சகோதரியின் மூலம், "பெண் எதுவரை படித்திருக்கிருள், பாட்டு ஏதாவது பாடத் தெரியுமா?" என்று கேட்டு வைத்தான்.

"தமிழ் நன்ருக எழுதப் படிக்கத் தெரியும். பாட்டும் சுமாராகப் பாடுவாள்," என்ருர் வைதேகியின் தந்தை.

வைதேகியின் தாயார் இந்த சந்தேகத்திற்கு இடம் வைக்கவே இல்லை. அவள் வைதேகியைக் கூப்பிட்டு ஆர்மோனியத்தை எடுத்து வைத்துக்கொண்டு, 'இரண்டு பாட்டு பாடு' என்றதும், வைதேகி பயந்துகொண்டே ஒரு பாட்டும் பாடி முடித்தாள்.

பிறகு கல்யாணப் பேச்சு. ஒன்று, இரண்டு என்று கல்யாண தினமும் வந்து சேர்ந்தது. ராமச்சந்திரன் வைதேகியின் கையைப் பிடித்துக்கொண்டு இருவரும் அம்மி மிதித்து, "அருந்ததியைக் கண்டாயா?" என்று கேட்கும் போது இருவருக்கும் வந்த சிரிப்பை, ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அடக்கிக்கொண்டனர். பிறகு சாயங்காலம் நலங்கிடும்பொழுது ராமச்சந்திரனின் கையிலிருந்த வெற்றிலையைப் பிடுங்க முடியாமல் வைதேகி சோர்ந்து கடைக்கண்ணுல் கீழே போட்டிருந்த பட்டுப் பாயைப் பார்த்தபோது, கலீரென்று எல்லோரும் சிரித்தனர்.

ராமச்சந்திரனும் சிறு புன்னகையுடன் இந்த தடவை வெற்றிலையை சுலபமாக விட்டுவிட்டான். அதைப் பார்த்து பக்கத்திலிருந்த ஸ்திரீகள் மறுபடியும் நகைத்தனர்.

நாலாம் நாள் ஊர்வலம். தனக்கு வந்த தூக்கத்தை சமாளித்துக் கொண்டு மோட்டாரில் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் போது, யாரோ ஒரு சிறு பெண் அவனிடம் வந்து, 'மாப்பிள்ளை தூங்காதீர்கள்' என்று சொன்னதும், அவன் 'மாப்பிள்ளை தூங்க மாட்டார், நாட்டுப் பெண்ணை தூங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னபோது மோட்டாரிலிருந்த குழந்தைகளெல்லாம் கலகலவென்று சிரித்தனர்.

ஆச்சு, கல்யாணம் முடிந்தது. அன்று எல்லோரும் ஊருக்குப் புறப்படுகிருர்கள். ராமச்சந்திரனுக்கு வைதேகியிடம் தனிமையாக ஏதாவது சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்று ஆசை. அவள் குறுக்கே நெடுக்கே போகும்போது அப்படி ஜாடையாக கடைக்கண்ணுல் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆனுல் பாழாய்ப்போன இந்தப் பெரியவர்களுக்கு அதெல்லாம் தெரிந்தால்தானே! கடைசிவரையில் ராமச்சந்திரனுக்கு வைதேகியிடம் தனியாகப் பேச சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

எல்லோரும் சொல்லிக் கொண்டு புறப்படும்போது ராமச்சந்திரனும் 'நான் போய்விட்டு வரு

கிறேன்' என்ற மாமியார் மாமனாரிடம் சொல்லிவிட்டு, கடைசியில் பக்கத்தில் இருந்த மற்றவர்களையும் பார்த்துப் பொதுவாக வைதேகி ஒளிந்து கொண்டிருந்த கதவையும் பார்த்து, எல்லாருக்கும் 'போய்ட்டு வரேன்' என்று சொன்னபோது, பக்கத்திலிருந்த ஒருவர் 'பேஷ் மாப்பிள்ளை, பரவா இல்லையே' என்றார்.

3

வைதேகிக்கு இதை எல்லாம் நினைக்கும்போது கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அப்படி இருந்தவர் இன்று? இதை எண்ணும்போது, அவள் மனம் துடித்தது. ஒன்றுமில்லாத சிறு அற்ப விஷயம்.

ஏதோ ஆடி, ஆறு மாசத்திற்குச் செய்ததில் தகராறு. அதற்காக இத்தனை பெரிய தண்டனையா? அதை அவளால் பொறுக்க முடியவில்லை.

கலியாணமாகி ஒரு வருஷத்திற்கெல்லாம் அவள் வயதடைந்து விட்டாள். ஆனால் அவளுடைய மாமனார் மாமியார் கோபம் தணிந்தபாடில்லை. அவள் தந்தை தன் மாப்பிள்ளைக்கு எழுதிய கடிதம் ஒன்றுக்குக்கூட பதிலே வராமல் போனது ஆச்சர்யமொன்றுமில்லை.

ஆனால் வைதேகி மட்டும் எப்படியும் தன் கணவன் தன்னை அழைத்துக்கொண்டு போவான் என்ற நம்பிக்கையை இழக்கவே இல்லை. தன் தாயார் சில சமயம் வருந்தும்போதுகூட 'அவர் அப்படியெல்லாம் செய்யக் கூடியவரல்ல' என்று தைரியம்கூட சொன்னாள்.

ஆனால் ராமச்சந்திரனுக்கு மறு விவாகம் செய்யப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற வதந்தியைக் கேட்டதும், சிறிதளவு அவநம்பிக்கையும் ஏற்பட்டது வைதேகிக்கு.

தந்தை எழுதின கடிதத்திற்குப் பதில் இல்லாமல் போகவே, தானே ஒரு கடிதம் எழுதுவதென்று தீர்மானித்தாள். ஒரு கடிதமும் எழுதினாள். பதிலை எதிர்பார்த்தாள்.

ஒரு நாள், இரண்டு நாள், பத்து நாள், பதிலில்லை. எதிர்பார்த்துப் பார்த்து அவள் மனம் ஒடிந்தது. ஆனால் அவளுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருந்த நம்பிக்கை சற்றும் தளரவில்லை. மீண்டும் இரண்டாவது முறையாக ஒரு கடிதம் எழுதினாள். அதற்கும் பதிலில்லை.

அவள் உள்ளத்தில் பதிந்திருந்த நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக சிதைய ஆரம்பித்தது. ஆனால் அவளுடைய முழு நம்பிக்கையும் சிதையும்வரை ராமச்சந்திரன் சும்மா இருக்கவில்லை. வைதேகியின் இரண்டாவது கடிதத்திற்கு அவனிடமிருந்து பதில் வந்தது. வைதேகி என்ற மேல் விலாசத்தைப் படித்ததே அவளுக்குப் புரிந்து விட்டது. ராமச்சந்திரனைத் தவிற தன் பெயருக்குக் கடிதம் எழுதுகிறவர்கள் யார்?

கடிதத்தை எடுத்துக் கொண்டு ஒரு அறைக்குச் சென்றாள். ஒரு நிமிஷம் விலாசத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சி அவள் உள்ளத்தில் ஒரு பயத்தை உண்டாக்கியது.

வெகு நாட்களுக்குப் பிறகு வந்த கடிதம். உள்ளே இருப்பதைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல், ஆனால் என்ன எழுதி இருக்கிறதோ என்று ஒரு பயம்.

சில நிமிஷம் கவரைக் கையில் பிரிக்காமல் வைத்துக் கொண்டிருந்தாள். பிறகு தன்னை சமாளித்துக்கொண்டு மெள்ளப் பிரித்துப் படிக்கலானாள். தன் பெயருக்குத்தான் எழுதி இருந்தது.

சௌ. ‘வைதேகிக்கு’ என்று ஆரம்பித்திருந்து, அவள் மேலும், அவள் தாய் தந்தையர்கள் மீதும் ஆயிரம் குற்றச்சாட்டுகள். நடுநடுவே இருளின் நடுவில் தோன்றும் ஒளியைப்போல சில அன்பு வார்த்தைகள். அவள் மனம் மகிழ்ச்சியையும் பயத்தையும் மாறி மாறி அடைந்தது. முடிவாக அதில்—

“உன்மீது எனக்கு எந்த வருத்தமோ கோபமோ கிடையாது. ஆனாலும் உன் தாய் தந்தையர்கள் செய்ததை மாத்திரம் மறக்கவே முடியாது. உன்னை முன்பே அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்றுதான் என் எண்ணம். ஆனால் நானும் என் அப்பா அம்மாவைப் பார்க்க வேண்டியிருந்தது. நான் அடுத்த புதன் கிழமை வருகிறேன்” என்று எழுதி இருந்தது. வைதேகியின் உள்ளம் சந்தோஷத்தால் மலர்ந்தது. தன் நெடுநாளைய நம்பிக்கையின் சாதனை வீணாகவில்லை என்று தன் மனதிற்குள் எண்ணி மகிழ்ந்தாள். கடிகாரம் டங் டங் கென்று பத்து மணி யடித்தது.

4

கனவிலிருந்து விழித்துத் திரும்பினாள் வைதேகி. ஸ்டேஷனுக்குச் சென்றிருந்த தகப்பனார் திரும்பி வந்தார். அவர் முகத்தைப் பார்த்ததே வைதேகிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

“என்ன அப்பா?” என்றாள்.

“இந்த வண்டிக்கு வரவில்லை போல இருக்கு” என்றார் அவர்.

வைதேகியின் நம்பிக்கை இடிந்து விழுந்தது. அவள் எண்ணி மகிழ்ந்திருந்ததெல்லாம் வெறும் ஏமாற்றமாகப் போய் விட்டது. அவள் தந்தையிடம் வேறொன்றும் கேட்கவில்லை. கடிகாரத்தை பார்த்துவிட்டு, நேரே ஜன்னலண்டை வந்து நின்றாள். தபால் சேவகன் அவள் வீட்டைத் தாண்டி மேற்கே சென்றான். வைதேகியின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் கீழே உதிர்ந்தன. அவள் கண்களைத் துடைத்துக்கொண்டே ஜன்னல் கதவைச் சற்று சாத்தினாள்.

ராமுவின் சாவு!

"ரஞ்சனன்"

தந்தியைப் பார்த்துவிட்டு நெருப்பத் தணலில் காலைவைத்தது போல் துடிதுடித்தார் துரைசாமி ஐயர்.

கணவனுடைய தைரியத்தில் மனைவிக்கு அபார நம்பிக்கையுண்டு. எனவே மேற்கண்டவாறு அவர் பிரலாபித்த உடனே சஹதர்மிணிக்கு அடிவயிற்றில் திகில் பிடித்துக்கொண்டது. "ஓகோ! என்ன? குஞ்சுவுக்கு என்ன?" என்று பதறினாள்.

செல்லக் குஞ்சுவுக்கு பள்ளிக்கூடத்தில் வைத்துக் கூப்பிடும் பெயர் ராமமூர்த்தி. அந்தப் பெயரோ அவனுடைய நம்பரோ எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை தேறினவர்கள் ஜாபிதாவில் இல்லை. இது முதல் நாள் சாயங்காலம் நடந்த விஷயம்.

முதல் நாள் காலையிலே சாப்பாட்டிற்குப் பிறகு ராமு, "இன்னிக்கி மத்தியானம் பரீக்ஷை ரிஸல்ட் செனட் ஹவுஸிலே ஒட்டுகிறார்களாம். போய் பார்த்துவிட்டு வரேன்" என்று கிளம்பினவனை இன்னும் காணவில்லை. ரிஸல்ட் என்னமோ பத்திரிகைகளில் கூட வெளி வந்துவிட்டது.

"குழந்தையைக் காணோமே. ஒன்றுமில்லாமல் வீடு வந்து சேர வேண்டும் ஈஸ்வரா", என்று வேண்டிக்கொண்டு, பிள்ளையாருக்குத் தேங்காய் வாங்குவதற்காக பணம் எடுக்கப்போனபோது தான் வீட்டில் வைத்திருந்த இருபத்தைந்து ரூபாயும் பையனோடு வெளியேறி இருக்கிறது என்பதை துரைசாமி ஐயர் தம்பதிகள் தெரிந்து கொண்டார்கள்.

மேல் நடக்கவேண்டியதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போதுதான் அந்தச் செய்தி வந்தது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் அடித்த தந்திக்கு, அவரை பைத்தியம் பிடித்துப்போகும்படி செய்யும் ஒரு பதில் வந்திருந்தது. கிட்டத்தட்ட இருவருக்குமே மயக்கம் போட்டுவிட்டது. 'இனி என்ன செய்வது' என்பதைப் பற்றி யோசிக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டால், நிச்சயம் அவர்களுக்கு பிரக்ஞை தவறியே இருக்கும்.

"டி. ராமமூர்த்தி—சென்னை சென்ட்ரல் டிக்கட் பைபில்—அபாயம்" என்று தேவ பள்ளி ஸ்டேஷன் மாஸ்டர் தந்தியடித்திருந்தார்.

இருவரும் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். தன் சினேகிதர் சாம்பசிவ ஐயரிடம் விஷயத்தைச் சொல்லாமல் இருபது ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு பையனைப் பார்க்கப் பதறிக்கொண்டு ஓடினார் துரைசாமி ஐயர்.

தேவ பள்ளி ஸ்டேஷனில் செய்தியை ஊர்ஜிதம் செய்து கொண்ட துரைசாமி ஐயருக்கு சப்தநாடியும் ஒடுங்கி விட்டது. "கிராப்புத்தலை. நல்ல சிகப்பு. கிட்டத்தட்ட ஐந்தரை அடி உயரம்"—அதே குஞ்சுதான் சந்தேகமில்லை!

ஸ்டேஷன் மாஸ்டர் பையனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டதாகவும், அங்கே போய் பார்க்கலாம் என்றும் சொன்ன உடனே, ஆஸ்பத்திரிக்கு ஓடினார் துரைசாமி ஐயர். "பையன், எந்த வார்ட்? டி. ராமமூர்த்தி.... காலையில் ரயில் விபத்து...." என்ற சில வார்த்தைகளில் மனதிலுள்ள பூராவையும் வெளியில் கொட்டினார்.

அந்தப் பையன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டதும் இறந்து விட்டான். ஆகையால் அந்த கேஸை 'டிஸ்போஸ் ஆப்' செய்து விட்டதாகவும், மாஜிஸ்ட்ரேட்டினிடம் கை எழுத்து வாங்கிய ஒரு சர்டிபிகேட்டை அந்த ஊர் போலீஸ் கமிஷனரிடம் கொடுத்தால் இறந்த பையனுடைய பையிலிருந்த சில்லறையைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் டாக்டர் தெரிவித்தார்.

இவ்வளவு தூரம் ஆகுமென்று கனவிலும் துரைசாமி ஐயர் நினைக்கவில்லை. பையனைப் பார்க்கக்கூட கொடுத்துவைக்காத பாவியாகப் போய்விட்டோமே என்ற எண்ணம் அவர் மனதைக் கலக்கியது. கனவில் நடப்பவரைப் போல் நடந்து ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்.

அவர் சென்னையில் வந்து இறங்கியபோது நன்றாக இருட்டி விட்டது. வீட்டில் போய் மனைவி முகத்தில் எப்படி விழித்து, என்ன சமாசாரத்தைச் சொல்லுவது என்ற பல எண்ணங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டன. துண்டை உதறித் தலையில் போட்டுக் கொண்டு வந்த துரைசாமி ஐயரை, சில சினேகிதர்கள் என்ன விசேஷம் என்று விசாரித்தார்கள்.

அரை மணிக்குள் ராமு இறந்து விட்டான் என்ற செய்தி அந்தத் தெரு பூராவும் பரவி விட்டது.

வீட்டுவாசலில் சிவகாமு அம்மாள் அய்யரவர்களை எதிர்பார்த்துக் கொண்டே நின்றாள். அவளைப் பார்த்ததும், ஒரு பதிலும் சொல்லத் தெரியாமல் 'ஹோ' வென்று கதறிவிட்டார். அம்மாளும் "ஐயோ! குழந்தை வந்துட்டான். பிராணனை விட்டது எந்தப் படுபாவியோ" என்று கதறினாள்.

தூண் மறைவில் பையனின் தலை தெரிந்தது.

துரைசாமி ஐயரை துக்கம் விசாரிக்க வந்த பலரை ராமு வரவேற்றான்.

போங்காணும்! போம்!

(வ. ரா.)

நாட்டுக்கணக்கு சுப்பராயரும் 'கந்திராட்டு' வேலு முதலியாரும் நீண்டநாள் நண்பர்கள். இருவர் குடும்பமும் உளுந்தம்பட்டி கிராமத்தில், தலைமுறை தலைமுறையாக வசித்துவந்த குடும்பங்கள்.

ஒரு குடும்பத்துக்கு கிராமக் கணக்கு வேலை. மற்ற குடும்பத்துக்கு கண்ட்ராக்ட் தொழில். 'உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்கு தானியம்கூட மிஞ்சாது' என்று கிராமத்தில் சொல்லிக் கொள்ளுவதுண்டு. அந்தமாதிரி ஆபத்து, சுப்பராயர் குடும்பத்துக்கு நேரவில்லை. சுப்பராயரின் முன்னோர்கள், சிறுகச் சிறுக, அந்த கிராமத்தில் நிலம் வாங்கி, கடைசியில் பெரிய பூமியாளர்களாக ஆகிவிட்டார்கள்.

மிகவும் சிக்கனமாக வாழ்ந்து வந்தமையால், வருஷத்துக்கு வருஷம், அந்தக் குடும்பத்தார், மரக்கால் கணக்கில், பணத்தை மீத்து விட்டார்கள். நூற்றுக்கு மேல், எல்லாம் ஊற்றுத்தானே? சுப்பராயர் காலத்திலே, அவருடைய குடும்பம், அந்த வட்டாரத்துக்குள், செழிப்பான குடும்பமாக இருந்தது.

வேலு முதலியார் குடும்பம் நடந்தது வேறு வகை. இந்தக் குடும்பத்துக்கு, பூமி வாங்குவதிலும் பூமியில் பணத்தைப்போட்டு முடக்கி வைப்பதிலும் நம்பிக்கை இல்லை. இவர்களுக்கு தொழில் நடத்துவதில் தான் ரொம்ப பிரியம்: "பணத்தை பூமியில் போட்டால் என்ன? பாங்கியில் போட்டால் என்ன? ஒன்றும் பிரயோசனமேயில்லை. பணம் சுற்றிக்கொண்டேயிருக்கவேண்டுமானால், தொழில் நடத்தினால்தான் முடியும்" என்று இந்தக் குடும்பத்தார் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இந்தக் குடும்பத்தார், பல காலமாக, கந்திராட்டு தொழிலில் ஈடுபட்டு, லட்சப் பிரபுக்களாகி விட்டார்கள்.

இப்பொழுது சுப்பராயருக்கும் சரி, வேலு முதலியாருக்கும் சரி, கொஞ்சம் வயதாகி விட்டது. கிட்டத்தட்ட எழுபது இருக்கும். இவர்கள் இரண்டுபேருக்கும் ஒரே ஒரு கவலைதான். குடும்பத்தின் பூமி அழியாமல் இருக்கவேண்டுமென்பது சுப்பராயரின் ஆசை. தன் குடும்பத்தின் பணம் சிதறிச் சின்னபின்னப் படாமலிருக்க வேண்டும் என்பது முதலியாரின் பிரார்த்தனை.

இவர்கள் இரண்டு பேரும் வழக்கமாக, பிற்பகல் நேரத்திலே, ஒன்றுகூடி பேசத் துவக்கினால், இரவு ஏழு மணி வரைக்கும் பேசிக்கொண்டேயிருப்பார்கள்.

அவர்களுக்குப் பொழுது போவதே தெரியாது.

'நான் எத்தனை தாசில்தாரை யும் எத்தனை ஜமாபந்தியையும் பார்த்திருக்கிறேன்' என்று ஆரம் பித்து, காந்திவரையில், சுப்ப ராயர், பேச்சைக் கொண்டுவந்து நிறுத்துவார்.

முதலியார் மற்றவருக்கு சளைத் தவரல்ல. தான் எத்தனை எஞ்சி னீயர்களைப் பார்த்திருக்கிறார் என்று துவக்கி, அவரும் காந்தி வரையிலும் பேச்சைக் கொண்டு வந்து நிறுத்துவார்.

ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்டுக்கொண்டிருந்தாரா என்ற கவலையே, அவர்களுக்குக் கிடை யாது. தங்களுடைய அபூர்வ மான வரலாற்றில், எல்லாருக்கும் சிரத்தையும் பிரியமும் இருக்கத் தான் செய்யும் என்ற திடமான நம்பிக்கை இரண்டு பேர்களிட மும் உண்டு.

ஆனால் ஒருவருக்கு மற்றவர் பேரில் ஒருவித மரியாதை இருந்து வந்தது. ஒவ்வொரு வருக்கும் தனித்தனித் துறை யில், பணம் சேர்ந்த வகையைக் குறித்து, மற்றவர் சிறிது பொறு மைப் படுவார். ஒருவகைப் பிரி யத்தோடு கூடிய பொறுமைத் தான்! ஒருவர் அழிந்துபோக வேண்டும் என்று மற்றவர் எண் ணும் அற்பத்தனமான பொறுமை அல்ல.

"சுப்பராயர், ஒவ்வொரு ரூபா யாகச் சேர்த்து, எப்படி லட்சப் பிரபுவானார்" என்பதிலே, முதலி யாருக்கு தயக்கம். பணத்தை வாரி இறைப்பது மாதிரி ஊதா ரிச் செலவு செய்யும் பழக்கம் கொண்ட முதலியார், எப்படி லட் சப் பிரபுவானார் என்பதிலே சுப்ப ராயருக்கு மயக்கம். இரண்டு பேருக்கும் பணம் என்றால் உயிர். பணம் கிடைக்க வேண்டுமென்று தான் இருவரும் அனுதினமும் கடவுளுக்கு பிரார்த்தனை செய் வார்கள்.

இவர்கள் இருவரும் காந்தி யைப்பற்றி ஏன் அடிக்கடி பேச வேண்டும்? "காந்தி, பணமே வேண்டாம் என்கிறாராமே! பணம் இல்லாவிட்டால், மனித னுடைய, 'சப்தநாடி' யும் ஒடுங்கி விடாதா? பணமில்லாத வன் பிணத்துக்கு சமானம்" என்று இருவரும் ஏகமனதாக, அழுத்தந் திருத்தமாகச் சொல்லு வார்கள்.

"காந்தி சொல்லுகிற விஷயங் களிலே அநேகம் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் பணம் வேண்டாம் என்று சொல்லு கிறது பைத்தியக்காரத்தனம். அவருக்கு என்ன? அவர் ராஜ சன்னியாசி! போன இடத்தில் எல்லாம் மதிப்பு! ரயில் டிக்கெட் டுக்குப் பணம் வேண்டுமே என்ற கவலையா? காலேஜிலே, பிள்ளை களைப் படிக்க வைக்க வேண்டுமே, அதற்கு பணம் வேண்டுமே என்ற கவலையா? எதைப்பற்றி அவருக்குக் கவலை? ஆட்டுப்பால் ஆகாரம்! ஆண்டி மடத்தில் இருப் பது போல, அவர் செவ்கானில் இருக்கிறார். நம்மைப் போலவா அவர்? பொழுது விடிந்து, பொழுது போனால், நமக்கு எத் தனை தொல்லைகள்? எத்தனை கவலைகள்? தொல்லைகள் தீருவது மில்லை. கவலைகள் ஒழிவதுமில்லை. எப்படியோ காலம் போய்க்கொண் டிருக்கிறது. காந்தி, என்ன

வேண்டுமானுலும் சொல்லுவார்'' என்று சுப்பராயர், ஜாடையாகப் பேசித் தீர்த்துவிடுவார்.

இந்தப் பேச்சு முடிந்ததும் முடியாததுமாக, முதலியார் தமது பேச்சை ஆரம்பித்து விடுவார். "காந்தி மகான்தான். அதிலே ஆட்சேபணை இல்லை. கற்ருேருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்ற பழமொழி பொய் போய் விடுமா? காந்திமகான் என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அது ஒன்றும் பரவாயில்லை. யந்திரமெல்லாம் வேண்டாம் என்கிருரே, அதுதான் தவறு. யந்திர மில்லாமல் போனுல், மனுஷனுக்கு ஒரு சௌகரியமும் கிடைக்காது. என்ன அய்யா! எப்ப பார்த்தாலும் உழுது பயிர் செய்யும் தொழில் உத்தமம், நால் நாற்பது உத்தமம் என்று உபதேசம் செய்து கொண்டிருந்தால், நாகரிகம் போகிற வழி என்ன? எல்லாரும் காட்டு மிராண்டிகளைப் போல வாழ வேண்டியதுதான்'' என்று முதலியார் பேச்சை சற்று கடுமையாகவும் வேகமாகவும் பேசினுர்.

எப்பொழுதுமே, மன ஒற்றுமையுடனிருக்கும் இந்த இரண்டு பேர்வழிகளுக்குள், எப்படியோ, இன்றைக்கு அபிப்பிராய பேதம் வந்து விட்டது.

"முதலியார்வாள்! நீங்கள் எத்தனையோ லட்சம் சம்பாதித்திருக்கிறீர். எத்தனையோ லட்சம் செலவு செய்திருக்கிறீர். தொழிலிலிருந்து ஏராளமான லாபம் வரும் என்பதில் யாதொரு ஆட்சேபமுமில்லை. ஆனுல் அது அவ்வளவு நிலைத்த செல்வமில்லை. உழுது பயிர்செய்து, அதிலிருந்து கிடைப்பது, சுமாராக நிலைத்த செல்வம் என்று சொல்லலாம். காட்டாற்றிலே, படீர் என்று வெள்ளம் வருகிறது. பிறகு, சிறிது நேரத்துக் கெல்லாம், மணல்தெரிய,வறண்டு போகிறது. யந்திரத் தொழிலிலிருந்து வரும் லாபமும் காட்டாற்று வெள்ளத்தைப்போல நிலைத்திருக்காது'' என்ருர் சுப்பராயர்.

"கிணற்றுத் தவளை மாதிரி, நீங்கள் கூட பேசுகிறீர்களே! கோடிக்குமேலே பணம் வைத்திருந்தால், அவர்களை கோடீச்வரன் என்று பழைய காலத்திலே சொன்னுர்களே, தெரியாமலா சொன்னுர்கள்' கோடீச்வரன் என்று பணம் படைத்த சீமானை கும்பிட்டிருக்கிருர்கள். பெரிய மோட்டார் தொழிலைப்போல, ஒரு தொழிலைச் செய்தால்தான், ஹென்ரி போர்ட் அவர்களைப் போல, கோடீச்வரனுக ஆகமுடியும். மண்ணை நோண்டிக் கொண்டே யிருந்தால், பிடிக்குக் காலணு கிடைக்கும்; அவ்வளவு தான்'' என்று முதலியார் வெற்றிக் குரலோடு சொன்னுர்.

"முதலியாரே! இன்றைக்கு என்னமோ, உங்கள் மூளை சரியாக வேலை செய்யவில்லை. வழக்கமாக, எதையும் யோசித்து, புத்திசாலித்தனமாகப் பேசுகிறவர், இன்னிக்கு, ஏன் இப்படி, தடுமாறிப் பேசுகிறீர்? இப்போ, கொஞ்ச காலமாக, திடீர் திடீரென்று, வெள்ளைக்கார தேசங்களிலும் சீனுவிலும் யுத்தம் ஏற்படுகிறதே, என்ன காரணத்தாலே, தெரியுமா? நிதானமாக யோசித்துப் பார்த்துச் சொல்

னும்" என்று சுப்பராயர் அதட்டுவது மாதிரி கேட்டார்.

"அய்யர்வாள்! சண்டைக்குக் காரணம் கூட வேண்டுமாக்கும்" என்று பெரிய ஸ்தாயியில் துவக்கிய முதலியார், "சண்டை போடுகிறது புத்தியில்லாத்தனம். பஞ்சாயத்தினால் தீர்த்துக் கொள்ள முடியாத சங்கதியும் உலகத்தில் இருக்குமா? பைத்தியம் பிடித்தவர்கள்தான் சண்டைக்கும் வம்புக்கும் போவார்கள். ராஜா மாதிரி, ஒருவருக்கொருவர் போட்டி என்பதே இல்லாமல், ஒவ்வொரு கூட்டமும், ஒவ்வொரு தேசமும், ஒரு தொழிலை சிறப்பாக செய்தால்; அந்தக் கூட்டம் பணக்காரக் கூட்டமாகி விடும்; அந்த தேசம் பணச் செழிப்பில் புரளும். இதை விட்டு விட்டு, 'பணமா, அது விஷத்தைப் போல அல்லவா' என்று வைராக்கிய வேதாந்தம் பேசுவதில் என்ன புண்ணியம்" என்று முடித்தார்.

"சபாஷ்! முதலியார்வாள்! நீங்கள் இப்ப சொன்னீர்களே, அதுதான் யுத்தத்துக்குக் காரணம். மற்ற எல்லா தேசத்துப் பணமும் தனக்கு வந்து சேர வேண்டுமென்று ஒவ்வொரு தேசமும் போராசைப் பட்டு, யந்திரத் தொழில், மலிவான சாமான் என்று அசட்டுப் பிரசங்கம் செய்வதாலேதான், சண்டை முற்றுகிறது. பொன்னாசை கொடியது என்று பெரியவர்கள் சொல்லுகிறார்களே, அவர்கள் தெரியாமல் சொல்லுகிறார்களா? பாழாய்ப் போகிற ஜர்மன்காரனுக்கு, உலக வியாபாரமெல்லாம் தங்கள் தேசத்தோடுதான் இருக்க வேணும் என்று ஆசை. அதே மாதிரி ஜப்பானுக்கு. அதே மாதிரி இத்தாலிக்கு; அதே மாதிரி இங்கிலாந்துக்கு; அதே மாதிரி அமெரிக்காவுக்கு. இந்த மாதிரி ஆசையிருந்தால், போட்டி ஏற்படாதா? போட்டிக்கு கூப்பிடு தூரத்திலிருக்குப் பொறாமை தானாகவே வந்து சேருகிறது. அப்புறம் சண்டைதான். மண்ணிலே, இந்த மாதிரி தகராறே கிடையாது. அவனவன் தலைவிதி போலே, பருவத்துக்குத் தக்கபடி, பலன் கிடைக்கும். பயிர்த் தொழிலிலே, அதிகமாக, பொறாமைக்கு இடமில்லை" என்று சுப்பராயர் பேசிக்கொண்டிருக்கையில்,

"கணக்குப் பிள்ளைவாள்! கொஞ்சம் மூச்சை விட்டு விட்டுப் பேசுங்கள். மூச்சு விடாமல் பேசினால், கட்சி நிஜமாய் போய் விடுமா? வெகு பேஷ்! நடந்தால், கீழே விழுந்தாலும் விழுகிற ஆபத்து இருக்கிறது; ஆகவே நடக்காமல் இருப்பதுதான் உசிதம் என்றும், படுத்துக்கொண்டேயிருந்தால் நல்லது என்றும் யோசனை சொல்லுகிறவனைப் போல முட்டாளை உலகத்திலே காண முடியுமா? படுத்துக்கொண்டேயிருந்த ஒருவன் மாரடைத்துச் செத்துப் போனான்; ஆகையால் படுத்துக்கொண்டிருந்தால் ஆபத்து என்று இன்னொருவன் யோசனை சொல்லுவான். இந்த மாதிரி கேலிக் கூத்தைப்போல நீங்களும் பேச ஆரம்பித்து விட்டீர்கள். பொறுமை என்பது மனிதனுக்கு பிறவிக் குணம். அது பணத்தாலும் தொழிலாலும் ஏற்பட்டதல்ல. தரித்திர காலத்தி

லும் தோல்வி சமயத்திலும், பொறுமையை அதிகமாகப் பார்க்கலாம். உலகத்தின் தரித்திரத்தைப் போக்குவதற்கு, ஒரே ஒரு வழிதான் உண்டு. அது யந்திரத் தொழில் ஸ்தாபனம்தான்" என்று முதலியாரும் மூச்சு விடாமல் பேசித் தீர்த்து விட்டார்.

"முதலியார்வாள்! தரித்திரம் என்று தனியாக ஒன்று கிடையாது. ஆசை எவ்வளவுக்கெவ்வளவு பெருக்க மடைகின்றதோ, அதற்குத் தகுந்தாற் போல, தரித்திரமும் கூட வரும். தரித்திரம், தரித்திரம் என்று கண்டபடி, சில பேர் வழிகள் கூப்பாடு போடுகிறதைப் போல, நீரும் பேசுகிறீரே! திண்டுத் தலைகாணியும் சோபாவும் வெல்வெட்டு மெத்தையும் வேணும் என்று ஆசைப்பட்டு, அதற்கு கையில் பணமில்லாமல் போனால், "ஐயோ! தரித்திரம் பொறுக்க முடியவில்லையே" என்று கொடும் பாவி கட்டி இழுத்து அழுகிறதோ! திருப்தி உள்ளவனுக்கு தரித்திரம் கிடையாது. வேளாண்மை செய்யும் குடியானவனுக்கு பேராசை கிடையாது. அவன் எப்பொழுதும் திருப்தி கொண்டவன். வேளாண்மை செய்பவனுக்கு ஒரு நாளும் தரித்திரம் கிடையாது. இதைத்தான் காந்தி சொல்லுகிறார்" என்று சுப்பராயர் கொஞ்சம் குஷியாகப் பேசினார்.

"சரித்தான்! பழைய வேதாந்த பஞ்சாங்கம்தானே? பணம் சம்பாதிக்கத் தெரியாதவன், எல்லாரும் திருப்தி என்ற போர்வையைப் போர்த்துக் கொண்டு, சாப்பாட்டு ராப் வேதாந்தம் பேசத்தான் பேசுவார்கள். பூமியின் இதயத்திலிருந்து தங்கத்தை வெட்டி எடுத்துக்கொண்டு வருவதைப் போல அற்புதமாகத் தொழில் நடத்தும் சாமர்த்தியக்காரர்கள் ஒரு நாளும் அசட்டு வேதாந்தம் பேசமாட்டார்கள். உலக விதி அத்தனையையும் அவர்கள் தம் கத்தால் இழைத்துவிட மாட்டார்களா? சூரியன் ஆகாயத்திலிருக்கிறுன அல்லது காலடியில் அகப்பட்டுக்கொண்டு, பிரகாசித்துக் கொண்டிருக்கிறுன என்று உமக்குக்கூட சந்தேகம் வந்துவிடுமே! 'ராப்பிச்சை தாயே' என்று தினசரி கேட்கும் அழுகைக்குரலை, உலகத்தில் இனியும் கேட்கலாமோ? கொடிது கொடிது, வறுமை! தரித்திர காலத்திலே, மனிதன் எவ்வித அற்பத்தனமான காரியத்தையும் செய்யத் துணிந்து விடுவான். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி அல்லவா" என்றார் முதலியார்.

"உங்கள் பணப்பெருக்கு நாகரிகத்தினல், 'ராப்பிச்சை தாயே' என்ற அழுகைக்குரல் இல்லாமல் போகலாம். ஆனல், வேருெரு அழுகைக்குரல், ஆகாயத்தை முட்டிக்கொண்டு கிளம்புவது நிச்சயம். இன்னிக்கு போலந்தின் அழுகைக்குரல் உம்முடைய காதில் கேட்கிறதா? "பாவி! வெடிகுண்டு! எல்லாம் பாழாய்ப் போச்சே! இரக்கம் இல்லையா? அரக்கர்களா? இவர்களுக்குப் பைத்தியமா?" இந்த மாதிரி அழுகைக்குரல் தேவலை என்று உமக்குத் தோன்றுகிற தாக்கும்! தரித்திரத்தின் கொடுமையைக் கூட பொறுத்துக் கொள்ளலாம்.

இரக்கமில்லாத ராட்சதத் தன்மையை ஒருநாளும் பொறுக்க முடியாது" என்ருர் சுப்பராயர்.

"போங்காணும்! போம்! இந்தக் கட்டுப்பெட்டி வேதாந்தம் பேசிப் பேசித்தான், நம்ம நாடு தொலேந்தே போச்சே! எல்லாரும் ராப்பிச்சைக்காரர்களேப் போல, வாழுகிருர்களே! ஒரு பணக்காரனுக்கு, ஆயிரம் ஏழைகள் இருக்கிருர்கள். ஆயிரம் ஏழைகளின் ஆபாசத் தன்மைகளும், சேஷ்டைகளும் வெகு சீக்கிரத்தில் நாடு முழுவதும் பரவி விடுகின்றன. நம்மாலென்ன ஆகும் என்று நொந்துகொண்டே, எல்லாரும் மடிகின்ருர்கள். வாய்க்கு நல்ல பதார்த்தத்தை சாப்பிட்டு விட்டாவது, சாகலாமே? கிடைக்காதவைகளுக்கு, 'சீ இந்த திராட்சைப்பழம் புளிக்கும்" என்று பாசாங்கு வேதாந்தம் பேசிக்கொண்டு, பொய் வாழ்வு ஏன் வாழவேண்டும்" என்று முதலியார் பேச்சை முடித்து விட்டு, விடைபெற்றுக் கொள்ளாமல்கூட, வீட்டுக்கு அவசரமாகப் புறப்பட்டுப் போய் விட்டார்.

"முதலியார் சொல்லுவதில், கொஞ்சம் நியாயம் இருக்கிறது" என்று சுப்பராயர் முணு முணுத்துக் கொண்டார்.

சிறுவருக்கு

கும்பிடப்போகாத தெய்வம்

வி. ராமச்சந்திர ராவ்.

'ஏழு மணிக்கு நிச்சயமாய் நான் உன்னைப் பார்க்கிறேன்' என்று சொன்ன சீனு, ஆறேகால் மணி சுமாருக்கு சினிமாக் கொட்டகை வாசலில் நின்றது, முனியாண்டிக்குச் சந்தேகத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் இப்படி தலையில் துணியைப் போட்டு மூடிக்கொண்டு, டிக்கட் கொடுக்கு மிடத்தில் இருட்டான பாகம் எதுவோ அங்கே நின்று கொண்டு "ஸார், ஒரு தரை டிக்கட்—" என்று சீனு சொன்னபோது தான் அவனுக்கு தூக்கி வாரிப்போட்டது; ஆத்திரம் பொங்கி எழுந்தது.

சீனு இதுமாதிரி செய்வான் என்று தெரிந்தால், முனியாண்டி பணம் கொடுத்திருக்கவே மாட்டான். "ரொம்ப அவசரம் இன்னும் இரண்டு நாளில் தருகிறேன்" என்று சொல்லி, பத்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு போன சீனு, இன்னும்தான் பணம் கொடுக்கிறான்—வருஷம் ஒன்றாகப் போகிறது!

பொறுத்துப் பார்த்தான் முனியாண்டி. முதலில் "ஸார்—கொஞ்சம் பணத்தைக் கொடுத்தால் சமயத்திற்கு உதவியாக இருக்கும்" என்றான். பிறகு "என்னய்யா இது, வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுப்பது பாவமா? கொடுத்துத்தான் விடேன்" என்று கெஞ்சினான். ஒன்றும் பலிக்காமல் போகவே, "இன்றைக்கு இரவு ஏழு மணிக்கி வருகிறேன். பணம் கொடுக்க வில்லையோ, அப்புறம் பாரும்," என்று பயமுறுத்தி விட்டுப்போனான்.

எனவே நிச்சயமாய் பணம் வந்துவிடும் என்பது முனியாண்டியினுடைய முடிவு. முனியாண்டி அந்த ஊருக்குள்ளே பிரசித்தி பெற்றவன்—குத்துச் சண்டை பயில்வான்.

ஏழு மணிக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவன் ஆறு மணிக்கே வீட்டிலிருந்து கிளம்பி, சீனுவின் வீட்டைப் பார்க்க வந்து கொண்டிருந்தவன்தான் முனியாண்டி. நடுவில் தான் சீனுவை சினிமாக் கொட்டகையில் அவன் பார்த்தான். பார்த்த உடனே

“நமக்குக் கொடுக்கத்தான், யாரையோ கடன் கேட்பதற்காக இங்கே நின்றுகொண்டிருக்கிறான் சீனு” என்று நினைத்தான் முனியாண்டி.

ஆனால் சீனு ஒரு தரை டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே போனதும் முனியாண்டிக்குக் கோபம் தலை சுற்றிற்று. தானும் ஒரு நாலணா டிக்கட்டை வாங்கிக்கொண்டு அவனுக்குத் தெரியாமல் உள்ளே போனான், அவனைப் பின் தொடர்ந்து.

உள்ளே போன சீனு தன்னை யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றிப் பார்ப்பதைக்கண்டு முனியாண்டி பதுங்கிக் கொண்டான். தன் தலையில் ஒரு துணியைப்போட்டு மூடிக்கொண்டு, அடையாளம் தெரியாமலிருக்க ஒரு சின்ன பீடித்துண்டையும் எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான் சீனு. ஒருவரும் தன்னை அறிந்து கொள்ள முடியாது என்பது அவன் எண்ணம்.

சினிமா விளக்குகள் அணைக்கப்பட்டன. ‘பட்’டென்று தன் தலையில் விழுந்த ஒரு அடி சீனுவை திரும்பிப் பார்க்கச் செய்தது. அடி என்னமோ கொஞ்சம் உரத்துத்தான் விழுந்தது. திடுக்கிட்டுப் போய் சீனு திரும்பிப் பார்த்தான். முனியாண்டி அவனைப் பார்த்து இளித்தான்.

“பணம் இன்னிக்கி வரவில்லையோ—முதுகு வீங்கிப்போகும், பத்திரம்” என்ற வார்த்தைகள் அவன் அடிவயிற்றைக் கலக்கின.

என்ன செய்வான் சீனு?

—

புரியாத கோபம்

சீதாபதி

பிள்ளை என்றால் எல்லாம் பிள்ளையாகி விடுமா? பிள்ளை என்று இருந்தாலும் அந்த பிள்ளை மாதிரி இருக்கவேண்டும்' என்று பெற்றோர்கள் பேச்சுக்கு இலக்காக அமைந்தவன் குருமூர்த்தி. 'ஒரு கெட்ட பழக்கம் உண்டா, வாயிலிருந்து ஒரு அசுத்தப் பேச்சு உண்டா, இதுகளும் இருக்கே' என்று மேலே மேலே சிலாகித்து அடுக்கின பேச்சு.

இந்தப் பேச்சு எப்போது எழுந்தது தெரியுமா?

ஊரிலே நாலைந்து குடும்பத் தலைவர்கள் — சின்னவர்கள் தொனியில் கிழவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்களேன் — மண்டையைப் போட்டுவிட்டார்கள். அவர்கள் காலிலே நகம் முளைத்த நாள் முதல் உழைத்து உழைத்து, தேடின சொத்து எல்லாம் இந்த சின்னவர்கள் கையில் அகப்பட்டவுடன், அவர்கள் செய்த அட்டகாசத்தைப்பற்றி, ஊர் சிரிக்க வார்த்தைகள் கிளம்பினதிலே இந்த தாரதம்மிய பேச்சு எழுந்தது பெற்றோர்களிடையே.

வெளியே அவனைப்பற்றி இப்படி சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அவன் மனதிலே சில சமயங்களில் அலைத்துக்கொண்டிருந்தது என்ன என்பதை கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் உண்மையை கொஞ்சம் அறியலாம்.

அன்று அவன் ஆபீசிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தான். என்றைக்குப்போலத்தான். அசாதாரணமான மனநிலை ஒன்றும் இல்லை. தெருவில் அவன் விழிகளில் எத்தனையோ காட்சிகள் பட்டுத் தடுமாறிக்கொண்டிருந்தன. அந்த காட்சிகளில் அதுவும் ஒன்று.

இதுவரையில் குருமூர்த்தி எத்தனையோ உருவங்களை பார்த்தது இல்லையா என்ன? அப்போதெல்லாம் அவன் உறுத்து விழித்ததும் கிடையாது! அவன் ஹிருதயம் தாவிக் குதித்ததும் இல்லை. இப்போது போகிற போக்கிலே, கண்களில் தற்செயலாக விழுந்ததைப் பார்த்ததில் இந்த சித்தத் தடுமாற்றம் அவன் அறியாமல் ஏற்படுவானேன்!

எதையோ பார்த்துக் கொண்டு ரோடு மத்திற்கு விறுட்டென்று கண்களை திருப்பினபோதுதான் அந்தக் கார் மெதுவாக சுழன்று அவனருகில் போய்க்கொண்டிருந்தது. இன்னும் சில சுற்றுக்கள் அந்தச் சக்கரங்கள் சுழன்று விட்டன. அதற்குள்ளேயே பாதி காருக்குள்ளும், பாதி வெளியேயும் தெரியும்படி அசைப்பில்எதையோ பார்த்துக் கொண்டிருந்த

அந்த முகத்தை அவன் கண்கள் கவ்விப் பிடுங்கினதை, ஹிருதயம் பிடுங்கி பூட்டிவைத்துக் கொண்டது.

எல்லாம் சில க்ஷணங்களுக்குள்தான். அது எப்படி ஏற்பட்டது என்று அவனுக்கே தெரியாது. உணரவே முடியவில்லை. சுய ஞாபகமே இல்லாமல் போனதுதான் ஆச்சரியம். இன்னொருதரம் ஊன்றிப் பார்க்கும் ஆசைத் தூண்டுதலுடன், தலையை முன்னுக்கு நீட்டி, கண்களை கூராக்கிப் பார்த்தான். பார்வைக் கூர்மைதான் மங்கினது. கார் அவ்வளவு தூரத்துக்குப் போய்விட்டது.

அதுவரையில் அவன் மனது அதைப்பற்றி ஒன்றும் அவ்வளவாக கவலைப்படவில்லை. அந்தக் கார் மறைந்ததுமே, அவன் மனதில் முதல் முதலாக நினைவு எழுந்தது. 'அடடா, அதற்குள்ளே போய்விட்டதே பாழும் கார். இங்கே எங்கேயாவது நின்று தொலைக்கக் கூடாதா? இன்னும் ஒரு சில விநாடிகள் பார்த்திருந்தால் போதுமே' என்று.

அதோடு அவன் நினைப்பு முடிந்துவிட வில்லை. தொடர்ந்து நினைத்தான். என்ன' வசிகரம்? இவ்வளவுக்கும் அவ்வளவாக அழகு என்று சொல்ல முடியாது சாதாரணம்தான். ஆனாலும் அந்த சாதாரணத்தையும் எவ்வளவு தூரத்துக்கு வசிகரமான தாக்கிக் கொண்ட உருவம்! இந்த அளவுக்காவது இருக்க வேண்டாமா... ...'

இந்த அளவுக்காவது வேண்டாமா' 'என்று குருமூர்த்தி தனக்குள் சொல்லிக்கொண்டபோது எதையும் குறிப்பாக வைத்துக்கொண்டு நினைக்கவில்லை. பொதுவாகத்தான் அவனுக்குத் தோன்றியது. க்ஷணத் தோற்றத்தில் ஒரு உருவம் அவனை ஆகர்ஷித்துவிட்டது. அந்த உருவம் அவன் மனதில் பதித்து அது ஒரு லக்ஷிய உருவமாக ஆகிவிட்டது. அந்த தினுசில் மற்றதெல்லாவற்றையும் வைத்து நிறைபோடவேண்டும் என்று அபிப்ராயப்பட்டது, மனது.

அப்போது இன்னும் பல உருவங்கள் அவன். மனக்கண் முன்பு தோன்ற ஆரம்பித்தன. 'ஹூம்! இதுகளும் இருக்கிறதே நல்லகண், மூக்கு இருந்து என்ன பிரயோசனம்? எல்லாம் சேர்ந்து ஒரு மரக்கட்டைத் தோற்றத்தைஅளிக்கிறதே தவிர, அதிலே ஏதாவது உயிர் இருப்பதாக தெரிகிறதா? அதுதான் போகட்டும். போட்டுக்கொள்ளும் நகைகளில், உடுக்கும் உடைகளில் தான் ஏதாவது ஒரு நாகரீகம், ராங்கிப்போக்கு, அந்தஸ்து நிலை ஏதாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. உடல் அசைவிலே ஏதாவது குழைவு வேண்டாமா? ஒரே விறைப்பு 'மரம் போல!

அதற்கும்மேல் அவனுக்கு தோன்றினது. 'இந்த லக்ஷணத்தில் கொஞ்சம் அதிருப்தியைக் காட்டிக் கொண்டால் உடனே பிரமாதமாக பேச்சுக் கிளம்புகிறது. ஒழுக்கம் என்ற தராசில் வைத்து நிறுத்துப்பார்ப்பது. அப்புறம் அவன்கீழே விழுந்துவிட்டான் என்று கூக்குரல் இடுவது.'

'என்ன ஒழுக்கம், அர்த்தமற்ற பேச்சு, வேண்டி இருக்கிறது.

நிரந்தரமான ஒரு திருப்தியைக் கொடுப்பதற்கு வகை இல்லே!'

என்றெல்லாம் தனக்குள் கேள்வி, பதில் போட்டுக் கொண்டே குருமூர்த்தி வீட்டை அடைந்தான். விறுவிறென்று கோட்டை கழற்றி ஸ்டாண்டில் மாட்டினபோது, ஸ்டாண்டே ஆணி பிய்த்துக்கொண்டு ஒரு பக்கம் கீழே சரிந்து தொங்கினது. அதில் மாட்டியிருந்த எல்லா உடைகளும் கீழே விழுந்தன. அவனுக்கு அப்போது இருந்த உணர்ச்சி வேகத்தில், உடனே ஆத்திரம்தான் முன்னுக்கு வந்தது.

அப்போதுதான் அங்கு வந்த அவன் மனைவி, 'ஐயையோ, மெதுவாக மாட்டக் கூடாதோ' என்றாள்.

குருமூர்த்தி ஆத்திரத்தோடு அவள் பக்கம் திரும்பினான். 'ஆமாம், ரொம்ப அழகாக ஆணி அடித்து வைத்திருக்கிறாய், இல்லேயோ? கடன் வேலே....'

'ஏன், நீங்கதானே, எனக்கு சரியாக அடிக்கத் தெரியாது என்று அமர்க்களம் பண்ணி, அடித்து மாட்டினீர்கள்.'

'சரி, என்மேலே குற்றத்தை சாட்டத் தயாராக இரு. ஏன் அதை சரி பார்த்தா என்ன?'

'சரி இனிமேல் பார்க்கிறேன். டிபன் கொண்டு வரட்டுமா?'

என்ன டிபன்?

'உங்களுக்கு பிடித்தது தான்!'

'மண்ணுங்கட்டி எனக்கு பிடிக்கும். சொல்லித் தொலேயேன். ஊரைச்சுற்றி பேசித் தொலேக்காமல்...'

அதற்கு அவன் மனைவி பதில் சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அவன் வார்த்தை தொடர்ந்தது. 'ஆமாம், இதென்னது?'

'எது என்னது, எப்படி இருக்கேன்?'

குருமூர்த்தி மௌனமாக அவளேயே உற்றுப் பார்த்தான்.

'என்ன பார்க்கிறீர்கள்?' என்று கொண்டே அவன் மனைவி தன்னே ஒருதரம் ஆராய்ந்து கொண்டாள்.

'சரி, சரி, வாயை மூடிக்கொண்டு போ. காளி மாதிரி வந்து நிற்காதே பரட்டைத்தலேயும், விளக்கெண்ணெய் வழியற முகமுமாக. ......ஹூம்! எள்ளுத்தான் வித்யாசம்!'

'என்ன எள்ளுத்தான் வித்யாசம் காளி மாதிரி என்ன இருக்கேன். புரியாமல் இப்படி பேசினல் என்ன பண்றது?'

'என்னதான் புரியப்போகிறது, இந்த ஜன்மத்திலே உனக்கு! சரி, சரி கீழே போய்த் தொலே. தொந்திரவு பண்ணுமே.'

'ஏன் இன்னிக்கு இப்படி, அர்த்த மில்லாமே சிறி விழணும்? தொலேயரேன்' என்று கொண்டே முகத்தில் கடுப்பு ஏற, விறுட்டென்று அவன் மனைவி திரும்பி எட்டு வைத்தாள்.

குருமூர்த்தி அதற்குமேல் ஏதோ பதில் சூடாகச் சொல்லப் போனவன், மாடிப்படியில் அவள் உருவம் மறைவதைக் கண்டு வாயை மூடிக்கொண்டான். 'ஹூம்! இப்படித்தான் காலத்தை தள்ளித்தாணும், வேறே போக்கு' என்று வாய் முறுமுறுத்துக் கொண்டது.

சாந்தியின் குரல்

டி. எம். ஜம்புநாதன்

தேவி யசோதரையின் கவனம் எல்லாம் ஒவ்வொரு காலடி சப்தத்திலும் இருந்தது. அந்தப் பக்கமாகப் போகும் தோழியின் நடை கூட அவளை நோக்கி வருவதாக அவள் நினைப்பு; அந்த ஏமாற்றம் அவளுக்குப் புரிவதற்கு வெகு நேரம் ஆயிற்று. அந்தச் சேடி போவதற்கு அவ்வளவு நாழிகை பிடித்தது. அது தெரிந்தவுடன் மௌனமாக கவனிக்கும் நிலை, மறுபடியும்!

அந்த மௌன நிலையிலிருந்து அவளைக் குலைத்தது நிதானித்து வரும் பாதரக்ஷையின் அடிகள். சப்தம் வர வர நெருங்கி வந்து கொண்டு இருந்தது, கதவுப் பக்கமாக. அவள் கீழே விழுந்துவிடக் கூடிய நிலைமையில் கைகால்கள் ஆடுவது நன்றாக யாருக்கும் தெரிந்து இருக்கும். அவள் செய்கை ஒவ்வொன்றிலும் அர்த்தம் இல்லாமல் இருந்தது. காலடிச் சப்தம் நின்றுவிட்டது. ஆனால் அவளை அழைத்தது. நிச்சயமாக அவளுக்குத் தெரியும், எங்கு அது நிற்கும் என்று. கதவைத் திறப்பதற்குக்கூட அவளுக்கு மறந்து போய்விட்டது. தன்னையே மறந்து இருப்பவளுக்கு அது எப்படி ஞாபகத்திற்கு வரப் போகிறது?

"சாந்தி! சாந்தி!"

அவள் ஏழு வருஷங்களுக்கு முன் கேட்டதைவிட இன்னும் கம்பீரமாக இருந்தது அவருடைய குரல். இரண்டு வார்த்தைகளும் சாந்தியைக் கொண்டு வந்தன அவளுக்கு. தன் ஸ்திதியைத் தெரிந்து கொண்டாள்.

"சாந்தி! சாந்தி!"

மறுபடியும் பகவானின் குரல் மிதந்து வந்தது. அதற்குப் பிறகும் அவள் மனதை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை. கதவை நோக்கிப் பார்க்கும் கண்களில் நீர் ததும்பி நின்றது. கதவைத் திறந்தாள். கால்கள் மண்டி இடவேண்டும் என்று வளைந்தன. சாந்தியின் குரல், கொந்தளிக்கும் அவளுடைய சலனத்தைத் தழுவி நின்றது.

மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். கண்ணீரிலே மிதக்கும் இரண்டு கண்களும் அன்பிலே மிதக்கும் இரு கண்களும் பார்வையிலே சம்பந்தப்படுத்திக் கொண்டன. அவரை அப்பொழுது பார்க்கும்

பொழுது பல கௌதமர்கள் சேர்ந்து அவளுக்கு தரிசனம் கொடுத்தது போல் இருந்தது—அவ்வளவு தேஜஸ் அவர் முகத்தில்! கண்கள் சுதாவாக மூடிக்கொண்டன. ஓர் வகையில் அவளும் தன்னைப் போலவே மாறிவிட்டாள் என்பதை பகவான் தெரிந்து கொள்ளாமல் இல்லை. இன்னும் முழுமையும் மாறவேண்டும் என்றுதான் பகவானுடைய எண்ணமும். மாற்றமுடியும் என்கிற ஒரு திடமான நம்பிக்கையும் கூட!

அவளால் வாய் திறக்க முடியவில்லை. பேசுவதற்கு ஒன்றுமே இல்லையே! முன்பு இருந்த கௌதமராகவா வந்தார், அப்படி எல்லாம் பேசுவதற்கு. ஏழு வருஷ பிரிவிலே அன்பு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து தன்னிடம் அடக்கிக்கொண்டு இருந்தார்.

சிலை நகர்ந்து வருவதுபோல் யசோதரை வந்தாள் பகவானிடம் வைத்த கண் வைத்தபடி. தன் பார்வையை அவளால் திருப்ப முடியவில்லை. பகவான் அவளை ஒருதரம் கவனித்தார். அவளைப் பார்க்கும் பொழுது பகவானுடைய கண்களில் இரக்கம் தோன்றியது. எல்லா உயிர்களிடத்தும் உண்டாகும் இரக்கத்தைவிட அப்பொழுது உண்டானது ஒரு தனி விசேஷத்தைக் காட்டியது. அவரால் வேண்டாம் என்று தள்ளப்பட்டவள்தானே. அதனால் அவளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள். அந்தக் கஷ்டங்கள் அவரால் ஏற்படுத்தப்பட்டவை. எந்த உயிருக்கும் தீங்கு நினையாத பகவானுக்கு யசோதரையின் கஷ்டங்கள் போதும்.

பகவான் உள்ளத்தில் அவைகள் பலமாகத் தோன்றின. அவர் கண்களை மூடிக்கொண்டார். முன்போல ராணிக்குறிய ஆடம்பரத்துடன் யசோதரை இல்லை. அவள் ஆடை அலங்காரம் முதலியவற்றை விட்டு ஏழு வருஷங்கள் ஆய்விட்டன. இப்பொழுது அவள் சாதாரண உடைகளே அணிந்து இருந்தாள். அவளுக்கு என்று ஏற்பட்ட, ஒவ்வொரு சுகத்திற்கும் முட்டுக்கட்டை அவர்தான். ஏன்? அவளுடைய இன்ப வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்படுத்தியதற்கு அவர்தான் காரணம். அதுவும் அவரால் உண்டான கட்டாய முடிவுதான்.

அவர் மனதிலே படிந்து கிடந்த இந்த எண்ணங்கள் எல்லாம் தலை தூக்க ஆரம்பித்தன. ஒவ்வொரு எண்ணம் தோன்றும் பொழுதும் பகவானால், "சாந்தி! சாந்தி!" என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவளைப் பார்க்க மறுப்பதுபோல பெரிய இமைகள் கண்களை மூடிக்கொண்டன. கண்கள் மூடினாலும் துவண்டு நிற்கும் யசோதரையின் உருவம் பகவான் மனதில் முத்திரை இட்டதுபோல் இருந்தது. ஏழு வருஷமாக எதிலும் இச்சை கொள்ளாத பெரும் பயிற்சி இருக்கிறது. அந்தப் பயிற்சி வீணாகவா போய்விடும்?

அந்தப் பக்கம் அவர் மனதைத் திடப்படுத்திக் கொள்ள வெகுநேரம் ஆகவில்லை. அவ்வளவு குறுகிய நேரத்திற்குள் பகவான் எல்லாவற்றையும் விட்டு விலகி முன்போல தனியாகி விட்டார். பகவான் தான் முதலில் பேச ஆரம்பித்தார். எல்லோரிடத்திலும் பேசுவது எப்படியோ அப்படியே இருந்தது பகவான் பேச்சு. அதில் தனி விசேஷம் ஒன்றும் இல்லை. அந்தப் பார்வையிலும், பேச்சிலும் எந்த வித்யாசமும் தெரியவில்லை. மகுடியில் மயங்கிய நாகம்போல் இருந்தாள் யசோதரை.

யசோதரைக்கும் பலகோடி ஜீவன்கள் கேட்ட அதே உபதேசம்தான். பகவானிடம் இருந்துவரும் ஒவ்வொரு வார்த்தையும் யசோதரையைப் புனிதமாக்கிக்கொண்டு இருந்தது. பகவான் பேச்சை நிறுத்தினதுகூட அவளுக்குத் தெரியாது. பகவானுடைய ஒவ்வொரு உபதேசங்களையும் ஆராய்ந்துகொண்டு இருந்தாள் யசோதரை. பகவானுடைய இருப்பைக்கூட நினைக்கவில்லை அவள். பகவான் மெதுவாக நகர்ந்தார். "சாந்தி! சாந்தி!" என்று வெளியிலிருந்து தனியே விடப்பட்ட யசோதரைக்குக் கேட்டது. அவள் மனது சற்று அதன் நிலையை அடைய ஆரம்பித்தது.

ஒவ்வொரு சமயம் ராகுலனை நினைக்கும்போது அவனுக்காக வாவது முன்போல் தான் இருக்கவேண்டும் என்று, சற்று உறுதியற்றுத் தடுமாறும் அவள் திடமான எண்ணம். மற்றவர்களைப் பார்க்கும் பொழுது, தானும் அப்படி இருக்கக் கொடுத்துவைக்க வில்லையே என்று அவள் ஏங்கியது எத்தனையோ தடவைகள். கேவலம் மனித இச்சைகளுடன் போராடிக்கொண்டு இருந்தது அவள் பெண் மனம். பகவான் அழகையும் அவர் பேச்சையும் அவர் உடம்பையுமே அவள் நினைத்துக்கொண்டு இருந்தாள். ஏன்? அது என்றுமே அவள் மனதில் அழிக்க முடியாமல் பதிந்து போய்விட்டது.

கண் எதிரிலேயே எல்லா ராணிகளும் வாழ்வது யசோதரைக்கு பழைய—முந்தின—வாழ்க்கையை ஞாபகமூட்டியது. 'மற்றவர்களைப் போல் தானும் இல்லையே' என்ற ஏக்கம்தான் பிரதான ஸ்தானத்தை வகித்தது. ஆனால் இன்று அவளுக்குத் தனிப்பெருமை ஏற்பட்டு இருப்பதைப் பார்க்கும்போது, அந்த இச்சைகளுக்கு அவள் மனதிலே இடம் இல்லை. பகவானுடைய உபதேசங்கள் அந்த இச்சைகளை ஆக்ரமித்துக் கொண்டன. இருக்கும், விரப்போகும், மக்களுக்காக தன் சுகங்களைத் தியாகம் செய்வதில் அவளுக்கு எவ்வளவோ பெருமை தோன்றியது.

பகவான் கபிலவஸ்துவை விட்டுப் போகிறார் என்பது யசோதரைக்கு ஞாபகம் வந்தது. அந்த ஞாபகமே அவளுக்குத் துன்பம் தான். அவ்வளவு சிரமம், யசோதரைக்கு அந்த ஏழு வருஷங்களிலும், அவரை விட்டுப் பிரிந்த அவளுக்கு ஒவ்வொரு விநாடியும் சுகவாழ்வு பசை அற்று இருந்தது. அதை நினைத்தால் ஒருக்கால்

அவளுக்குப் பயங்கரமாகக்கூட இருக்கலாம். அந்தப் பயங்கரச் சுழலிலே இனி அகப்பட்டுக்கொள்ள அவளுக்கு இஷ்டம் இல்லை. பகவான் அருகில் இருந்தால் போதும் என்று அவள் திருப்தி அடைந்தாள். அப்படியே மனதிற்கும் சாந்தியைத் தேடிக் கொள்ளலாம். அந்த மகத்தான அன்பு அழைப்பிற்கு அவள் இணங்கினாள்.

தன்னைப்பற்றி முடிவுக்கு வந்த சமயத்தில் தான் எங்கிருந்தோ ராகுலன் ஓடிவந்தான். யசோதரை அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தாள். அப்பொழுதுதான் அவனை புதிதாகப் பார்ப்பதுபோல் இருந்தது அவளுக்கு. ராகுலனுக்குக்கூட ஆச்சரியமாய் இருந்தது. யசோதரை அப்படிப் பார்த்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பகவானைப்போலவே சாயை அவனுக்கும். அதை இப்பொழுதுதான் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. அவனும் பகவானைப் போல் ஆகவேண்டும். அவனையும் பயன்படுத்திக்கொள்ள பகவானைக் கேட்க அவளுக்கு எங்கிருந்தோ ஒரு தைரியம் வந்தது. மேலும் அவன் தனியாக கபிலவஸ்துவில் விடப்பட்டால் மனித சமூகத் திற்கு ஒரு வகையிலும் பிரயோஜனம் இல்லாமல் வீணாய் போய் விடுவான் என்று அவளுக்குத் தெரியும். சங்கத்திலே சேர்ந்து விட்டால் அவன் என்ன என்ன புனிதமான செய்கைகள் செய்யப் போகிறானோ? அவனையும் விட்டுப் பிரிய வேண்டிய அவசியம் இல்லை யசோதரைக்கு.

யசோதரை பகவானைப் பின் தொடர்ந்தாள். ராகுலனும் அவள் கையைப் பிடித்துக்கொண்டே வந்தான். பகவான் பக்கமாக அவள் கண்கள் தானாகத் திரும்பின. அவரைப் பார்க்கும் ஒவ்வொரு வினாடியும் அவனை சங்கத்தில் சேர்ந்துகொள்ளத் தூண்டியது. ராகுலனை அவரிடம் எப்படி அனுப்புவது என்று யோசித்தாள். கடந்து போகும் ஒவ்வொரு வினாடியும், தான் இருக்கும் சொல்ப நேத்திரத் திலே அவர்களை சங்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்று தயங்கு வதுபோல் இருந்தது. பரபரப்பான சமயத்தில் யசோதரைக்கு ஒரு யோசனை தோன்றியது. மெதுவாக கையை ராகுலனிடம் இருந்து விடுவித்துக் கொண்டாள். யசோதரை சற்றுக் குனிந்து, "அப்பா உன் பிதுர் ராஜ்ய சொத்தை உன் தகப்பனாரிடம் போய்க் கேள்" என்றாள்.

ராகுலன் தயங்கித் தயங்கி அடிக்கடி தாயாரைப் பார்த்துக் கொண்டே அவரிடம் போனான். அதே வார்த்தைகளை வெகு சுலப மாகக் கேட்டுவிட்டான். பகவானுடைய கருணை ததும்பிய பார்வை ராகுலனிடம் இருந்து விலகிப் போய் யசோதரையை அடைந் தது. அவள் கண்களிலே ஒரு ஊர்ஜிதத்தை பகவான் கண்டார் யசோதரை தலையை வணங்கினாள்.

"சுவாமி கொடுக்கலாமா?" என்று கேட்டான் பிரக்ஞை. 'கொடு' என்று பகவானிடமிருந்து பதில் வந்தது. மஞ்சள் சாயம் ஏறிய

துண்டு ஒன்று ராகுலனுக்குக் கொடுக்கப்பட்டது. ராகுலனுக்கு ஒன்றும் புரியவில்லை. கூட்டத்தை தாண்டி எட்டி நிற்கும் யசோதரையை, "இது எல்லாம் என்ன?" என்று ராகுலன் கண்கள் கேட்டன. யசோதரைக்கு பரம சந்தோஷம். அவளைக் குறிப்பாகப் பார்க்கும் பகவானுக்கு உண்மை தெரிந்தது.

யசோதரையும் புறப்படத் தயாராய் இருப்பதை சிஷ்யன் கவனித்தான்.

"சுவாமி! நமது சங்கத்தில் பெண்கள் சேரலாமா" என்று கேட்டான். பகவானுக்குத் தெரியும் யாரைக் குறித்து இந்தக் கேள்வி பிறந்தது என்று. பகவான் மெதுவாக யசோதரையின் பக்கம் திரும்பினார். அவளும் பக்கத்தில் வந்து விட்டாள். மற்ற சிஷ்யர்கள் எல்லோருக்கும் ஆச்சரியமாய் இருந்தது. பகவான் கால் அடிகளில் தன் தலையை வைத்து நமஸ்கரித்தாள் யசோதரை. எவ்வளவோ கண்கள் அவளைக் கவனிப்பது அவளுக்குத் தெரியாது. உலகத்தையே காக்க வந்த கை வாழ்த்தியது. 'தழைத்து வரும் மரக்கிளையை வளைத்து விடலாம். யசோதரையை முற்றிலும் புனிதமாக்கி விடலாம்' என்று பகவான் அவள் கண்களிலே கண்டு கொண்டார்.

'கொடு' என்று பதில் வந்தது.

மஞ்சள் உடையை வாங்கிக்கொண்டபோது யசோதரைக்கு உடல் சிலிர்த்தது. பரமானந்தத்தில் லயித்துக் கண்களை மூடிக் கொண்டாள். 'சாந்தி, சாந்தி' என்ற வார்த்தைகள் அவளுடைய மனத்திலிருந்து மலர்ந்து எழுந்தன.

ஓரங்க நாடகம் :

பிரதாப் சிங்

கு. ப. ராஜகோபாலன்

(ராஜபுதனத்தின் ஓரத்தில் ஒரு காடு. அதன் நடுவில் அமைந்த ஒரு குடிசையின் வாசலில் ராணா பிரதாப் சிங் நின்றுகொண்டிருக்கிறார். பக்கத்தில் அமர்சிங் நின்றுகொண்டிருக்கிறான்.

இருட்டிக் கொஞ்சநேரம் ஆகிவிட்டது. ஜகத்தின் வாயடைபட்டது போல திடீரென்று மௌனம் எங்கும் நிறைந்தது. தூரத்திலிருந்த ஆரவல்லி மலைகளின் சாரல் சதுப்புகளிலிருந்து கிளம்பிய “கொள்ளிவாய் பிசாசுகள் மட்டும் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. நடுநடுவே ஏதாவதொரு காட்டு மிருகம் அலறிய சத்தம் கேட்கிறது.)

அமர்சிங் :—மகராஜ்! இன்று என் இப்படிக் கலங்குகிறீர்கள், ஆனாலும் ?

பிரதாப சிங்:—என்ன அமர், எப்பேர்ப்பட்டவனையும் மனங் கலங்க வைக்குமே நமது நிலைமை. ராஜபுத்திர குலம் வீழ்ச்சியடைந்து விட்ட விபரீதம்தான் என்னை—

அ :—நீங்கள் இருக்கிறவரை அந்த வார்த்தையை யார் சொல்லத் துணிவார்கள் ?

பி :—ஈன ஜாதியினர் போல் ராஜ புத்திரர்கள் மொகலாயருக்குத் தலை வணங்கிப் பணிந்துபோகும் காலமா வந்துவிட்டது? ராஜஸ்தானத்தின் மானத்தை இன்னாள்வரை, பெண்டு பிள்ளைகளையும் பலியிட்டு உயிர் கொடுத்துக் காத்த சிங்கங்கள் நரிகள் ஆகிவிட்டனவா ?

அ :—நீங்கள் இருக்கிறவரை—

பி :—அதென்ன பிரயோஜனம், நான் இருந்தென்ன பயன் ? நான் இறந்தது போலத்தான்......எங்கிருந்தோ நேற்று ஹிந்துஸ்தானத்தில் வந்து நுழைந்து அன்னியனுக்கு ஆளாகி அவர்களிடம் உத்தியோகம் பெறும் துரோகிகளாக ராஜபுத்திரர்கள் மாறிவிட்டார்களே ! மொகலாயர்களை நான் குற்றம் சொல்லவில்லை. அவர்களை நான் மெச்சக்கூடச் செய்கிறேன். அவர்கள் வீரத்திற்கும், ஊக்கத்திற்கும். ராஜ புத்திரர்களைத்தான் நான் கேட்கிறேன்.

அ :—உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் ?

பி :—இல்லாமலென்ன ? இருக்கிறவர்கள் என்ன, சோறு தின்கவில்லையா ? குலத்தை, குன்றின் மேல் விளக்காகத் தூக்கிவைத்த

அஞ்சா நெஞ்சமும் சுயமரியாதையும் எங்கே போய் விட்டன? மொகலாயரை எதிர்த்துப் போராட இப்போது ஏன் வலுவற்றுப்போய் விட்டார்கள் ராஜ புத்திரர்கள்? தேவி மாதாவின் அருள் குன்றி விட்டதா?......இல்லை, அவள் மறக்கமாட்டாள். ராஜ புத்திரர்கள் தான் தங்கள் கடமையை மறந்து விட்டார்கள்.

அ:—அவர்கள் மேல்தான் என்ன பிசகு, மகராஜ்?

பி:—என்ன பிசகா? இன்னும் என்ன பிசகு, செய்யவேண்டும்? தங்கள் தர்மத்தைக் கைவிட்டு விட்டார்கள். தியாக புத்தியைப் பறிகொடுத்து விட்டார்கள். டாம்பீகத்தில் ஈடுபட்டு வலிமையை விற்றுவிட்டார்கள். ஆம்......பரஸ்பர அசூயையாலும் ஒற்றுமையில்லாமையாலும் அவர்களிடையே ஐக்ய பத்தியம் போய்விட்டது...

அ:—நீங்கள் ஏன் மறுபடியும் அந்த ஐக்ய பத்தியத்தை ஸ்தாபிக்கக் கூடாது?

பி:—இனிமேல் எப்படி முடியும்? சுக வாழ்வால் ஏற்பட்ட ஒரு தளர்ச்சி நம்மை வந்து ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது. ராஜபுதனம் சீர்குலைந்துவிட்டது. இனிமேல் என்ன செய்வது?

அ:—நீங்களே தளர்ச்சி கொண்டால்?

பி:—ஓரிருவர் தனிப்பட்டு நின்று என்ன பயன்? அவர்களுடைய எதிர்ப்பு எவ்வளவு பலமாயிருந்தாலென்ன? மொகலாயர்களுடைய சைனியம் அவர்களைச் சுலபமாக ஒடுக்கிவிட்டது.

அ:—நீங்கள் ஒடுங்கவில்லையே! அக்பர் பாதுஷாவிற்கு நீங்கள் முடிசாய்க்கவில்லை. அன்னியனுக்கு அடிமையாகாத ஒரு ராஜபுத்திரர் இருக்கிறீர்கள். ராஜபுதனம் மறுபடியும் சுயேச்சை பெற்று, ராஜபுத்திரர்கள் பெயர் மறுபடியும் களங்கமற்று ஓங்கும் வரையில் படுக்கையில் படுப்பதில்லை யென்றும், சுவர்ண பாத்திரத்தில் சாப்பிடுவதில்லை யென்றும் கடுமையான விரதம் பூண்டிருக்கிறீர்களே.

பி:—என்ன பயன்?

அ:—ராஜஸ்தானத்தில் ராஜபுத்திரன் இல்லாமற்போகவில்லை!

பி:—சித்தூர் வம்சம்—

அ:—ராணா பிரதாப் சிங் உயிருடன் இருக்கிறார்.

பி:—சித்தூர் போய்விட்டது!

அ:—ராஜபுத்திர வீரம் போகவில்லை!

பி:—ஏன்?

அ:—அது அமரஜோதி!

பி:—எப்பேர்ப்பட்ட வம்சம் அம்பர வம்சம்! மான்சிங் அதில் வந்தா பிறக்கவேண்டும்! துரோகி! மொகலாயனுக்குத் தன் தங்கையை விற்றானே—பதவிக்காக!

அ:—அவன் துரோகி—அவன் பெயரை உங்கள் வாயால் உச்சரிக்கக் கூடாது!

பி:—அவனைச் சொல்லுவானேன்? நான் ஏன் ராஜ்யத்தை விட்டு விட்டு இங்கே வந்து இருக்கிறேன். மொகலாயருடன் யுத்தம் செய்து உயிர் துறக்கவேண்டியவன், பேடிபோல இங்கேன் வந்து குடும்பத்தை நடத்திக்கொண்டிருக்கிறேன்? குடும்பம், பெண்சாதி, பிள்ளை—என்ற பிரமை—அதல்லவா என்னை இப்படிச் செய்து விட்டது.

அ:—நாங்கள் அல்லவா உங்களை நிர்ப்பந்தம் செய்து இங்கே வைத்திருக்கிறோம்.

பி:—உங்கள் நிர்ப்பந்தத்திற்குட்பட எனக்கென்ன அதிகாரம்? என் குடும்பத்தைக் காத்து என் மானத்தை இழந்தேன் ... சை! ... உன் மானமா?—ராஜஸ்தானத்தின் மானம்! நான், ராஜபுதனத்தைக் காக்க வேண்டியவன். இங்கே இப்படி பெண்டு பிள்ளைகளுடன் உழன்று கொண்டிருந்தால், ஐயையோ!— ராஜ புத்திர சரித்திர மல்லவா அதோகதி யாகிவிடும்! என் எண்ணமோ—

அ:—உங்கள் எண்ணம் இல்லையே—

பி:—நான் துரோகி! பவானி ஆணை! அவள் என்னை மீட்பாளாக! இந்தக் குடும்ப வாஞ்சையிலிருந்து என்னை விடுவிப்பாளாக!

(உரக்கக் கத்துகிறார்)

அ:—மகராஜ்! சாந்தமடையுங்கள்.

ராணி துர்க்கா:—(பிரவேசித்து) எதற்காக இப்படி ஆயாசப்படுகிறீர்கள்? எதற்கும் சரியான காலம் வரவேண்டும். கால பலம் சரியாக இல்லை. காலம் மாறும். பாண்டவர்களே காலம் மாறுமென்று காட்டில் காலங் கழிக்க வில்லையா? ஆனால் — வேறு எந்தக் கஷ்டமும் பட்டு விடலாம். வறுமையுண்டே, அதுதான் தாங்க முடியாததாக இருக்கிறது. நாம்கூட சகித்து விடலாம். ஆனால் குழந்தைகள்—

பி:—உம், என்ன சொல்லுகிறாய் துர்க்கா?

ரா:—குழந்தைகள் தான் ஏமாறுகிறார்கள்.

அ:—வாழ்க்கையின் விபரீதமான ஏற்றத் தாழ்வுகளை அறியாத பருவம் அல்லவா?

ரா:—நமது நிலைமை அவர்களுக்கு அர்த்தமாகவில்லை.

அ:—எப்படி ஆகும்? கண் கண்டு அனுபவித்த ராஜ போகம் ஒரு கனவுபோல மறைந்து விட்டால்! பாவம்! சவலைப் பிள்ளைகள் போல ஏக்கம் கொண்டு குன்றுகிறார்கள்.

பி:—(கோபத்துடன்) ஹூம்! என்ன சொல்லுகிறீர்கள் இருவரும்?

ரா:—ஒன்றுமில்லை. குழந்தைகள் நமது சோகம் கவிழ்ந்த முகங்களைக் கண்டு பயந்து மௌனமாகிறார்கள்.

அ:—அவர்களுடைய கஷ்டம்தான் சகிக்க முடியவில்லை.

ரா :—நமக்குத் தெரிகிறது நமது லட்சியத்தின் மேன்மையும், வீரத்தின் கௌரவமும்—நாம் குழந்தைகளல்ல. அவர்கள் அக்ஞானிகள்! இருக்கட்டும்! ஈசுவரன்—தேவி, கைவிட மாட்டாள், தைரியமும் நம்மைக் கைவிடாது.

பி :—(கோபம் பொங்க) சீ, போ அந்தப்புரம்! யார் உன் வேதாந்தத்தைக் கேட்டது? உன்னாலல்லவா நான் மானத்தை இழந்தேன்! உனக்காவது — நீ ராஜ புத்திர ஸ்திரீ!— மானம் இருந்திருந்தால் என்னை அன்றே யுத்தகளத்திற்கு அனுப்பியிருப்பாய் — உன்னைச் சொல்லி என்ன பயன்? என் மதியல்லவா மங்கிப்போய் விட்டது! உன்னையும் உன் குழந்தைகளையும் காப்பாற்ற இந்த ஈன வாழ்வு வாழ உயிரை விற்றுவிட்டேனே, அடாடா!

(பெருமூச்சு விடுகிறார்.)

ரா :—ராஜ புத்திர வீரன் இந்தமாதிரி ஏங்குவது வழக்கமில்லை. காலத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டியது வீரத்திற்குக்கூட மிகவும் அவசியம். ஆயிரம் பேர்களுக்கு முன்னால் இருவர்கள் மூடத்தனமாய் போய் விழுவதும் பேதமை. புலி பாய்வதற்குத்தான் பதுங்கும், அது பயப்படுவதன்று, ஒளிவதன்று.

பி :—உனக்கெப்படித் தெரியும் ஒரு வீரன் மனத்து வேதனை? என்ன வானாலும், ராஜபுத்திர குலமானாலும்—நீ பெண்!

ரா :—நான் மேவார் ராணி!

பி :—இல்லை யென்றுதான் நிரூபித்து விட்டாயே! வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? வீரனுக்கு முன்யோசனையே கிடையாது—கூடாது! எந்த நிமிஷம் யோசனை செய்ய ஆரம்பிக்கிறானோ அந்த நிமிஷம் முதல் அவன் வீரன் அல்ல—பயங்கொள்ளி!

ரா :—(கோபத்துடன்) சித்தூர் வம்சத்தில் பயங்கொள்ளிகள் கிடையாது. என் கையைப் பிடித்தவர் பயங்கொள்ளி அல்ல!

(மறுபுறமிருந்து குழந்தைகள் கத்தும் சத்தம். துர்க்கா உள்ளே ஓடுகிறாள்)

பி :—அவள் தான் என்ன செய்வாள் பாவம்! மகா தைரியசாலிதான்!

அ :—ராணியின் திடம் யாருக்கும் வராது!

(துர்க்கா உரக்க அழும் சத்தம் கேட்கிறது.)

பி :—(கேட்டு) என்ன துர்க்காவா அழுகிறாள்? என்ன விபரீதம் இன்று? (உரக்க) துர்க்கா இங்கே வா! ஏன், எதற்காக இந்த அதைரியம்?

ரா :—(பிரவேசித்து பிரதாபின் காலில் வந்து விழுந்து) என்னையும் கொன்று, குழந்தைகளையும் கொன்று விடுங்கள். நீங்கள் அக்பரை எதிர்த்துச் செல்லுங்கள். இந்த வாழ்வு இனிமேல் வாழ முடியாது! வேண்டாம்! நானே நெருப்பில் பிரவேசித்து விடுகிறேன்.

பி:—என்ன நடந்தது, சொல்!

ரா:—இரவு உணவிற்கு விதியில்லாமல் வாழலாமா?

பி:—நாம்தான் உபவாசமாயிற்றே!

து:—குழந்தைகள்!

பி.—அமர் செய்த ரொட்டிகள்!

ரா:—கொஞ்சம்தான் பாக்கி இருந்தது. அதை அவர்களிடம் கொடுத்துவிட்டு உங்களிடம் வந்தேன். இப்பொழுது காட்டுப் பூனை யொன்று வந்து அதையும் எடுத்துக் கொண்டுபோய் விட்டது.

பி:—குழந்தைகள் பட்டினியா!

ரா:—இனிமேல் என்னால் உயிர்வாழ முடியாது!

பி:—(மெய் மறந்து உரக்க) அமர்!

அ:—மகராஜ்! இதோ இருக்கிறேனே!

பி:—(தீர்மானமாக) பிரதாப் பணிந்து விட்டான், சமாதானத்திற்குத் தயார் என்று அக்பரிடம் தெரிவி, போ! நிற்காதே இங்கே!

அ:—மகராஜ்! பதற வேண்டாம்!

பி:—(கேட்காமல்) துர்க்கா, ராஜா புத்திர ஜோதி நசித்து விட்டது. உளுத்துப்போன மூங்கிலாகி விட்டது. அரண்மனைக்குத் திரும்புவோம் வா, அக்பரின் அடிமைகளாக! காடும் பசியும் கஷ்டமாக இருக்கின்றன. தியாகம் செய்ய உள்ளே ஒன்றும் இல்லை.

து:—மகராஜ்! ஒரு வார்த்தை!

பி:—ஒரு வார்த்தையாவது, அரை வார்த்தையாவது! க்ஷத்திரிய குலத்தை அன்று பரசுராமன் அழித்தார் என்பது கதை. இன்று அது பூண்டற்றுப் போய் விட்டது.

ரா:—(தடுத்து) இல்லை, இன்றும் நாம் தலையெடுக்கலாம்!

பி:—முடியாது. இதுதான் பரீட்சை, அதற்கென்ன, நாளைக்கு சுயபுத்தி வந்து திரும்பவும் அக்பரை எதிர்க்கலாம். ஆனால் மறுபடியும் சோர்வு வரும். ஆகா! அக்பர் மகா சாமர்த்திய சாலிதான், குலைக்க முடியாத ராஜ புத்திர வீரியத்தை எவ்வளவு வகைகளில் இடக்கிற்கேற்றவாறு குலைத்து விட்டான்!... சரி, ராஜஸ்தானத்தின் சரித்திரம் முடிவடைந்து விட்டது. இனி தூங்கலாம், வா!

பெண்

கனவிலே படித்த ஒரு கவிதையை வெளியே சொல்லவோ, எழுதவோ முடியாமல் போய்விடுகிறது. அந்தக் கனவைப் போல அவள் அவ்வளவு அழகாக இருந்தாள். சரிதான். அவளை வழிபடுவதற்கு ஒருவர்பின் ஒருவராக வந்தார்கள்; தலை குனிந்து வணங்கினார்கள்.

அவள் ஹிருதயத்திலிருந்து கர்வ சுவாசம் கிளம்ப ஆரம்பித்தது. அவள் நெற்றியிலே பளீரிடும் அலக்ஷியம் குறுக்கிட்டு ஓடினது. அவளுடைய காலடியிலே—சமுத்திரத்தின் மீது நடப்பது போன்ற—ஒரு கம்பீரத்தை உண்டாக்கினது. அலைகள் அவளை உயரே உயரே தூக்கிப் பிடித்தன.

இப்படியாக அவள் பெண்ணாக வளர்ந்து விட்டாள்! அவளுடைய பார்வைக்கு ஒரு சக்ரவர்த்தியின் உத்திரவு பலம் இருந்தது.

* * *

வீட்டிலேயே இருந்துகொண்டு தன் அறிவைச் செலுத்தி ஒரு தாய் மனைவிக்குரிய கடமைகளை செய்துகொண்டு இருக்கும் பெண்மை ரொம்பவும் விரும்பக் கூடியதும் போற்றத்தகுந்ததும் ஆகும்.

வீட்டின் பொறுப்பில் ஒரு சிக்கலும் ஏற்படாத ஒரு கட்டுப்பாட்டை உண்டாக்கி, சலிக்காத பொறுமையுடனும், குறையாத அன்புடனும், ஏமாற்றம், கஷ்டம் நிறைந்த வாழ்க்கை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவள் கடமையாகும்.

* * *

பெண்ணே, சகோதரி! ஆண்களைப் போல நன்றாக உங்களால் செய்ய முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. ஏன், எப்போதுமே உங்களால் செய்யமுடியாதது தான். இப்படிச் சொல்வதற்கு என்னை மன்னிக்கவும்.

உங்களிடமிருந்து ஒரு பெரிய கவியையோ அல்லது சைத்ரீகனையோ, அறிவாளியையோ, வேதாந்தியையோ உண்டாக்கித் தரமுடியுமா? என்று எனக்கு சந்தேகம். அறிவாளி என்பதனால், சாதாரணமான ஞாபகத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல. வாழ்க்கையில் ஒரு புது உணர்வு ஏற்படுத்தக் கூடியதற்கானதை சொல்லும்படியான், கொடுக்கும் படியான ஒரு ஆீதர்

சம் உங்களிடம் ஏற்படுமா என்பதுதான்.

* * *

பெண், ஒருதரம் விழுந்து விட்டால் விழுந்தவள்தான்!

* * *

பெண்ணின் வாழ்க்கை நாடிதான் காதல். அவள் ஆத்மாவின் உயிர் நிலையும் அதுதான். அவளுக்கு அதுதான் சட்டம். அந்த சட்டத்துக்கு கீழ்ப்படிவதினின்று வேறு எதுவும் அவளை தடுக்க முடியாது.

* * *

தேவர்களும் பொறாமைப்படக் கூடிய இரண்டு வித புன்னகைகள் பெண்ணின் உதடுகளிலே ஏறும்.

ஒன்று, வார்த்தைகள் வாயை விட்டு வெளிக்கிளம்பும் முன்பே, காதலை ஒப்புக் கொள்கிற புன்னகை!

முதல் குழந்தை பிறந்த உடனே, அதற்கு ஒரு தாயின் அன்பைக் காட்டி உறுதி கூறும் புன்னகை இன்னொன்று.

* * *

பொறுமை மிகுந்த ஒரு பெண்ணின் விஷ குணம், ஒரு பைத்தியம் பிடித்த நாயின் பல்லை விட ரொம்ப ரொம்பக் கொடியது.

* * *

ஆணுக்கும் பேச்சு எவ்வளவு அத்யாவசியமானதோ, அதே மாதிரி பெண்மைக்கு மௌனம் முக்யமானது. யார் இதை மறுக்க முடியும்?

* * *

பெண்கள் எப்போதுமே இளக்கமான மனது உள்ளவர்கள். அந்த இனத்துக்கே பெருமையாக அமைந்துள்ள குண விசேஷம். ஆகையால் இந்த மிருதுவான உணர்ச்சி இல்லாத ஸ்திரீகள் தங்கள் இனத்துக்கே ஒரு அவகேடாக கருதப்படுகிறார்கள்.

* * *

கண்ணீர்! பெண்களுடைய சிறந்த பொக்கிஷம் அல்லவா அது!

* * *

நமக்கு ஏற்படும் நெருக்கடி சந்தர்ப்பங்களில் நமது துரதிர்ஷ்டங்களை, சாந்தப்படுத்த வேண்டியவர்கள் பெண்கள்தான்.

* * *

பருவ காலங்கள் நான்கைப் போல, பெண்களாகிய நமக்கும் நான்கு பருவ காலங்கள். குட்டிகளாக ஓடித் திரியும் காலம் ஒன்று. சந்தோஷம்! நமது ஹிருதயம் தனக்குள்ளேயே மகிழ்ந்து மகிழ்ந்து கொள்கிறது. காதல் என்ன வென்று தெரியாது அப்போது. நாம் காதலித்து, காதலுக்குப் பாத்திரம் ஆகிறோமோ அது அடுத்தது. அது ரொம்ப குறுகினதாகப் போகிறது. அதிலேதான் எவ்வளவு அழகு இருக்கிறது! அத்தனை இனிமையும் எவ்வளவு சீக்கிரம் போய் விடுகிறது. போவதே தெரியாமல்! வாழ்க்கையிலே ராஜாங்கமான காலம் அதுதான்!

சின்னக் கைகள், ரோஜா வர்ணம் படர்ந்த சிறு கன்னங்கள் இவைகளோடு நம் கைகளில் ஏதோ ஒன்று சிறிதாக கை கால்களை ஆட்டிக் கொண்டிருக்கிறதே. இரவும் பகலும் நம்மை அதே நினைவாக ஆக்குகிறதே குழந்தை! அந்தக் காலம் மூன்றாவது.

அப்புறம்! நமக்கு பிரிய மானவர்கள் எல்லாம் போய்விடுகிறார்கள். அதுதான் கடைசி.

* * *

பெண் அடிமையாக இருந்தால் ஆண் சுதந்திரமாக இருக்க முடியுமா?

* * *

ஒரு முட்டாளுக்கு எப்படி பதில் சொல்லுவாய்? அவனுடைய முட்டாள் தனத்துக்கு தக்கபடி தானே!

அதே மாதிரிதான் ஒரு பெண்ணுக்கும், அவளுடைய பெண்மை குணத்துக்குத் தக்கபடி பதில் சொல்ல வேண்டி ஏற்படுகிறது.

* * *

ஆணினுடைய அகம்பாவத்தைப் புண்படுத்துவதிலே எப்போதும் பெண்ணுக்கு ஒரு ஆனந்தம்.

ஆனால் ஆண் அடையும் சிறந்த ஆனந்தம் அந்தப் பெண்ணின் விருப்பங்களைத் திருப்தி செய்வதில்தான்.

* * *

உங்கள் அழகான முகங்கள்! நல்ல குணம் படைத்தவர்கள், புத்திசாலிகள் எல்லோரையும் அது முட்டாள்களாக ஆக்கிவிடுகிறது. அது மட்டுமா? துரோகிகளாகவும் ஆக்கிவிடுகிறது.

* * *

ஹும்! என்ன ஹிருதயம், மனதுகள் இந்த ஆண்களுக்கு! தன்னைப்பற்றிய அக்கரையே இல்லாமல் ஆகிவிடுகிறார்களே பெண்கள்! அவர்களுடைய உயர்வுக்கு ஆண்கள் கிட்டவே போகிறதில்லையே!

* * *

ஆடவர்களில், சொர்க்கம் நரகம் என்றெல்லாம் பிரிக்க முடியும். நல்லவர்கள் கெட்டவர்கள் என்று பிரிவினை இருக்கிறது.

ஆனால் பெண்கள்! அவர்களே சொர்க்கமும் நரகமும் சேர்ந்தவர்கள். பிரிக்க முடியாதவர்கள்.

* * *

'பெண்களை நான் அறிந்திருக்கிறேன்' என்று நான் சொல்லும்போது, நான் அவர்கள் அறிந்துகொள்ளவே இல்லை என்று எனக்குத் தெரியும் நன்றாக. நான் பழகின ஒவ்வொரு ஸ்திரீயும் எனக்கு புதிர்தான். ஏன் தனக்கே அவள் ஒரு புதிர் என் பதில்கூட எனக்கு சந்தேகமே இல்லை.

* * *

சமூக வாழ்க்கையில் பெண்களோடு சேர்ந்து இருத்தல் அவசியமான அதிருப்திதான். ஆகையால் முடிந்த மட்டுக்கு அதை விலக்கிக் கொண்டிரு.

* * *

பெண்ணிலிருந்து பிறக்கும் ஆண், பெண்ணாலேயே தான் சாகவேண்டும்.

விஷவாயு

வே. ம.

விஷவாயுப் பிரயோகம் கண்டிப்பாக நடைபெறும் என்பதை எல்லா சர்க்கார்களும் ஒப்புக் கொண்டு விட்டார்கள்; அதற்குத் தகுந்த ஜாக்கிரதையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விஷவாயுப் படையெடுப்புகளை சமாளிப்ப தெப்படி என்பதில் ஜனங்களை பயிற்சி செய்து வருகிறார்கள். விஷவாயு—முக மூடிகள் லட்சக் கணக்கில் தயாரிக்கப்பட்டு, முகங்களை அலங்கரித்து வருகின்றன. ஒரு முக மூடிக்கு 15 டாலர் (45 ரூபாய்) விலையாக இருந்தது. நிறைய வியாபாரம் ஆவதினால் விலை சரிபாதியாக குறைக்கப் பட்டது. வாயு நுழையாதபடி தயாரிக்கப் பட்ட 'மெடல்' டேராவும் வழக்கத்தில் வந்திருக்கிறது. இந்த டேராவிற்குள் எட்டு மணி நேரம் எட்டு நபர்கள் ஏக காலத்தில் மறைந்து கொண்டு, பத்திரமாக இருக்கலாம். இதன் விலை 270 ரூபாயாகிறது.

இவ்வளவு தயாராக பாதுகாப்பு உபாயங்கள் ஏற்பட்டிருந்தும், ஜனங்களுடைய மனது நிம்மதி அடையவில்லை.

ஏன்? எழுத்தாளர்கள் செய்கிற தடபுடல் அப்படி இருக்கிறது. யுத்த இலாகாக்களின் இரும்புப் பெட்டிகளில் பரம ரகஸ்யங்கள் இருக்கின்றனவாம். ஒரு திராவகத்தின் ஆறு சொட்டுக்கள் தெளிக்கப் பட்டால், ஒரு நகரமே சாம்பலாகப் போய் விடுமாம்.

அப்பேர்ப்பட்ட வாயு கிடையாது: இருந்தாலும் அதை உபயோகிப்பது, லேசான காரியமாக இருக்கவே இருக்காது.

ஒரு ஆராய்ச்சி அறைக்குள் அற்புதங்களைச் செய்யக் கூடிய அநேகம் வாயுக்கள் நிச்சயமாக இருக்கின்றன. ஆயினும், ஒரு விஷயத்தை குறிப்பாக கவனிக்க வேண்டும். ஆராய்ச்சி அறையில் எதிரிகள் கிடையாது; எல்லாம் கட்டுப்பட்டு நடக்கின்றது. யுத்த களம் அப்படியல்ல.

சென்ற மகா யுத்தத்தில் கண்டு பிடிக்கப்பட்டும், உபயோகிக்கப்பட்டும் வந்த விஷவாயுக்களைக் காட்டிலும், பிரயோகிப்பவர்களுக்கு அதிகமான அனுகூலத்தைத் தரக்கூடிய எந்த விஷவாயுக்களையும் யுத்தத்திற்குப் பின்னிட்டு யாரும் கண்டு பிடித்துவிட வில்லையென்று நிச்சயமாகக் கூறலாம்.

இந்த யுத்த வாயு விஷயத்தில், முக்கியமான பிரச்னை எது? "எந்த விதமாக, இந்த விஷத்தை, பாதிக்கப்படவேண்டிய சத்துருவினிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது" என்பதுதான் முக்கியமான பிரச்னை. விஷ வாயுவை பிரயோகிப்பவனுடைய ஆசைக்கும், பிரயாசையின் பலனுக்கும் இடையே எத்தனையோ இடையூறுகள் உண்டு. அபிஸீனியாவில் முஸோலினியின் படர்கள் விஷ வாயுவை வெகுலேசாகத்தான் உபயோகித்தார்கள். அதனால் தற்கால நாகரிகத்தில் முதிர்ந்த திடமான தேசத்தின் மீதும் அவ்வளவு லேசாக விஷவாயுவை பிரயோகிக்க

முடியும் என்று நினைத்துவிடக் கூடாது.

ரஸாயன சாஸ்திரச் சட்டங்களை யும், பௌதிக சாஸ்திர சட்டங்களை யும் நன்கு அறிந்த நிபுணர்களைக் கொண்டு, யுத்த சாஸ்திர தந்திரங் களில் கரை கடந்த ஞானத்தைப் படைத்த தளபதிகளால், மழை, காற்று முதலிய குண குணங்களை அனுசரித்து, வல்லவர்களாக யுத் தத்தை நடத்தும்போது, விஷ வாயுப் பேராசை லேசாக பூர்த்தி யடையும் என்று நினைப்பது வெறும் பேதமையாகும். பிரமாத பலனை அடைந்து விடலாம் என்று ஒரு சேனை நினைக்கும் பட்சத்தில், அது ஊதாரித்தனமான ஒரு ஞதாட்ட மாகத்தான் முடியும். ஒரு பெரிய நகரத்தின்மீது ஒரு விஷப் போர் வையைப் போற்றப் புறப்படுவதென் றால், ஏராளமான வாயுவைத் தயார் செய்ய வேண்டும்; அந்தச் செலவு பிரமாதமாக இருக்கும். செலவிற் குத் தகுந்த லாபம் கொடுக்குமா, என்பது முப்பதாம் பட்சம்.

விஷவாயு என்பதுதான் என்ன? எப்படி அதைப் பிரயோகிக்கிறார் கள்? அது ஆளை என்ன செய் கிறது?

1500-ம் வருஷத்துக்கு முன் னால், முற்றுகைகளில், நாற்ற வெடி களை ஐரோப்பாவில் உபயோகித் தார்கள். அதற்கு வெகு நாட் களுக்கு முந்தியே, சைனக்காரர்கள் இந்த நாற்றவெடியை உபயோகித்த துண்டு. மற்ற ஜாதியார்கள் துணி கட்டிக்கொள்ளக் கற்றுக்கொண்ட தற்கு முன்னமேயே, இந்த சைனக் காரர்கள் எல்லா விஷயங்களையும் கண்டு பிடித்து விட்டார்கள், கண்டு பிடித்த விஷயங்களை உதாசீனமாக உதறித்தள்ளியும் விட்டார்கள்!

சென்ற மகா யுத்தத்தில் 22-4-1915-ல் ஈபர்ஸ் யுத்தத்தில் ஜெர்மானியர்கள் முதன் முதலாக விஷவாயுவைப் பிரயோகித்தார் கள். காற்றின் ஓட்டத்தை அனு சரித்து, வாயுவைப் பாய்ச்சினார்கள். அதுகான்டாத் துருப்புகள் மீதும், பிரெஞ்சு துருப்புகள் மீதும் பாய்ந் தது; திடுக்கிட்டுப் போனார்கள். பிணக் குவியல்கள் ஏற்பட்டன! அன்று முதல், யுத்த தந்திரங்களில் ரஸாயன முறை நிச்சயமான அம்ச மாகிவிட்டது.

பூமியைத் தோண்டி, அகழ்களில் படைகள் மறைந்து கொண்டு, ஒளிந்து பிடிக்கும் ஊசிப்போன சண்டையாக நடைபெற்று வந்தது. பதுங்கிய பொந்துகளை விட்டு வெளியே வரும்படி செய்வதற்கா கவே விஷவாயு முதன் முதலாகப் பிரயோகிக்கப்பட்டது. போகப் போக அதன் மற்ற பிரயோஜனங் களும் வெளியாயின. அதனால், விஷ வாயுப் பிரயோகம் ஒரு திட்டமான, திடமான சாஸ்திரமாக ஏற்பட்டு விட்டது.

ஜெர்மானியர்கள் இந்த சாஸ்தி ரத்தை அபிவிருத்திக்குக் கொண்டு வந்தார்கள்.

சென்னை குழாய் ஜலத்தை சுத்தம் செய்வதற்கு உபயோகிக்கிறார்களே —அந்த 'க்ளோரினை'த் தான் முதன் முதலாக, விஷவாயுவாக உபயோ கித்தார்கள். நேசதேசங்கள், அதை எதிர்ப்பதற்கு உபாயங்களைக் கண்டு பிடித்ததுடன் நில்லாமல், தாங்க ளே அதைப் பிரயோகிப்பதிலும் ஈடுபட்டு விட்டார்கள்.

போகப்போக க்ளோரினைக் காட்டிலும் சிறந்த விஷ வாயுகளை யும் கண்டு பிடித்தார்கள். திட சாமான்கள், திரவ பதார்த்தங்கள், வாயுக்கள்—ஆக மொத்தம் 3000 சாமான்கள் யுத்த காலத்திலும் பின் னிட்டும் பரீட்சிக்கப் பட்டன. அந்த மூவாயிரத்தில், முப்பதுதான் பிர யோஜனப் பட்டது. அந்தப் முப் பதிலும், அமுலுக்குக் கொண்டு வரக்

கூடியது பன்னிரண்டுதான் என்று ஏற்பட்டது.

எதையும் விஷ வாயு என்று அழைப்பது சரியல்ல. சில திரவ பண்டங்களும் உண்டு, சில திட பண்டங்களும் உண்டு. திரவ பண்டங்களை தெளிப்பதும் உண்டு, அல்லது சில விரோத மெழுகுவத்திகளால் அவைகளுக்கு சூட்டை ஏற்றி, திரவத்தை ஆவியாக்கிப் பிரயோகிப்பதும் உண்டு. திடப் பண்டங்களை வெடிகுண்டுகளுக்குள் வைத்து அடித்தால், அவைகள் வெகு "ஜைன்ஸ்" ஸான பொடியாக மாறி, மூக்குக் குள்ளும், இதர அங்கங்களுக்குள்ளும், புகுந்து கொள்ளும். திரவ ரூபத்திலும், திட ரூபத்திலும் வைத்துக்கொள்ள முடியாத எந்த விஷப் பண்டமும் யுத்த உபயோகத்திற்கு உதவாது.

மேல் நாட்டு நாகரிகத்தில், விஷப் பண்டங்களில், நால்வகைப் பொருள்கள் உண்டு :—

1. தொண்டையை அடைக்கும் வகை.
   ஜெர்மனியர், இதைப் பச்சைச் சிலுவை என்று அழைக்கிறார்கள்.
2. மூக்கை அடைக்கும் வகை.
   ஜெர்மனில் இதை நீலச் சிலுவை என்று அழைக்கிறார்கள்.
3. அழுவாச்சி வாயு வகை
   ஜெர்மனில் இதை வெள்ளைச் சிலுவை என்று அழைக்கிறார்கள்.
4. கொப்பளம் செய்திடும் வகை.
   ஜெர்மனில், இதை மஞ்சள் சிலுவை என்று அழைக்கிறார்கள்.

1. 'கிளோரின்' தினுசுகள்.

குணங்கள் :—நின்று வேலை செய்யும், மலிவானது, காற்றைக் காட்டிலும் கனமானது.

துர்க்குணங்கள் :—உடனே எதிரிக்கு தென்பட்டு விடும்; தனது வரவை நாற்றத்தால் தெரிவித்து விடும்; எதிரிகளுடைய முக மூடியின் முன் பாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் பண்டங்களுடன் இந்த க்ளோரின் உறவு கொண்டாடி ஐக்கியமாகி விடும்.

இந்தக் கோளாறுகளை நிவர்த்தி செய்து நேச தேசங்கள் பிரயோகித்தார்கள். ஜெர்மானியர் இதைப் பொருட் படுத்தவில்லை. ஏன்? இன்னும் உயர்தர "யமச்சரக்குகளை" அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். அவைகளை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். இந்தப் பண்டங்கள் கண்களைப் பாதிக்கும். தொண்டை நரம்புகளையும், குழாய்களையும் புடைக்க வைக்கும். ஈரலுக்குக் காற்றுச் செல்லும் மார்க்கத்தை அடைக்கும். ஈரலுக்குக் காற்றைச் செலுத்த வேண்டுமே, என்று இந்த வாயு பிடித்தவன் படும் பாட்டையும் செய்யும் முயற்சிகளின் அலங்கோலத்தையும் கோரத்தையும் பார்த்து சகிக்க முடியாது.

வதைத்திடும் வலியும், தகிக்கும் வேதனையும் அனுபவிக்கப்படுகிறது. இப்படி யமப்பாடு பட்டு, கொஞ்சம் காற்று உள்ளேசெல்வதில்,ஒரு சகிக்க முடியாத சீட்டி யடிக்கும் சத்தம் உண்டாகிறது. இத்துடன் அவஸ்தைப்படுபவனுடைய மனோநிலைமை, நிமிஷத்திற்கு நிமிஷம் தனது தொண்டை, சுவாஸ மார்க்கம் அடைத்துக் கொண்டு வருகிறது. இந்த விஷ வாயுவால் பிடிபட்டவர்களில் சிலர், மூச்சு விடும் முயற்சியில் தங்களுடைய தொண்டையை தங்களுடைய விரல்களைக் கொண்டே கிழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற யுத்தத்தின் கடைசி வருஷத்தில் ஜெர்மனி திடரூப வஸ்துக்களை அதிகமாகப் பிரயோகித்தது.

வெடிகுண்டுகளுக்குள் வைத்துச் சுட்டது. இந்த விஷ வஸ்துக்கள் நேர்த்தியான பொடியாகி, முகமூடிக்குள்ளேகூட நுழைந்து சென்று, மூக்குக்குள் புகுந்துகொள்ளும். பயங்கரமான வலி ஏற்படும். தும்மலும் இருமலும் எடுத்துவிடும். முகமூடி யிருப்பதனல், தாராளமாகத் தும்ப முடியாது. வாயுவோ, மூக்குக்குள் புகுந்துகொண்டு, 'தாராளமாகத் தும்மு' என்று ஆக்ஞாபிக்கிறது. ஒருவர் தவறாமல் சிப்பாய்கள் அனைவரும், தும்மும் பொருட்டு முகமூடியைக் கிழித் தெறிந்து விடுவார்கள். முகமூடி அகன்றதும், எதிரிகளால் பிரயோகிக்கப்பட்டிருக்கும் மற்ற விஷ வாயுகள் தாராளமாகப் 'புகுந்து கொண்டு வேலை செய்துவிடும்.' வெடி குண்டுகள், கொண்டு வந்து தூவிவிடும் விஷப் பொடிகள் மூக்கண்டை வருவதைத் தடுப்பதற்கு, வெகு விசித்திரமாக முகமூடியைத் திருத்தி யமைக்க வேண்டியதாயிற்று. அப்படி முகமூடியை சிக்கலாக அமைத்தால், முகமூடியே சிப்பாய்க்கு ஒரு வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது; அதனல் அது அவன் போர் செய்யும் மும்முறத்தையே குறைத்து விடுகிறது.

கண்ணீரைப் பெருக்கும் விஷ வாயுவை ஜெர்மானியர் கிரம்ப உபயோகித்தார்கள். அது கண்ணீரைப் பெருக்குவதுடன், கண்களை சவிக்கச் செய்யும், வலிக்கச் செய்யும். எதிரிகளுடைய கண்களே அவர்களுக்கு எதிரிகளாக வேலை செய்யும் போது, அவர்கள் எப்படி வலிமையுடன் போர் புரிய முடியும்? அத்துடன் எப்போது இந்தக் 'கண்ணீர் வாயு' நம்மிடம் வருமோ, என்று எதிரிகள் சதா முகமூடியை தரித்துக் கொண்டிருந்தால், அதனலேயே ஒரு வெறுப்பும் ஒரு சோர்வும் உண்டாகி விடுகிறது. இதனலும் எதிரிகளுக்குப் பெருத்த இடைஞ்சல் ஏற்படுகிறது.

யுத்த தந்திரத்தை கவனிக்கும் போது, கடுகு வாயுவையே 'விஷ வாயுக்களின் ராஜா' என்றழைக்கலாம். அதற்கு மூக்கென்றும், தொண்டையென்றும் பாரபட்சம் கிடையாது. மானிட சரீரத்தில் எந்த இடத்தில் பட்டாலும் அந்த இடம் நாசமாக வேண்டியதுதான். திரவ ரூபத்திலும் சரி, ஆவி ரூபத்திலும் சரி, அதன் கொடுமையை அது நிறைவேற்றிவிடும். அது தோலைத் தாக்குகிறது. தோல் லேசில் ஆறாது. அதன் விஷம் ரத்தத்தையும் பாதித்து விடும். கண்களையும் ஈரலையும் பாதிக்கும், ஜீரண சக்தியைக் கெடுக்கும்; நரம்புகளைக் கெடுக்கும். நேச தேசங்களுக்குள் பிரான்சு கடுகு ரகசியத்தைக் கண்டு கொண்டது. இந்த வாயு மாதக் கணக்காக தொடர்ந்து வேலை செய்துகொண்டே யிருக்கும்; சரீரங்களைப் பொசுக்கும்.

அமெரிக்காவில் 1904-ம் வருஷத்தில் லூயி என்பவர் ஒரு விஷ வாயுவைக் கண்டு பிடித்தார். சென்ற யுத்தத்தில் அமெரிக்காவில் வியாபாரிகள், அந்த லூயிஸைட் என்ற வாயுவை பெருவாரியாகத் தயாரித்துக் கொடுக்க, முன் வந்தார்கள். ஆயினும் பிரிடிஷார் கடுகு வாயுவையே பெரிதாக மதித்தார்கள். இந்த லூயிஸைட் வாயுவானது படுகொலைக்காரன்தான். உடனுக்குடனே வேலை செய்யும்; ஆயினும் பொசுக்கப்பட்ட தோல் சீக்கிரம் ஆறிவிடும். இன்னும் ஒரு குறை: இதற்கு நாற்றம் உண்டு; நாற்றத்தினல் எதிரிகள் விலகுவதற்கு வசதி ஏற்பட்டு விடுகிறது.

இன்னும் இரண்டு வாயுக்கள் இருக்கின்றன. 1. கார்பன் மானக்ஸைட், 2. ஹைட்ரோஸையானிக்

ஆஸிட். இவை இரண்டும், மற்றதை விட, கொலைகார வாயுக்கள் தான். அரைகுறையாக எரிவதனல் ஏற்படுவது கார்பன் மானக்ஸைட். இது அனைவரும் அறிந்த புகை. மோட்டாரில் சம்பந்தப்பட்டவர்களில் இதனல் மரணம் அடைபவர் அநேகர். ஆயினும் இது யுத்தத்திற்குப் பிரயோசனமில்லை. இது காற்றைவிட லேசானது. சீக்கிரம் கலைந்துபோய் விடும். ஆதலால், இது அதிகக் கெடுதியை செய்துவிட முடியாது. மேலும், எளிதில் திரவமாகும்படி இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் எந்த விஷவாயுவையும் பத்திரப் படுத்திவைக்க முடியாது; இடத்தை விட்டு இடம் கொண்டு போகவும் முடியாது. இந்த கார்பன் மானக்ஸைட் எளிதில் திரவமாகாது. ஆயினும் இதனுடைய விசேஷமான கொல்லும் சக்தியை உத்தேசித்து, மற்ற விஷவாயுகளுடன் கலந்து இதை உடயோகிக்கிறர்கள்.

ஹைட்ரோ ஸையானிக் ஆஸிட் வெகு மலிவானது; அதைச் செய்வது சுலபம்; அது உடனே உயிரை வாங்கி விடும். அதை ஒரு தடவை உள்மூச்சு இழுத்தால் போதும் ஹிருதயம் நின்றே போய் விடும். ஆயினும்; அது ஸ்திரமற்றது; அதை அடக்கி யாள்வது மெத்த கடினம். ஹைட்ரோ ஸையானிக் ஆஸிட், தன்னைப் பிரயோகித்தவன் பேரிலேயே பாய்ந்தாலும் பாய்ந்து விடும். விஸ்தாரமாக வியாபார முறையில் இந்த 'யமபந்து' அமுலுக்கு வர முடியாது. ஒரு தேசத்திலே ஒரு டஜன் நபர்களுக்காவது, இந்தப் பண்டத்துடன் நட்பு வைத்துக் கொள்வதற்கு சாமார்த்தியம் இருக்குமோ, என்பது சந்தேகம்.

கடைசியாக அடாம்ஸைட் என்ற ஒரு பண்டம் இருக்கிறது. மிருகங்களின் மீது இதைப் பிரயோகித்துப் பரீட்சை செய்ததில், நல்ல மாதிரியில் இது கொலை வேலையைச் செய்து காட்டியிருக்கிறது. யுத்தத்தில் பிரயோஜனப் படுத்தும் பொருட்டே, ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறர்கள். ஆயினும், மிருகங்களை நன்ருகக் கொல்லும் அடாம் ஸைட், மனிதரையும் நன்கு கொல்லும் என்று உடனே நிச்சயம் கொண்டு விடக் கூடாது. மனுஷ்யர்கள்மீது இன்னும் பரீட்சை செய்து பார்க்கவில்லை. சென்ற யுத்தத்தின்போது இந்த அடாம்ஸைட்டைக் கண்டு பிடிக்கவில்லை. இந்த யுத்தத்தில் இந்த அடாம்ஸைட்டை அரங்கேற்றுவார்களோ என்னவோ தெரியவில்லை.

மொத்தத்தில், கொல்லும் சக்தியிருந்தால் மாத்திரம், ஒரு விஷவாயு ஒரு யுத்தக் கருவியாக அமைந்து விடாது. கொலை குணம் போதாது; இன்னும் எத்தனையோ குணங்கள் அதற்குத் தேவை. இந்த குணங்களில் ஒன்று குறைந்தாலும் யுத்தத்திற்குப் பிரயோசனப் படாது.

கொஞ்சம் பிரயோகித்தாலும், அது வேலை செய்வதாக இருக்க வேண்டும். காற்று கோடிப் பங்கு, விஷ வாயு ஒரு பங்கு. அந்தக் கோடி மடங்கு இருக்கும் காற்றில் கலந்தாலும், இந்த விஷவாயு வீணாகாமல் தனது கொலை வேலையைச் செய்யும் சக்தியைப் படைத்திருக்க வேண்டும். எதிரியின் பாதுகாப்பு முறைகள் இதன் எதிரே திணறித் தத்தளிக்க வேண்டும்; பாதுகாப்பு முறைகள் ஏராளமாக செலவு பிடிக்க வேண்டும். எதிரியின் பொழுதை அந்த முறைகள் வீணுக்க வேண்டும். எதிரியின் கண், மூக்கு, தொண்டை, ஈரல், நரம்பு, தோல் சர்வாங்கங்களையும் இந்த விஷவாயு பாழாக்க வேண்டும். இந்த வாயு, எதிரி முகமூடி போட்டுக் கொள்ளும்படி செய்ய வேண்டும்; அவன் முக்காடு போட்டதும், இந்த

வாயு அந்த முக்காட்டுக்குள்ளும் நுழைந்து வேலை செய்ய வேண்டும்.

அந்த வாயுவைப் பெருவாரியாகத் தயாரிப்பது சுலபமாகவும் மலிவாகவும் இருக்க வேண்டும். அந்த வாயுவைக் கையாளுவதும் வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு போவதும் சுலபமாக இருக்க வேண்டும். காற்றைக் காட்டிலும் அது கனமாக இருக்க வேண்டும். அது திடமாக ரூபம் மாறாமல் இருக்க வேண்டும். அது கப்பலேறுவதினாலாவது அல்லது களஞ்சியத்தில் வைக்கப் பட்டிருப்பதினாலாவது, குணத்தையும் சக்தியையும் இழந்துவிடக் கூடாது; அதன் முனை மழுங்கி விடக் கூடாது. வெடிகுண்டுடன் சென்று வெடிப்பதனால், அதன் கொலை குணம் மாறிவிடக் கூடாது.

இவ்வளவு குண விசேஷங்களும் திரண்டிருந்தால் அல்லவோ இது யுத்தத்திற்கு உகந்த விஷவாயு ஆகும்! ஆதலால் தான், ஒரு டஜன் விஷவாயுக்கள் மாத்திரமே பரீட்சையில் தேறியிருக்கின்றன. ஆராய்ச்சி சாலையில் செய்யும் பராக்கிரமங்களை, அநேகம் விஷவாயுக்கள், யுத்த களங்களில் செய்வது கிடையாது.

நகரங்களுக்கு ஆபத்து விஷவாயுவினால் வராது, பெருத்த ஆபத்துகள் நெருப்பு வைக்கும் வெடிகுண்டுகளால்தான் ஏற்படும். ஒரு வெடிகுண்டு கனம் 2 அல்லது 3 பவுண்டு தான், ஏரோப்ளேன்களில் குவியல் குவியல்களாக இந்த வெடிகுண்டுகளைக்கொண்டு போகலாம். விஷவாயுவைக் கொண்டு தாக்குவதென்றால் அப்படி சற்று நேரம்தான் தாக்க முடியும்; தரைக்கு சற்று உயரம் வரைக்கும்தான் அது பலிக்கும். இந்த குண்டுகளோ, நெருப்பைத் துவக்கி வைக்கும். துவக்கிய நெருப்பு வேலை செய்து கொண்டேயிருக்கும். ஒரு ஆயிரம் வெடிகுண்டுகளைப்போட்டால், ஒரு ஆயிரம்நெருப்புகளை உண்டாக்கிவிடும். இவ்வளவும் செய்திடும் வேலையை ஒரு விஷவாயுத் தாக்குதலின் வேலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நெருப்பு குண்டுகளுடைய வேலைதான் பிரமாதம் என்பது நிச்சயமாய் விளங்கும்.

சைனா யுத்தத்தில், ஷாங்ஹை கோட்டைகளின் மீது ஜப்பானியர் எல்லா வேடிக்கைகளையும்தான் செய்தார்கள். ஆயினும் சமுத்திரப் படைகள் கரையில் வந்து இறங்கி, குத்தீட்டியுடன் தாக்கிய பின்பு தான், நகரம் ஜப்பானியருடைய வசத்திற்கு வந்தது. குத்தீட்டி செய்யும் கஷ்டங்களும், காயங்களும், கோரங்களும், அசிங்கங்களும், கொலைகளும் மற்ற எந்தவகை ஆயுதங்களுக்கும் மீறியவைதான்.

ஜெனர்ல் காமெலின்

இன்று உலகத்திலேயே மிகச் சிறந்த தளபதி, ராணுவ நிபுணர் என்று அழைக்கப்படுபவர் பிரஞ்சு படையின் தளபதியான ஜெனரல் காமெலின். சென்ற மஹா யுத்தத்தில் அவர் காட்டிய வீரமும் சாதுர்யமும் அவரை முன்னணிக்கு கொண்டுவந்து தள்ளியது. இப்போது நடக்கும் மஹாயுத்தத்தில் அவரிடம்தான் பிரிட்டிஷ், பிரஞ்சு இரு படைகளையும் பிரஞ்சுப் போர் முனையில் தலைமை வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அவருக்கு இப்போது வயது 67 ஆகிறது. 1872ம் வருஷம் பாரிஸ் நகரத்தில் பிறந்தவர்.

அவருடைய தகப்பனர் வழியில் அவருடைய முன்னேர்கள் ஐந்து பேர்கள் ஜெனரல்கள் பதவி வகித்து வந்திருக்கிறர்கள். ஒருவர் 16வது லூயியின் படைத் தளபதியாக இருந்தவர்.

இவர் 1899ல் யுத்தகலாசாலையில் சேர்ந்து படித்தார். பிறகு மார்ஷல் போஷ் என்று பிரசித்தி பெற்ற அப்போது லப்டினன்ட் போஷின் கீழ் அவர் யுத்த விவகாரங்களை கற்றுக்கொண்டார். இவருடைய திறமைகளை அவர் நன்ருக அறிந்து கொண்டார். 1902இல் பட்டதாரி ஆனர்.

அடுத்த நாலு வருஷங்களுக்கு அநேக படைகளில் சேர்ந்து வேலை செய்தார். அதன் பிறகு 1906ல் பாரிஸ் நகர நிலப்படையின் தலைவரான ஜெனரல் ஜாப்ரேக்கு காப்பாளராக உத்யோகம் கிடைத்தது. 1912ல் ஜாப்ரே சுப்ரீம் யுத்தசபைக்கு உயர்த்தப்பட்டபோது அவருடைய காரியதரிசியாக காமெலினுக்கு உத்யோகம் கிடைத்தது.

இவர் 5 அடி 4 அங்குல உயரம் தான். குட்டையான உருவம். சுப்ரீம் கமெண்டர் என்று அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பட்டம் நேபோலியனுக்குப் பிறகு வேறு யாருக்கும் பிரான்சில் கொடுக்கப் பட்டதில்லையாம்.

சென்ற யுத்த ஆரம்பத்தின் போது அவர் ஜெனரல் ஜாப்ரேயின் யுத்த காரியதரிசியாக இருந்தார்.

அவர் அப்போது காட்டிய சாதுர்யமும் வீரமும் தான், புயலடித்து வந்த ஜெர்மன் படைவசம், பாரிஸ் நகரம் வீழாமல் தப்ப வைத்தது.

1914-ல் ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதி. 1,70000 படைகள் அடங்கின ஏழு ஜெர்மன் சேனைகள் ஸ்விடன் தேச எல்லைப்புறத்திலிருந்து பாரிஸ் நகரின் வெளிப்புறத்து இடங்களில் 300 மைல் முன்னணியில் பரவி இருந்தது.

இருபதே நாட்களில் பெல்ஜியத்தை அழித்துக் தொண்டு 180 மைல் தூரம் முன்னேறி 140000 சதுர மைல் இடத்தை ஜெர்மனி

பிடித்துக்கொண்டிருந்தது. பிரஞ்சுப் படை பின்வாங்கிப் போவதைத் தவிற வேறு வழியில்லை என்று திகைத்துப் போயிருந்தது.

அப்போது ஜெர்மன் தளபதியான குளூக் தலைமையில் ஒரு படை நேரே பாரிஸ் நகரை நோக்கி முன்னேறியது. அதனால் ஜெர்மன் வலது படைப் பக்கம். ஒரு பலஹீனம் ஏற்பட்டதை கண்ட ஜெனரல் காலினி படைகளை, திரட்டி தாக்க அநுமதி கொடுக்குமாறு மார்ஷல் ஜாப்ரேக்குக்கு தந்தி அடித்தார்.

அதே செப்டம்பர் 4-ம் தேதி காலை ஆறு மணிக்கு காமேலினும் அதே சந்தர்ப்பத்தை கண்டு கொண்டார். ஒரு படத்தை வைத்துக் கொண்டு ஜாப்ரேக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டி மறுநாளே தாக்கும்படி அவசரப் படுத்தினர்.

ஜாப்ரே உடனே படைக்கு தந்தி அடித்து படைப் பலம் எப்படி இருந்தது என்று கேட்டதில், மிக பலமாக இருந்த தென்று பதில் கிடைத்ததின் மேல், தாக்குவதற்குப் உத்திரவு கொடுக்கப் பட்டது.

மறுநாள் காலையிலிருந்து மூன்றே நாட்கள்தான். முழு ஜெர்மானிய முன்னணியும் ஐந்தே நாட்களில் 60 மைல் பின்வாங்கினது. பாரிஸ் நகரத்தைத் தாக்கும் யோசனையை கைவிட்டு விட்டு.

அறுபத்தேழு வயதாகியும் இன்றும் அவர் வெகு சுறு சுறுப்பாகவே வேலை செய்கிறார். அவருக்கு நல்ல ஞாபக சக்தி இருக்கிறது. பிரான்சின் சின்ன இடங்கள் முதல், சின்ன ராணுவ அதிகாரிகள் முதல் எல்லோரையும் அவருக்கு நன்றாக ஞாபகமிருக்குமாம். ஆபீசில் வெகு நேரம் முழுவதும் வேலை செய்து வருகிறார். காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரையில், சங்கீதத்தில் அவருக்கு பிரியம். நிறைய படிப்பதுண்டு.

இப்போது பிரஞ்சு ஜெர்மன் எல்லைப்புறத்தில் அவருடைய தலைமையில் பிரஞ்சு படை ஸீக்பிரீட் அரணை தாக்கி வருகிறது.



இந்த உலகம்!

எஸ். டி. ஸ்ரீனிவாசாச்சாரியார்

ராகவன் அங்கே வந்து சேரும்போது மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. கோயில் தடாகத்தில் நீராடி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பெருமாள் தரிசனத்துக்குப் புறப்பட்டபோது மணி ஒன்றுக்குமேல் ஆகிவிட்டது. கோயில் காலங்கள் ஆகிவிட்டன.

ராகவன் கொஞ்சம் பழங்கள் வாங்கி புசித்துவிட்டு கோயில் மண்டபத்தில் உட்கார்ந்தான். வானளாவிய கோபுரங்களையும், சித்திர வேலைப்பாடமைந்த மண்டபங்களையும், சிரித்துக் கொஞ்சிக் குலாவுவதுபோல நின்ற அந்த மண்டபத் தூண்களின் பிரதிமைகளையும் கண்டு புளகாங்கிதம் அடைந்தான். ஆழ்வார் அன்பு செய்த ஆலயத்தைத் தன் கண்களாலேயே பருகிக் களித்தான்.

சாயங்கால பூஜை சமயமும் வந்தது. ராகவன் மெதுவாக எழுந்து முற்றிலும் அவனுக்குப் புதிதாக இருந்த அந்த இடங்களை எல்லாம் தன் கண்களில் வியந்து கொண்டே உள்ளே சென்றான். அந்த மண்டபத்தில் நுழைவதற்குமுன் வெளியே கொஞ்சம் நின்றுகொண்டிருந்தான். அவனையும் அறியாமல் அவன் நாவிலிருந்து “முன்னம் புரந்தரனும், மாதவரும் மலைபெற்ற அன்னப் பெண்ணரசும் அயனவனும் புலியும்...’ என்று பாசுரங்கள் பக்திப் பெருக்கோடு வெளி வந்தன.

‘யாரையா அது, அர்ச்சனை செய்ய வேண்டுமா’ என்ற குரல் அவனுக்கு அருகில் கேட்டது.

திரும்பிப் பார்த்தான். அர்ச்சகர் நின்று கொண்டிருந்தார். ‘இல்லை’ என்று ராகவன் மௌனமாகத் தன் தலையசைப்பின் மூலம் பதில் தெரிவித்தான்.

அதற்குப் பிறகு அந்த அர்ச்சகர் அங்கே நிற்கவில்லை. அர்த்த மண்டபத்திற்குள் தன் அலுவலை கவனிக்கப் போய்விட்டார். ராகவனும் அங்கேயே நின்று இன்னும் கொஞ்சம் பக்தி பண்ணிவிட்டு, தானும் அர்த்த மண்டபத்திற்குள் சென்று அனந்தனைக் கண்டான். நீலமாமுகில்போல் இனிய உருவமும், ‘நாற்பெருந் தோளும், கையார் சக்கரமும், கோலச் சரிசங்கும், உடனமர் உத்தமியரும்’ கண்ட அவன் மனம் பரவசமடைந்தது.

‘ஸ்வாமி! எதிரில் நிற்கும் ரிஷி வடிவு கொண்டவர் யார்’ என்று சற்று தள்ளி எதிரில் நின்ற அர்ச்சகரைக் கேட்டான் பணிவோடு.

அர்ச்சகர் ஒரு மிடுக்கோடு அவனை திரும்பிப் பார்த்தார்.

அவர் வாயிலிருந்து வார்த்தை கிளம்பினது.

'ஏனய்யா, வெளியே ஒரு மணி நேரம் சுத்திக் காதை துளைத்தீர். இங்கேயும் வந்து அரை மணி நேரம் ஆகிவிட்டது. வந்த காரியத்தை சீக்கிரம் முடித்துக் கொண்டு போவதைவிட்டு இதென்னய்யா தொண தொணப்புக் கேள்வி. போம் போம்...'

'என்னது! ஒருமணிநேரம் கத்தியா நான் காதைத் துளைத்தேன்! அட, பாசுரங்கள் இவர் காதுக்கு இப்படியா தொனித்தது. புதுமைதான்' என்று மனதிற்குள் ராகவன் சொல்லிக் கொண்டான்.

ஆனால் வெளியே சொன்னான். 'ஐயா! இன்னொரு காலம் ஆரம்பிக்கும் வரையில் நான் இங்கேயே நின்று என் கண்ணுற...'

ஆனால் அர்ச்சகர் அதை முடிக்க விடவில்லை. அவனை விறைத்துப் பார்த்து, 'அட, இதென்னய்யா, உபத்திரவம்! பெருமாள், தாயார் திருமேனிகளிலே ரூ. 50,000 பெறுமானம் ஆபரணங்கள் கிடக்கு. இரும்புக் கதவைப் பூட்டிக்கொண்டு போக வேண்டும். இங்கே நின்று என்னமோ கதை பேசுறீரே, ஹூம், ஹூம்! பக்தி பண்ணினது போதும். அதற்குப் பலன் கிடைத்தால் போதும். சீக்கிரம் வெளியேறும்' என்று சீறி விழுந்தார்.

'தாமோதரா! தாமோதரா' என்று ராகவன் வாய் உச்சரித்தது.

அதை யடுத்து அவனுக்கு தோன்றினது. 'வாஸ்தவம்! அவர் சீறி விழுந்ததில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. அவரோ வெறும் சேவார்த்திப் பேர்வழி. அவருடைய கவனம் முழுவதும் அதில்தான். பெருமாளுக்கும் அவருக்கும் உள்ள உறவு அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தவிர, ஒரு அர்ச்சனை நான் பண்ணி இருந்தாலாவது அவருக்கு ஏதோ கொஞ்சம் திருப்தி இருக்கும். ஹூம்! தாமோதரா! இன்னும் ஒரு நாள் இருந்து பார்ப்பதென்று!...பார்ப்போம்' என்று பெருமூச்சுவிட்டுக் கொண்டே மறுபடியும் ஒருதரம் எம்பெருமான்மீது பார்வையை செலுத்தி விட்டுத் திரும்பினான்.

அவசர அவசரமாக அர்ச்சக, பரிசாரகர்கள் தங்கள் வேலையைக் கவனித்தார்கள். அர்த்தஜாம பூஜை மட்டுந்தான் பாக்கி. ராகவன் அர்ச்சகரிடம், 'ஸ்வாமி, இந்த ஊரில் இரவு தங்கி இருக்க ஏதேனும் இடம் உண்டா? இல்லை கோயிலில் படுத்துக்கொள்ளலாமா' என்று கேட்டான்.

'எங்கே வேண்டுமானாலும் போமே ஐயா, நான்தானா அதற்குப் பழி?'

'சரி, ஸ்வாமி, நான் வெளியிலேயே போய் படுத்துக்கொள்கிறேன். சிரமம் கொடுத்தது தப்பு!...'

'சரி, சரி போங்கோ.'

ராகவன் அர்த்தமண்டபத்தை விட்டு வெளியேறி இரண்டு எட்டுக்கள் போய்விட்டான். அப்போது கோவில் மெய்காவற்காரன் ரொம்ப அவசர அவசரமாக ஓடிவந்தான்.

'அர்ச்சகச் சாமி! கம்ப அன்னக்குடி பண்ணை, சாமிக்கண்ணு

பிள்ளைவாள் மாமன் தரிசனத்துக்கு வருகிறாராம். இப்போது தர்மகர்த்தா ஐயா சொல்லச் சொன்னாரு' என்றான்.

'அட, இதென்னடா யமவாக இருக்கு. கதவு பூட்டுகிறவரைக்குமா இந்தத் தொல்லை. இவ்வளவு நாழி ஒழியவில்லையாக்கும்' என்று முனகிக்கொண்டே மறுபடியும் கர்ப்பக்கிரகத்துக்குள் சென்று ஏற்பாடுகள் செய்யலானார் அர்ச்சகர்.

சேவகன் கூறினது, அர்ச்சகர் அதை வரவேற்றவிதம் இரண்டும் ராகவன் காதுகளில் விழுந்தது. மேலே எட்டுப்போடுவதை நிறுத்தி நின்றான். அர்ச்சகர் கூறினதைப்பற்றி அவனுக்கு அக்கரையில்லை. அது அவனுக்கு அதற்குள் பழகிப்போய்விட்டது. ஆனால் புதியவர்கள் யாரோ வரப் போகிறார்கள் என்று தெரிந்ததும் அவன் முகத்தில் மறுபடியும் ஒரு பிரகாசம் ஏறினது. அவர்களோடு சேர்ந்து தான் இன்னும் கொஞ்சம் தாமோதரனை தரிசனம் செய்ய முடியும். அந்த பாக்யம் அவனுக்குக் கிடைத்தது. ஒரு திருப்தி ஏற்பட்டது அவனுக்கு. புதியவரை எதிர்பார்த்து அங்கேயே நின்றான்.

அன்னக்குடி சாமிக்கண்ணு பிள்ளை மதபரிபாலன போர்டு அங்கத்தினர். கானப்பள்ளியில் ஏராளமான பூஸ்திதி உள்ளவர். அவருடைய மாமன் முனியப்ப பிள்ளைதான் இன்று எம்பிரானைக் காண வருவது!

கொஞ்சநேரத்திற்கெல்லாம் மெய்க்காவலர் முதலியவர்கள் புடைசூழ முனியப்பபிள்ளை உள்ளே நுழைந்தார். இரு வைதீகர்கள் வேதமந்திரம் சொல்லி அவரை ஆசீர்வதித்தனர்.

அப்போது பஞ்சாய்த்து வைதீகரில் ஒருவர், 'என்னவோ வேதம் சீர்குலைந்துவிட்டது. எத்தனையோ தலைமுறையாய் இந்த ஸ்தலத்தில் பூஜா காலங்களில் கைங்கர்யம் செய்கிறோம். தங்களைப்போன்ற குபேர புருஷர்கள் கொடுப்பதை வைத்துக் கொண்டு......' என்று பேசிக் கொண்டே போனார்.

வந்த முனியப்ப பிள்ளையின் காதுகளில் இவைகள் விழுந்ததோ என்னவோ? நிமிர்ந்த தலை குனியாமல், திரும்பாமல், கம்பீரமாக நடைபோட்டு மேலே சென்றார். உடம்பை ஒடுக்கிப் பேசி நின்ற வேதவித்துக்கள் எல்லாம் அப்படியே நின்றார்கள். ராகவனும் இந்தக் காக்ஷியைப் பார்த்துக் கொண்டே நின்றான். அவன் பார்வை தன்னை விரட்டின அர்ச்சகர்மீது விழுந்தது.

எல்லோருக்கும் முன்னுக்கு வந்து அர்ச்சகர், அங்கமெல்லாம் குழைய, தழதழத்த குரலில், 'வர வேணும், வர வேணும்! பிள்ளைவாள்! ஏது, போன தெப்ப உத்சவத்துக்குப் பிறகு இந்தப் பக்கம் வரவேயில்லை. அடாடா, எம் பெருமானைக் கவனிக்கவே இல்லையே. அதான், எம்பெருமானே பிடித்து இழுத்துக் கொண்டு வந்து விட்டார், குடும்பத்தோடே' என்று சரளமாக வார்த்தைகளை உதிர்த்து பற்களுக்கு வெளியே கொட்டினார்.

முனியப்ப பிள்ளையோடு கூட நாலைந்து ஸ்திரீகளும், குழந்தை

களும் வந்திருப்பதைக் கண்டான் ராகவன். அர்ச்சகரின் வரவேற்பு தோரணை அவர் மனதில் பதிந்தது. சற்று முன் அதே எம்பெருமானைத் தரிசிக்க வந்த தன்னிடம் அவர் காட்டின தொனி என்ன? இப்போது காட்டும் தோரணை என்ன? சரிதான்! தனக்குள் சிரித்துக்கொண்டான்.

அதற்குள் எம்பெருமான் உருவம் அவன் கவனத்தைத் திருப்பியது. மறுபடியும் தனக்குக் கிடைத்திருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்ள எண்ணி சற்று ஒதுங்கி, பின் நடந்து அவர்களோடு உள்ளே சென்றான்.

உள்ளே ஒரே ஜெகஜ் ஜோதியாக இருந்தது. எம்பெருமான், திருமேனியில் வஜ்ராபரணங்கள் பளீரிட்டன! சுடர்விடும் சுத்த மணிகள் இழைத்த சங்கும், ஆழியும் பொலிந்தன! மரகதப்பச்சை கிரீடம்! வயிர மிழைத்த சிரிய வில்! 'பல பலவே ஆபரணம் பேரும் பலபலவே,' என்று ஆழ்வார் உருகிக் களித்த திருமேனியல்லவா? ராகவன் உள்ளம் உருகினான்.

'பிள்ளைவாள்! கிட்டவாங்களேன். பெருமானை நெருங்கி சேவியுங்களேன். ஓம் ரம்யாய நமஹ... கம்யாய நமஹ... குழந்தே! கிட்ட வாம்மா, வாவா! .... கன்யாய நமஹ, கடிலாய நமஹ ... அவாளையும் இப்படி முன்னே வரச் சொல்லுங்கோ— உக்ராய நமஹ; ஊர்த்வாய நமஹ ... பரவாயில்லேன்னு...

இந்த ரீதியில் கொஞ்சம் பகவதார்ச்சனையிலும், மீதி, பிள்ளைவாள் குடும்பத்தின் தேவதர்சனத்துக்கு பரிவு காட்டுவதிலுமாக அர்ச்சகரின் வாய்பேசி, ஐந்தாறு அர்ச்சனைகள் நடைபெற்றன. அர்ச்சகரின் இந்த நாடகமும் ராகவனுடைய பார்வையில் படாமல் இல்லை என்றாலும், அதுவும் அவனுக்குச் . சாதாரணமாகப் போய் விட்டது.

அர்ச்சனை முடிந்தது. அர்ச்சகர் கற்பூரத் தட்டை ஏற்றி எம்பெருமான் முன் காட்டி, 'நன்றாக சேவியுங்கோ. கஸ்தூரி கந்த ஸ்வாமி...பாடல் பெற்றது. .... பிரத்யக்ஷ தெய்வம், அஷ்டாங்க விமானம்...' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

ராகவன் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகினது. எம்பெருமானின் ஜோதி உருவத்தையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போதுதான் கற்பூரத் தட்டை எம்பெருமான் முன் திருக்கிக் கொண்டே வந்த அர்ச்சகர், தன் முகத்தை திருப்பி, பகவானிடம்விட முனியப்ப பிள்ளையின் கோஷ்டியிடம் அக்கரை அதிகமாகக் காட்டி ஏதேதோ பேச ஆரம்பித்தார். பேச்சிலே சுவாரஸ்யம் அதிக மேறவும், அவர் கவனம் சிதைந்து, கையில் பிடித்திருந்த எரியும் கற்பூரத்திலிருந்து புகை எம்பெருமான் முகத்தில் ஏறினது. அவ்வளவு தூரத்துக்கு, அர்ச்சகர் அசிரத்தையால் கனல் எம்பெருமான் முகத்தில் தாக்கினது.

ராகவன் அதைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டான். தன்னை மறந்து, 'ஸ்வாமி, ஸ்வாமி! தீபாராதனையைத் தள்ளிப் பிடி

யுங்கள். ஐயோ, எம்பெருமான் முகத்தில் அனல்! தள்ளி பிடியுங்கள்' என்று கூவினன். அவன் குரலில் ஒரு பதறல்! உடம்பில் ஒரு நடுக்கம், வேதனை!

அர்ச்சகர் விறுட்டென்று திரும்பினர். முனியப்பபிள்ளையை வரவேற்பதில் அவருக்கு இருந்த சிரத்தையில், தான் முன்பு விரட்டியடித்த ராகவன் நின்று கொண்டிருந்தது மட்டுமின்றிப் பேசினது அப்போதுதான் அவருக்குப் பட்டது. நடுவில் குறுக்கிட்டுக் கத்தினது அவருக்குக் கோபம் மூட்டினது.

தீபாராதனை தட்டைச் சுழற்றிக்கொண்டே, 'ஓய், எத்தனை தரம் சேவிப்பீர். அப்போதே உம்மைப் போகும்படி சொன்னேனே. அதை விட்டுவிட்டு இவர்களோடு வந்து ஒண்டிக் கொண்டதுடன், உபதேசம் வேறேயா? போம்! போம் வெளியே...என்னையா, உம்மைத்தான்! பெண்டுகள் இருக்கிறது கண் தெரியல்லே. அவர்கள் வரிசையிலே போய் நிற்கிறீரே. நகரும் ஐயா சீக்கிரம். அடுத்த மண்டபத்துக்கு' என்று சீறி விழுந்தார்.

ராகவன் அதைக் கேட்டு திடுக்கிட்டு நின்றான். 'போய் அங்கே இருங்கோ ஐயா, அப்புறம் வரலாம்' என்று இன்னும் இரண்டு குரல்கள் அவன் காதருகில் கேட்டன. ராகவன் திரும்பினன். தாமோதரனை சேவிப்பதிலும் கணக்கு வேறேயா? 'சரி! போய் இருக்கேன்' என்று கொண்டே மறுபடி ஒரு தரம் தாமோதரனை வணங்கிவிட்டு, அவன் மண்டபத்துக்கு வந்து படியோரம் நின்று தர்சனம் செய்து கொண்டிருந்தான்.

முனியப்ப பிள்ளை தர்சனம் செய்தாகிவிட்டது. வசந்த மண்டபத்தில் இரண்டு பெஞ்சுகள் கொண்டுவந்து போடப்பட்டன. நைவேத்ய அமுதுகள் அவர்களுக்கு முதலில் வழங்கப்பட்டன. பெட்ரோமாக்ஸ் விளக்கு ஒன்று அங்கே கொண்டு வந்து வைக்கப்பட்டது. ராகவன் பார்த்துக்கொண்டு நின்றான். 'இந்தா ஐயர், வந்து வாங்கிக் கொளேளேன்' என்று ஒருவர் அவன் கையைக் கிள்ளி ஏதோ வைத்துவிட்டுப் போனார்கள். அந்த நைவேத்யத்தை விநயத்தோடு ஏற்றுக் கொண்டான் ராகவன். அர்ச்சகர், பரிசாரகர்கள் பய பக்தியோடு நின்றுகொண்டிருந்தார்கள்.

'ஆத்தாக்கண்ணு, ஆத்தாக்கண்ணு!' என்று கூப்பிட்டார் தர்மகார்த்தப் பிள்ளை அப்போது. சுமார் முப்பது வயதுள்ள கறுத்த பெண் ஒருவள், தன்னை அழகு சுந்தரியாக எண்ணிக் கொண்டு அன்ன நடை போட்டு வந்தாள்.

'ஓஹோ, நீங்கள் சொன்ன கோயில் தாசியோ' என்று கேட்டார் முனியப்பபிள்ளை.

'ஆமாம், இவள் பூட்டி பேச்சி முத்துவின் பெயர் தெரியாதவர்கள் கிடையாது. மைசூர் தர்பாரில் நவராத்திரியின் போது சதிராடினவள். தாயார் குப்புக்கண்ணு வெகு பிரசித்தம்,' என்று அர்ச்சகர் படபடவென்று பேசினர். அதை அவர் சொன்னபோது ராகவன் அவரையே பார்த்துக்

கொண்டிருந்தான். தனக்குள் ஒருதாம் சிரித்துக் கொண்டான்.

'சரிதான்', என்றார் பிள்ளை வாள்.

தர்மகர்த்தா பிள்ளை கண் ஜாடை காட்டினர். ஆத்தாக் கண்ணு பாட ஆரம்பித்தாள். இனிமையான சுக சாரீரம் அவ ளுடையது. பாசுரத்தைப் பாடி னுள். ராகவன் மன உருக்கத் துடன் அதைப் பருகிக்கொண், டிருந்தான்.

முனியப்ப பிள்ளை திடீரென இடைமறித்து, 'என்னங்க சாமி! பாட்டு நன்றாக இல்லேயே.' நல்ல நாடகப் பாட்டாக இரண்டு பாடி னுலும் காது குளிர கேட்கலாம். அதை விட்டுவிட்டு...

'ஆத்தாக் கண்ணு. நாடகப் பாட்டு இரண்டு பாடு. ஐயா கேட் கட்டும் நித்யம்தான் பாசுரம் பாடு கிறதுதான் இருக்கவே இருக்கே, ஹ-ம்' என்றார் அர்ச்சகர்.

'அதுதான் சரி' என்று ஆமோ தித்தார் தர்மகர்த்தாப் பிள்ளை.

பாசுரம் நின்றது. ஆத்தாக் கண்ணு நாடகப் பாட்டை தொடங்கினுள்.

'அட, தமோதரா, தமோதரா!' என்று முனகிக்கொண்டான் ராக வன். பகவான் சன்னிதானத் திலே அந்த கருத்துக்கள்! அந்த மெட்டுகள்! ஐயோ! அவன் காதுகளில் எவ்வளவு கோர மாக வந்து தாக்கின. தனக்குள் புழுவாகத் துடித்தான். இந்த வேதவித்துக்களும், தாசியும் இதுவரையில் எங்கே இருந்தார் கள்? அவர்களுக்கு இடப்பட் டிருந்த கடமை எங்கே போயிற்று. எம்பெருமான் காது களில் விழ வேண்டிய வார்த்தை கள் இவைதானு?

ஒரு பாட்டு முடிந்தது. 'நல்ல பாட்டுங்க,' என்றார் முனியப்ப பிள்ளை. ஆத்தாக்கண்ணுக்கு உற் சாகம் பிறந்தது. இன்னொரு நவீன மெட்டை எடுத்தாள்.

ராகவன் தனக்குள் குழம்பி அவஸ்தைப் பட்டான். அவ னல் அங்கே அந்த வார்த்தைகளை பொறுக்க முடியவில்லே. தெய்வ சன்னிதானம் அசுத்தம் செய்யப்படுவது அவனை சித்ர வதை செய்தது. இவ்வளவை யும் பொறுத்துக் கொண்டிருக்கி றனே அந்த தாமோதரன்... இல்லே அவன் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டான்' என்று தனக்குள் உளறிக்கொண்டான்.

அந்த நாடக மெட்டின் பல்ல வியை ஆத்தாக்கண்ணு துவக்கி விட்டாள்.

ராகவன் சரேலென்று எம் பெருமான்பக்கம் தன் முகத்தைத் திருப்பினன். 'எம்பெருமானே! நீவேண்டுமானுல் இந்தக் கன்றாவி களை எல்லாம் பொறுத்துக்கொண் டிருக்கலாம். என்னுல் முடியாது. இன்று உன் சன்னதியில் நான் கண்டும், அழைத்தும், கேட்டும், பட்டதெல்லாம் போதும். இந்த அசுத்தக் கூட்டத்தில் தான் ஒரு வனுக இருக்க விரும்பவில்லே. உன் தர்சனம் போதும்,' என்று நினைத்துக் கொண்டே திரும்பி காலே எட்டிப் போட்டு, வெளி மண்டபத்தை விட்டு வெளியேறி னன்.

ஆத்தாக்கண்ணுவின் நாடக மெட்டு அவன் காதுகளிலிருந்து குறைந்து, நின்றுவிட்டது.

அகத்தியன் வைத்தியம்

மதுமேகம். (Diabetes)

மதுமேகத்தை அறவே ஒழிக்கும் சித்த ஔஷத முறைகள்

தற்போது நாம் இதனடியில் தெரிவித்திருக்கும் ஔஷத முறைகள் சித்தர்களில் ஒருவராகிய காளமேக சித்தருக்கு அகத்திய முனிவர் உடதேசித்தருளியவையாகும். இதன் தொடர்ச்சியாக இன்னும் பெரும் முறைகளையெல்லாம் வெளியிடப்படும்.

இதில் வெளியிடப்போகும் ஒவ்வொரு சித்த ஔஷத முறைகளும் மதுமேக ரோகத்தையும், பிரமேக நீர் வியாதிகளையும் அறவே ஒழிக்கும் திவ்ய ஔஷதங்கள். ஆகையால், இவ்வியாதியினுல் வருந்திக் கொண்டிருப்பவர்கள் இம்மருந்துகளைச் செய்து முடித்து உபயோகப் படுத்தி வியாதிகளினின்றும் விடுபட்டு, ஆரோக்கியத்தை அடைவீராக.

மதுமேகஸ்தர்களுக்கு ஸ்நானம்

1. மூளைக் கொதிப்புண்டாக்கத்தக்க ஆழ்ந்த சிந்தனை யுள்ளவர்களுக்கும் மதுமேக ரோகம் இருக்குமாயின், உயர்ந்த சந்தனத்தில் அசல் பன்னீர்விட்டுக் குழம்பாகக் கலக்கி உச்சி, உந்தி, உள்ளங்கால் இவ்விடங்களில் கனமாகப் பூசித்தேய்த்து, 2 மணி நேரத்திற்குக் குறையாமல் ஊறவைத்துப் பிறகு நன்ருகக் காய்ந்து ஆறிய ஜலத்தில் ஸ்நானம் செய்தல்.

2. 6 அவுன்ஸ் அசல் பன்னீரில் கால் அவுன்ஸ் சந்தன அத்தர் கலந்து பஞ்சில் நனைத்து உச்சியில் போடுதல். (காலை மாலை இரண்டு வேளைகளிலேயும்.)

3. உயர்ந்த பாதாம் தைலத்தை உச்சி, உள்ளங்கால்களில் தேய்த்து 1 மணி நேரத்திற்குக் குறையாமல் ஊறவைத்து ஸ்நானம் செய்தல்.

4. கோழி முட்டையின் வெள்ளை அம்பிலியை உச்சியில் தேய்த்து ஸ்நானம் செய்தல்.

5. ஆலம்பால், அத்திப்பால், புங்கம்பால் இவைகளை சமனிடையாகக் கலந்து உச்சியில் தேய்த்து ஸ்நானம் செய்தல். (தட்டைப் புங்கன் மரத்தின் வேர் பட்டையிலிருந்து பால் எடுக்கவும்.)

6. சூரத்துக்கடுக்காய் தோல், தானிக்காய்த்தோல், நெல்லி வற்றல், கசகசா, கஸ்தூரி—மஞ்சள், வெள்ளை மிளகு, இவைகளை சமனிடையாக நிறுத்தெடுத்து சீந்தில் கொடி கஷாயம் விட்டு அறைத்து சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்தல்.

7. அத்திப்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, ஆவராம் பட்டை, நாகப்பட்டை, கல்லாலமரத்தின் பட்டை, மருதம்பட்டை, புங்கம்பட்டை, இலுப்பம்பட்டை இவைகளை வகை ஒன்றுக்கு 2 வீசை கொண்டுவந்து மசிய இடித்து ஓர் பெரிய மண் பாண்டத்தி லிட்டு 32 படி ஜலம் விட்டு ஊற்றி, எட்டிலொன்றாக சுண்டவைத்து, இறுத்து, வேறு ஒரு பாத்திரத்தில் பாண்டத்தை, 8 அடி உயரத்தில் தூக்கிக் கட்டி பாண்டத்தின் அடியில் சிறு துவாரமிட்டு பாண்டத்திலுள்ள கஷாயம் துவாரத்தின் வழியாக தாரையாக வியாதிஸ்தரின் தலையில் விழும்படி செய்ய வேண்டும். (இந்த முறையாக வாரம் ஒருமுறை செய்து வருதல்.)

8. மதுமேக ரோகத்திற்குத் தைலம்:—அத்திப்பால், ஆலம் பால், புங்கம்பால் வகைக்கு கால்படி, அத்திக்கள்ளு படி 2, சீந்திற் கொடிச்சார் அல்லது கஷாயம் படி 2, குமரிச்சார் (சோற்றுக்கற்றாழை) படி $1\frac{1}{4}$, இவைகளை ஒன்றுபடக் கலந்து 6 வீசை நல்லெண்ணெய்யில் சேர்த்து 7 நாள் சூரியபுடம் வைத்துக்கொண்டே வரவேண்டும். சூரிய புடத்திற்கு வெய்யில் கடுமையாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் அடிக்கடி கலக்கி விட்டுக்கொண்டே இருக்கவேண்டும். இப்படி 7 நாட்களும் இருந்தவுடன் எட்டாவது நாள் பசும்பால் படி 3, சேர்த்து சிறு தீயில்வைத்து காய்ச்சவேண்டும். கொதித்து வரும் சமயத்தில் சந்தனத்தூள் வீசை 1, வெட்டிவேர் வீசை 1, சித்தா முட்டிவேர் வீசை 1, இவைகளை மசிய இடித்து 16 படி ஜலம்விட்டு 4 படியாகச் சுண்டக்காய்ச்சி கஷாயத்தை வடிகட்டி மேற்படி எண்ணெயுடன் சேர்த்து காய்ச்ச வேண்டும். இவைகள் யாவும் ஒருமித்து பாதியளவுக்குச் சுண்டிவரும் சமயத்தில் உயர்ந்த சந்தனம் அறைத்த சந்தனம் வீசை அரை சேர்த்துக் கலக்கவேண்டும்.

கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், அதிமதுரம், சதகுப்பை, கடுகுரோணி, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிஷ்டி, சிறுநாகப்பூ, சண்பகமொக்கு, நன்னாரிவேர், கோஷ்டம், கொம்பரக்கு, பூலாங் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், தக்கோலம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம், ஏலக்காய், லவங்கப்பட்டை, கோரக்கிழங்கு, இலுப்பப்பூ, மகிழம்பூ, செஞ்சந்தனம் முதலிய 27 தினுசுகளும் வகை 1க்கு ஒரு பலம் வீதம் எடுத்துக்கொண்டு ஒன்றுபடக் கலந்து தூளாக இடித்து பசும்பால்விட்டு மைபோல் அறைத்து, முன் சித்தப்படுத்தி வைத்திருக்

கும் மேற்படி எண்ணெயுடன் கலந்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்ளவும்.

இப்படி முடித்திருக்கும் தைலத்தை ஒரு பெரிய ஜாடியில் ஊற்றி மேல் வாய் மூடி சீலை செய்து நெற்குவியலுக்குள் 20. நாளைக்குக் குறையாமல் வைத்தெடுத்து புட்டிகளில் நிறப்பி, வெளிச்சமில்லாத அறைகளிலாவது அல்லது பெட்டியிலாவது வைக்கவேண்டும்.

இத்தைலத்திற்கே மேக பஞ்சாமிர்தத் தைலமெனவும், மேக குலாந்தக தைலமெனவும் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தைலத்தில் மிகவும் கஷ்டத்துடன் சேகரிக்கவேண்டியது அத்திக்கள்ளு ஒன்றே யாகும். இதற்கு பொருள் செலவும், ஆட்கள் சகாயமும் அவசியம். இல்லையேல் அத்திக்கள்ளு கிடைப்பது கஷ்டமேயாகும். அத்திக்கள்ளு கிடைக்கும் விபரங்களை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

இத்தைலத்தின் உபயோகத்தால் தீரும் வியாதிகள்.

இத்தைலம் தேய்த்து வாரம் ஒன்றுக்கு இரண்டு முறை ஸ்நானம் செய்துவந்தால் மதுமேக ரோகத்தினாலும் பல நீர் வியாதிகளாலும் நீரழிவு, நீர்க்கடுப்பு, மூளைக்கொதிப்பு, புழுவெட்டு, சரீர காங்கை, கண், கைகால் எரிச்சல், மயக்கம், அவயவங்களின் நடுக்கம், இருதய துடிப்பு, வாய் நீரூறல், தாகம், தாபம், நித்திரையில்லாமை, கண்ணீர் வடிதல் முதலிய உபத்திரவங்களை யெல்லாம் அறவே போக்கி, மூளையின் நாடி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுப்பதுடன், ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்து, ரத்தக் கொதிப்பை மாற்றி, சரீரத்திற்கு காந்தியை உண்டாக்கித் தரும். இவ்வருமை வாய்ந்த தைலம் நீர் வியாதிஸ்தர்களுக்கு மிகவும் முக்கியமானது. இத் தைலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு பகலில் நித்திரை செய்யக் கூடாது.

உச்சி, உந்தி, உள்ளங்கால்களில் தைலம் தேய்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஸ்நானத்திற்கு ஒண்ணரை அவுன்ஸ் தைலத்திற்கு குறையாமல் இருக்கவேண்டும்.

(தொடரும்).

ஓய்யார உயில்

விகடானந்தன்

ஒரு குடியானவனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள்; ஒருவன் இறந்து போன மூத்த தாரத்தின் மகன், மற்றவன் இளைய மனைவியின் மகன். சொத்து சுயார்ஜிதம். சொத்து முழுவதையும் தனக்கு கொடுத்துவிடவேண்டும் என்பது இளைய மகனுடைய கட்சி. இளைய தாயார் விஷம் வைத்து விடுவாள் என்று பயந்து, மூத்த பையன் தனக்குப் பாகம் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று வற்புறுத்தினான்.

"எனது பெண்ஜாதி உனக்கு விஷம் வைத்து விடுவாளா?" என்று தகப்பன் கோபம் கொண்டு, "உனக்கு பாகம் கிடையாது" என்று விரட்டி விட்டான். தந்தையின் மனதும் கோணி விட்டது, என்று மூத்த மகன், வயிற்றுப் பிழைப்புக்காக பினங்குக்கு ஓடி விட்டான்.

இளையதாரம் படுத்தின பாட்டினாலும், தான் உயிரோடிருந்தும், சொத்துப் படைத்திருந்தும் மூத்த மகன் அநாதையாகப் போய்விட்டானே என்ற வியாகுலத்தினாலும், அவன் வெகு வேகமாகக் கிழவனாகி விட்டான்.

இளைய பையன், "நீ இறந்து போனதும், அண்ணன் தனது பாகத்தை அடித்துக்கொண்டு போக வந்து விடுவான்; சொத்து முழுவதையும் எனக்கு உயில் எழுதி வைத்துவிடு" என்று பல தடவை வற்புறுத்தினான்.

அதற்கு தகப்பன், "அது முடியாது. இத்தனை வருஷங்களாக அவன் தன் சோத்தைத் தின்று வருகிறான். நீ என் சோத்தைத் தின்று வருகிறாய். அவனுக்கு முக்கால் பங்கும் உனக்குக் கால் பங்குமாகக்கொடுப்பதுதான் நியாயம். அவ்விதமாகப் பாகம் வேண்டாமென்றால், ஆளுக்குப் பாதியாக வைத்துக் கொள்ளுங்கள்", என்று பிடிவாதமாக மறுத்துவிட்டான்.

கடைசியாக ஒரு நடு நிசியில் தகப்பன் இறந்து போய் விட்டான்.

இளைய பையன் யுக்தி செய்தான். அசைப்பில் தகப்பன் போலத் தோன்றும் ஒரு தரித்திரக் கிழவன் அந்த ஊரில் உண்டு. அவன் வெங்கரை என்ற எட்டிய ஊரிலிருந்து இங்கு வந்து குடியேறினவன்; ஆகையால் அவனுக்கு 'வெங்கரையான்' என்ற பெயர் வழக்கத்தில் வந்து விட்டது. அவனுடைய வீட்டிற்குப் பையன் அந்த நடுராத்திரியில் சென்றான்.

வெங்கரையான், "என்னப்பா, அவருக்கு அதிகமாகி விட்டதா?" என்றான்.

ன் பையன், "அவர் செத்தே போய் விட்டார். நான் வேண்டிக் கொண்டிருந்த உயிலை எழுதாமலேயே போய் விட்டார். வேகமாக உயில் எழுதியாக வேண்டும்", என்றான்.

வெங்கரையான், "அது எப்படி முடியும்?". என்று கேட்டதற்கு, பையன், "அசைப்பில் பார்த்தால் நீயும் அவரும் ஒரே மாதிரி யிருக்கிறீர்கள், நீயும் உனது தரித்திரத்தினால் க்ஷவரக் கூலிக்குக்கூட காசு இல்லாமல், சிக்குக்காரன் போலவே தோன்றுகிறாய். ஆகையால் நீ வந்து எனது வீட்டில் தகப்பன்போல் படுத்துக்கொண்டு, நோயாளிபோல் நடிக்க வேண்டும். நானுபேரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். எழுத்துக் கூலிக்காரனொருவனும் வருவான். அவர்கள் எதிரில் நீ உயில் எழுதச் சொல்லி, பேனாவைத் தொட்டுக் கொடுத்து விட வேண்டும்", என்று சொல்லிக் கொண்டே, வெங்கரையானிடம் 25 ரூபாயைக் கொடுத்தான்.

வெங்கரையானுக்குக் காலையிலிருந்தே, வலது கண் துடித்துக் கொண்டிருந்தது. பணம் இருபத்தைந்து கைக்கு வந்துவிட்டது. அதற்கப்புறமும் வலது கண்ணின் துடிப்பு நிற்கவில்லை.

இன்னமும் வருமானம் உண்டு போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டே, அந்த செத்த வீட்டிற்குப் போய், பொருத்தமாக சிக்குக் கட்டிலில், பொருத்தமாக போர்வையைப் போத்திக் கொண்டு, படுத்துக்கொண்டான். அரை நாழிகையில், எழுதுபவனும் சாட்சிகளும் வந்து விட்டார்கள்.

கட்டிலைச்சுற்றி, அசிங்கமான கோழையை எப்படியோ சம்பாதித்துக் கொண்டுவந்து, பையன் தெளித்திருந்தான். ஒருவனும் கட்டிலண்டை போக நினைக்க முடியாதபடி பண்ணிவிட்டான்.

கிழவன் வெங்கரையான், "சீக்கிரம் எழுதிப் போடப்பா. பிராணன் போய்க்கொண்டிருக்கிறது. துரோகிப் பயல் மூத்தவன் வரவேயில்லை. எனது சொத்து சின்னப் பயலுக்கே சேரவேண்டும். வீடு, காடு, சுண்ணாம்புக்களம், வரவேண்டிய சில்லரைகள் எல்லாம் இவனுக்குத்தான். ஆனாலும், வெங்கரையான் இருக்கிறான்; எனது தம்பிபோல் சிநேகமாக நடந்து கொண்டவன்; பரம ஏழை, யோக்கியன், ஆசையே அற்றவன், பொய்யும் பாசாங்கும் கொஞ்சமும் தெரியாதவன், அந்த வெங்கரையானுக்கு இரண்டு ஏகராத் தோப்பையும் கொடுத்துவிடுகிறேன்," என்று சொல்லி முடித்தான்.

பையனுக்கு தட்டிப்பேச வசதியில்லை. எப்படியோ காரியம் முடிந்துவிட்டது. கீரல், வைத்தாய் விட்டது, சாட்சிகளும் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள்.

பின்பு வெங்கரையான், மெள்ள வியர்த்துக் கொண்டு, எழுந்தான். "தம்பி, சாகிறது சுலபம் போலிருக்கிறதே! உனது தகப்பனைப் பார். என்ன சுகமாகப் படுத்துத் தூங்குகிறான். பொய் சொல்வது பெரும்பாடாகப் போய்விட்டது, போ. கலபம்

என்று நினைத்துக்கொண்டு, இருபத்தைந்து ரூபாய்க்கு வந்து விட்டேன். படுத்துப் பார்த்தால் அல்லவோ தெரிகிறது. பிழைக்கும் ஒருவன் சாகிறவனைப்போல் பேசவேண்டும், சௌக்கியமாக இருப்பவன், ரோகி மாதிரி பேசவேண்டும்; 12 கண்களும் என்னைப் பார்த்தவண்ணம், 12 காதுகளும் என்னை உற்றுக் கேட்டவண்ணம்! ரொம்ப கஷ்டம். 25 ரூபாய் கூலி போதாதென்று தீர்மானித்தேன். அதிகக் கூலி கேட்கலாம் என்றால் சமயமில்லை. காரியமோ அவசரம், உனது நன்மையை உத்தேசித்து—கேவலம் எனது கூலிக்காக ஒத்திப் போடக் கூடாது, உனக்கு துரோகம் பண்ணக் கூடாது, என்று யோஜித்து, அந்த இரண்டு ஏகரா தோப்பை எனக்குக் கூலியாக ஏற்படுத்திக் கொண்டேன்," என்றான் வெங்கரையான்.

பையன், "என்ன! கேலியாகத்தானே அப்படி எழுதச் சொன்னது? நிஜமாகவே அந்த இரண்டு ஏகராவைக் கேட்பாயா என்ன?" என்று கேட்டான். அதற்கு வெங்கரையான், "அது கேலியென்றால் எல்லாம் கேலிதான். முழுதும் கேலியென்றுதான் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். பொழுது விடிந்ததும், எல்லாரிடமும் போய் நடந்ததைச் சொல்லிவிட்டுத்தான் மறு காரியம் பார்க்கப் போகிறேன். ஊரே சிரிக்கட்டும்" என்றான்.

பையன், திகிலடைந்து, "அப்படிப் பண்ணி விடாதே, அந்த இரண்டு ஏகராவை நீயே எடுத்துக்கொள்," என்று சொல்லி வெங்கரையானை சாந்தப்படுத்தி யனுப்பினான். பின்பு தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"நிஜ அண்ணனை விரட்டினால்,
பொய் அண்ணன் முளைத்து
விடுகிறான்."



மின்னக் கலை

"மணி"

(பத்மநாபன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பல்லைக் குத்திக் கொண்டிருக்கிறன். பவானி அரிக்கன் லைட் கிளாசை எடுத்துத் துடைத் துக்கொண்டிருக்கிறள். கை அதற்குள் நுழையாமல், சிரமப்பட்டு, நுழைத்து விடுகிறள். பிறகு அது எடுக்க வரமாட்டேனென்கிறது. சிர மப்படுகிறள். பத்மநாபனைப் பார்க்கிறள். அவன் அவளைப் பார்க்க மாட்டே னென்கிறன்—விஷயம் அவனுக்குத் தெரியும்.)

பவானி :—ஐயோ. இந்த அரிக்கன் விளக்கு! துடைக்கவே வருகிறதில்லை. இது வேண்டாம்னு, கேட்டால்தானே!

பத்மநாபன் :—(புளளியாக) இருக்கட்டும். இருக்கட்டும். நம் மாத்திலே, எலக்ட்ரிக் லைட் போடுகிறவரைக்கும் இதுதான் இருந்து விட்டுப் போகட்டுமே!

பவா :—(கோபமாய்) புளளியைப் பாரு, புளளியை! எலக்ட்ரிக் லைட் என்னத்திற்கு? சிம்னி வாங்கி வைங்கோ! இஞ்சின் மாதிரி புகையுமே, சின்ன இஞ்சின்!

பத்ம :—அந்த இஞ்சின் வாங்கரத்துக்கூட இப்பக் காசு கிடை யாது! பலசரக்குக் கடைக்காரனுக்கு பதிமூன்று ரூபாய் கொடுக்க ணும். அந்த சங்கரன் பயல் கிட்டே ரெண்டு ரூபாய் வாங்கி இருந் தேன். அவன் நாலுதரம் வந்துட்டுப் போயிட்டான்!

பவா :—எல்லாம் பட்டால்தான் தெரியும்! பணத்தைக் கடன் வாங்கியாவது அவகிட்டே கொண்டுபோய் அழுகிறபோது...!

பத்ம :—(பொய் கோபத்துடன்) சீச்சீ! கழுதை! என்ன வரவர வாய் ஜாஸ்தியாகிறது?

பவா :—என் முகத்திலே அசடு வழியாது? கஷ்டம்! கஷ்டம்! தலை எழுத்து!!

பத்ம :—(கனிந்து) பவானி, ஏன் இப்படி எல்லாம் அபாண்டத் தைச் சொல்லுகிறய்? நீயாகப் பார்த்துத்தானே, வீட்டு வேலை செய்ய அவளை அமர்த்தினய்?

பவா :—ஆம்! அதனலென்ன?

பத்ம :—அதனல் ஒன்றுமில்லை! கடைசியில் நீயாகத்தானே அவளைப் போகவும் சொன்னது? ஒரு வீருஷமாகியும் அவளையே ஏன் தூஷித்துக்கொண்டிருக்கிறய்?

பவா :—மின்னக் கலையைச் சொன்னால் வருகிற கோபத்தைப் பார்!...த் சொத் சொத் சொ! என்ன ஒற்றுமை......

பத்ம :—நீயாக ஏதேனும் ஒன்றுக்கு, மூக்கும் காதும் வைத்துக் கட்டி விட்டால்...... (கோவில் மணி அடிக்கிறது.)

பவா :—ஐயோ—அம்மா! இந்த வீட்டில் போராடுகிறதுக்குத் தான் பொழுது சரியாக இருக்கு! தீபாராதனைக்குக்கூடப் போக முடிகிறதில்லை...கோவிலுக்குப் போயிட்டு வரேன்.......(போகிறாள்.)

பத்ம :—மின்னக்கலை போய் எத்தனை நாளாகிறது! அவள் மண்டையைப் போட்டு இன்னும் இவள் உருட்டிக்......(பின்பக்க வாசலில் கதவு தட்டும் சப்தம்)

பத்ம :—யாரது

குரல் :—நான்தான்......

பத்ம :— (ஆச்சரியத்தில்) ஆ! யார்......மின்னக்கலையா...

(ஓடிப்போய் கதவைத் திறக்கிறான்)

மின்னக்கலை...மின்னக்கலை...

(ஆசையும் ஆர்வமும் தோன்ற) ஏதேனும் அகப்பட்டதா மின்னக்கலை ?...

மின்ன : –இல்லையே. நீங்கள்தான்...

பத்ம :—மின்னக்கலை! என்ன நீகூடவா இப்படிப் பேச வேண்டும்? உனக்குத்தெரியாதா! இவள் இருக்கிற வரைக்கும்......

மின்ன :—இல்லை. இல்லை. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அதற்காக நீங்கள் பவானியம்மாளை ஒன்றுமே சொல்லக்கூடாது. எனக்கு எங்கேயும் வேலையகப்படாவிட்டால் என்ன......

பத்ம :—ஐயோ. உனக்கிருக்கும் அந்த புத்திகூட இவளுக்கு இல்லையே! ஒரு வருஷத்தில் ஒரு நாளாவது இந்தப் பக்கம் நீ வரக்கூடாதா?

மின்ன :—......

பத்ம :—என்? என்ன? இந்த மௌனத்தின் அர்த்தமென்ன, மின்னக்கலை?

மின்ன :—நான் இங்கேயே, இந்த ஊரிலேயே இல்லை!

பத்ம :—(அர்த்தமே ஆகாதுபோல்)...என்ன? அப்பொழுதே நீ...

மின்ன :—(தலையைக் குனிந்துகொண்டு) ஆம்! கஷ்டம் தாங்க முடியாமல் போய்விட்டது! பைத்தியம் பிடித்தமாதிரி...

பத்ம :—இரு, இரு! என்ன இப்படி! கண்ணில் ஏன் நீர் கலங்குகிறது?

மின்ன :—(தன்னையும் மீறி) ஆம்! எனக்கு வேறு கதி? இங்கே இருந்த குடிசையும் போனபிறகு எனக்கு இருக்க இட மேது?

பத்ம :—நீ அதில் இருக்கக்கூடாதென்று சொல்லி விட்டானு...

மின்ன :—ஆம். அன்றைக்கே புறப்பட்டு விட்டேன். அதற்குப் பிறகுதான் என்னுடைய...

(தூரத்தில் குழந்தை அழுகிறது. திரும்பிப் பார்க்கிருள்.)

பத்ம:—யார் து—குழந்தை—

மின்ன :—உங்களுடையது.

பத்ம :—என்ன...என்ன...மின்னக்கலை. நான் அதைப்பார்க்க வேண்டும்,—பார்க்கட்டுமா......

மின்ன :—நான் போய்க் கொண்டு வருகிறேன்.

(ஓடுகிருள்)

பத்ம :—சீ! நான் நன்றியற்றவன்.. என் தலைக்குமேலே தொங்கிக் கொண்டிருந்த பாரத்தை எவ்வளவு சுலபமாகத் தூர விலக்கி விட்டேன்!

(மின்னக்கலை மௌனமாய்த் தனது குழந்தையை பத்மநாப னிடம் கொடுக்கிருள்.)

பத்ம :—(ஆசையாக) இதுவா......

மின்ன :—(செல்வமாக) முகத்தைப் பார்த்துக்கூடத் தெரிய வில்லை போலிருக்கு!

பதம :—ஐயோ, இதன் அதிர்ஷ்டமா, குடிசையில் பிறக்கவேண்டு மென்று இருந்தது!

மின்ன :—இல்லை. அது குடிசையில்கூட பிறக்கவில்லை!

பத்ம :—இல்லையா!

மின்ன :—இல்லை. வெகுதூரத்தில்! பாம்பாற்றின் கரையில்—அரச மரத்தடியில்!

பத்ம:—இது என்ன? (கண்ணீர், தளும்புகிறது, அழுத்தமாய்... நிதானமாய்) ஆம், ஏன் இருக்க முடியாது? என்னுடைய கல்நெஞ்சு அதை அறிந்து கொள்ள முடியாவிட்டால், அது முடியாததா?

மின்ன :—கடைசியில் உங்களிடமே வந்துவிட்டேன். வேண் டாம்—கூடாது —என்றுதான் முதலில் எண்ணினேன். ஆனால், இது... இந்தக் குழந்தை......

பத்ம :—நிச்சயம். என்னுடையது. என்னிடம்தான் வரவேண் டும்—அப்பா! என்ன குளிர்!—ஆனல்......

மின்ன :—ஆனல், என்ன?

பத்ம :—ஒன்றுமில்லே.

மின்ன :—என்ன ஒன்றுமில்லே.

பத்ம: —ம்ம்...பவானி ?

மின்ன:—.........

பத்ம :—என்ன பேசாமலிருக்கிருய்—மின்னக்கலே !

மின்ன :—உண்மை! பேசுவதற்கு என்ன இருக்கிறது ?

பத்ம :—உனக்குத் தெரிகிறதா—அவள் வந்தால்...பவானி வந்தால்—நான்......

மின்ன :—ஆம்—(வெளியில் பார்க்கிருள். பலமாகத் தூரல் போடுகிறது)—சரி !

பத்ம :—மின்னக்கலே ! எங்கே போகிருய்? மழை, வெளியில் ! இரு.

மின்ன:—பவானியம்மாள் வந்து விடலாம்... அதோ--(வாசலில் கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. மின்னக்கலே ஓடிவிடுகிருள்).

பத்ம:—(வெளிக் கதவைத் திறக்கிருன்—பவானி உள்ளே வருகிருள்)

பவா:—அடேயப்பா! என்ன இழவு மழை—அகாலத்தில் ! தொப்பல் தொப்பலாக நனேந்தே போய் விட்டேன்!

பத்ம :—(பயங்கரமாய்) நனேந்து போய்விட்டாயா ! அய்—யோ ! குழந்தை !

பவா :—என்ன அது ? குழந்தையா ? எந்தக் குழந்தை ? (மழை உள்ளே அடிக்கிறது).

பத்ம:—ஐயோ ! என்ன சீரல் !

(வெளியில் ஓடுகிருர். காற்று பலமாக வீசுகிறது.)

பவா:—(கதறுகிருள்) எங்கே! மழையடிப்பது தெரியவில்லையா ? இந்த மழையில்.........

பத்ம :—குழந்தை—குழந்தை !......

(வெகுதூரத்தில் பத்மனுபன் குரல் கேட்கிறது). மின்னக்கலே !

பவா:—(புல்லரித்து) மின்னக்கலேயா—?

(உட்கார்ந்து விடுகிருள்)

முதல் கடிதம்

'புவனம்'

அம்மா,

வாரம் ஒரு கடிதம் போட்டுக் கொண்டிரு என்று அப்பாவும் நீயும் ஒரு தடவைக்கு பத்து தடவையாக சொல்லி விட்டுப் போயிருக்கிறீர்கள். நான் இங்கு வந்து—நீங்கள் என்னை விட்டு விட்டுப் போய்—நாளைக்கு எட்டு நாள் ஆகிறது.

வாஸ்தவம். இத்தனை நாள் பதினாலரை வயது வரையில் சதா சர்வதா உங்களோடு கூடவே இருந்து, வளர்ந்து, புவனம் புவனம் என்று கொடிக்கு நூறு தடவை அப்பாவும், நீயும் அண்ணாவும், ஸரஸாவும் எதையாவது கேட்டும் சொல்லியும் 'வந்ததெல்லாம் இப்போது நினைத்து நினைத்துப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். எனக்கே அப்படி இருக்கிறதே, உங்களுக்கும் அப்படித்தானே இருக்கும். என்னைப் பற்றித்தானே நினைத்துக் கொண்டிருப்பீர்கள்.

நல்ல வேளை அம்மா, நமது ஊருக்கு கான்வெண்ட் பள்ளிக்கூடம் வந்தது. அதனாலேதானே இரண்டாவது பாரம் வரைக்கும் அதாவது ஏழாம் வகுப்பு வரைக்கும் நான் படிக்க முடிந்தது. நான் ஐந்தாம் வகுப்பு எலிமெண்டரி பள்ளிக்கூடத்தில் தேறின உடனேயே 'போதும் படித்த படிப்பு. 'பெரிய புருஷ பள்ளிக்கூடத்தில்' போய் நீ ஒன்றும் படித்து கிழிக்க வேண்டாம்' என்று ஒரே யடியாக நீ சொல்லி நிறுத்திவிட்டாய். அப்பாவுக்குக்கூட கொஞ்சம், பெரிய பள்ளிக்கூடத்தில் நான் படிக்க வேண்டும், ஏதோ இரண்டு இங்கிலீஷ் வார்த்தையாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசை இருந்தது. 'ஆமாம், பிள்ளைகள் இங்கிலீஷ் வாசித்து உத்யோகம் பண்ணி கிழித்தாய் விட்டது. நாளைக்கு புருஷன் வீட்டுக்கு ஓடிப்போய் செக்கு மாடு மாதிரி உழைத்து, சமயலறையை விட்டு வெளியே வராமே இருக்கப்போகிறவளுக்கு இரண்டு இங்கிலீஷ் வார்த்தை தெரிந்துவிட்டால் ரொம்ப காரியம் ஆகப்போகிறது என்று அப்பாவோடு தர்க்கம் பண்ணினாய். உன் வார்த்தையும் அப்பாவுக்கு ரொம்ப சரியாகப் பட்டது போலிருக்கு. 'புவனம், பள்ளிக்கூடம் போனது போரும். 'வீட்டில் இருந்து அம்மாவுக்கு உதவி செய்துகொண்டிரு' என்று சொல்லிவிட்டார்.

ஆனால் எனக்குத்தான் அப்போது திருப்தியே இல்லை. உங்களிடம் சொல்லி, பெரிய பள்ளிக்கூடத்துக்கு, என் சிநேகிதிகளோடு போய் படிப்பேன் என்று முரண்டினது எல்லாம், ஞாபகம் இருக்கும். ஒன்றும் பிரயோசனம் இல்லை,

நல்ல வேளையாக கான்வென்ட் பள்ளிக்கூடம் பெண்களுக்கு அதே வருஷமே ஏற்படுத்தினது சௌகரியமாக இருந்தது. அப்பா பிரஸ்தாபிக்க,நீயும் ஆமோதித்து, 'ஆமாம், குடும்பம் தாங்கவில்லே ரொம்ப. இந்த ஒரு நாழி காரியத் துக்கு இன்னும் நாலுபேர் வேண்டும். என்னவோ, படித்து விட்டுப்போகட்டும். வயதும் பதினொன்று தானே ஆகிறது. இரண்டு வருஷம் படித்தால்கல்யாணம் ஆகிறதற்கும் அதற்கும் சரியாகிவிடும்' என்று சொன்னய்.

நல்ல வேளே தான். அந்த

இரண்டு வருஷத்தில் இரண்டு இங்கிலீஷ் வார்த்தைகள் மட்டும் எழுத, பேசக் கற்றுக் கொள்ள வில்லே. தமிழே நன்ருக, தட்டித் தடவி வாசித்து எழுதாமல், வேகமாக எழுதி, கிரஹித்துக் கொள்ளவும் எனக்கு இப்போது சக்தி இருக்கிறது.

இதெல்லாம் எதற்கு எழுதுகிறேன் என்ருல் இந்த படிப்பு எனக்கு தெரிந்திருக்காவிட்டால், நான் எப்படி உனக்குக் கடிதம் எழுத முடியும்? நீயும், அப்பாவும் சொல்லிவிட்டுப் போனபடி பார்த்தாயா, நான் அப்போது படித்த படிப்பு எவ்வளவு தூரத் துக்கு இப்போது பிரயோசனப் படுகிறதென்று.

எனக்கு இப்போது என்ன ஞாபகத்துக்கு வருகிறது தெரியுமா? ஸரஸாவையும் அப்படியே படிக்க வைக்க வேண்டுமென்று. நான் இன்னொன்று கூடச் சொல்வேன். இன்னும் இரண்டு வகுப்புகள் கூட அவள் படிக்கலாம் என்று. அதனாலென்ன, நான் வெண்ட் பள்ளிக்கூடத்தில் தான் பத்தாவது வரை இதர ஊர்களில் படிக்கலாமே. நானுவது பதினெரு வயதுக்கு ஐந்தாவது பாஸ் பண்ணினேன். ஸரஸா எட்டு வயதிலேயே மூன்ருவது படிக்கிருளே, என்னைவிட அதிகம் படிக்க கல்யாணம் ஆகும் வரையில் அவகாசம் இருக்கிறது. அதைப்பற்றி யோசித்துக் கொள்ளுங்கள்.

இவ்வளவு சாவகாசமாக கடிதம் எழுதுவதற்கு எனக்கு இங்கே எப்படி அவகாசம் கிடைத்தது என்று ஆச்சரியப்படுவீர்கள். அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொல்ல வந்தேன்.

நீங்கள் என்னையும் அவரையும் மறு வீடு கூட்டிக்கொண்டு போய், மூன்று நாட்கள் வைத்துக் கொண்டிருந்து விட்டு, (அவருக்குத்தான் லீவு கிடையாது என்று கண்டிப்பாக சொல்லிவிட்டாரே) சம்பிரதாய மரியாதைப்படி இங்கு கொண்டுவிட்டு, ஒரு நாள் கூட தங்காமல் அன்றே விருந்து சாப்பிட்டுவிட்டு ஊருக்குப் போய் விட்டீர்கள். இன்னும், கூட இரண்டு நாட்களாவது நீங்கள் என்கூட இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஏமாற்றி விட்டீர்கள்.

அப்போது எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது. நாலைந்து வருஷங்களுக்கு முந்தி மன்னியை முதல் முதல் நம் வீட்டில் கொண்டு வந்துவிட அவளுடைய அப்பாவும் அம்மாவும் வந்த போது நடந்தது. மன்னியின், அப்பா, அம்மா இவ்வளவுக்கும், கூட இரண்டு நாட்கள் இருந்தார்கள். மன்னி புது இடத்தின் வேற்றுமையை அவள் திடீரென உணராமல் கொஞ்சம் பழகிக் கொள்வதற்கு. அப்படி இருந்தும் அவர்கள் விடைபெற்றுக் கொள்ளும்போது மன்னி எவ்வளவு அழுதுவிட்டாள், நானும் கூட வருவேன் என்று! எவ்வளவு சமாதானப்படுத்த வேண்டி இருந்தது அவளை! ஏன் அவள் அம்மாவே கண்ணை கசக்கிக் கொண்டாளே.

அந்த மாதிரி நான் அழவில்லை என்பது வாஸ்தவம். 'நாங்கள் போய்விட்டு வரோம் சமத்தாக இரு', என்று நீ புத்தி சொன்ன போதும், அப்பா கூடத்திலிருந்து 'வரட்டுமா புவனம் என்று' சொல்லிக்கொண்ட போதும், தலையை ஆட்டித்தான் பதில்தர முடிந்ததே தவிர வார்த்தை ஒன்றும் தொண்டைக்கு வெளியே கிளப்ப முடியவில்லை. நீங்கள் வண்டியேறி கார் புறப்பட்டுப் போன சப்தம் குறைந்ததும் சயனஅறைக்குள் வந்து நின்றேன்.

எனக்கு என்னவோ வெறிச்சென்று இருந்தது. ரொம்ப புதிசான ஒரு சந்தர்ப்பத்தில் விடப்பட்டதான உணர்ச்சிதான் இருந்தது, எனக்கு. எங்கேயும் உட்காரக்கூடத் தோன்றவில்லை.

நின்றுகொண்டே இருந்தேன். அம்மா உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தை என்னை அறியாமலே என் கண்கள் திரும்பித் திரும்பி பார்க்கும்.

மாமியார் மற்றவர்கள் எல்லாம் அந்த சமயம் கூடத்திற்கு திரும்பி வர, அவர்களைப் பார்ப்பதிலும், கேட்பதிலும் மனசு கொஞ்சம் திரும்பினது. அப்போதுதான் அவரும் சமயலறைப் பக்கம் நுழைந்தவர், நான் ஒதுங்கி சுவற்றோடு சுவராக நிற்பதைக்கண்டு 'ஐயோ, பாவம்! அம்மா விட்டு விட்டுப் போய்விட்டாள். அழுகை வருகிறதுபோல இருக்கு முகத்திலே' என்று கிண்டலாக பேசவும் அவரைத் தொடர்ந்து வந்த எல்லோரும் சிரித்தார்கள். எனக்கு வெட்கமாக போய்விட்டது. முகத்தை திருப்பிக்கொண்டேன். நான் தைர்யமாகத்தான் இருந்தேன். ஆனல் அவர் கிண்டல் செய்ததும் அழுகை வந்துவிடும் போல், எனக்குப் பதைபதைப்பு உண்டானது. சே! வந்தாலும் வெளிக் காட்டக் கூடாது என்ற ஜம்பத்தில் உதட்டை ஒருதரம் கடித்துக் கொடுத்து சமாளித்துக் கொண்டேன்.

எல்லோரும் குறுக்கும் நெடுக்குமாக அடிக்கடி வீட்டிற்குள் போய்க் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு தரமும் எழுந்து உட்கார்ந்து கொள்வதற்குப் பதில் நின்றுகொண்டே இருந்தேன். 'ஏன், புவனம், சின்ன அறையில் போய் உட்கார்ந்து கொள்ளேன். கால் வலிக்க நிற்பானேன்' என்றாள் மாமியார்.

நான் போய் உட்காரவில்லை. உட்கார்ந்துகொண்டு இருப்பதற்காகவா அங்கே வந்திருக்கிறேன். அப்படியே உட்கார்ந்து கொண்டு விட்டாலும் நன்றாக இருக்குமா? பின்னல் என்ன பேச்சு கிளம்புமோ? புது மனுஷ சுபாவத்தை யார் கண்டார்கள்? சும்மா நின்று கொண்டிருப்பதுதான் எனக்கு கஷ்டமாக இருந்தது. ஏதாவது வேலை கொடுத்தால் செய்து கொண்டு இருக்கலாம். அந்த மும்முரத்திலேயாவது என் மனதை ஒருவகையாக சமாதானப்படுத்திக் கொள்ள முடியும். பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு முகங்களையும், சாமான்களையும் பார்த்துக்கொண்டே நின்றால்? புதுப் புடவையும் ரவிக்கையும் உடுத்திக் கொண்டு நகைகளைக் கழற்றாமல், பொம்மை அலங்காரமாக நின்று கொண்டிருப்பது போல் இருந்தது எனக்கு.

அதற்கு ஏற்றாப்போல் மாமியும் அருகில் இருந்த என்னிடம் சொல்லாமல் ஒவ்வொரு காரியத்துக்கும் கூடத்தில் இருந்த லக்ஷ்மியை கூப்பிட்டே காரியம் சொல்லிக்கொண்டிருந்தாள். ஒரு தரம் 'நான் போய் அரிசியை களைந்துகொண்டு வரேனே அம்மா' என்று குனிந்து பாத்திரத்தை தூக்கியும், 'வேண்டாம், லக்ஷ்மி களையட்டும். கிணற்றடியிலே ஒரே தெப்பமாக இருக்கு' என்று சொல்லிவிட்டாள். 'எங்கே ஓடிப்போகிறது காரியம். எல்லாம் செய்யலாம். உட்கார்ந்து கொள்' என்று சேர்த்தாள். 'இல்லை அம்மா' என்று நான் பாத்திரத்தை தூக்கிக்கொண்டிருக்கை

யிலேயே, லக்ஷ்மி அதைக் கையி லிருந்து பிடுங்கிக்கொண்டு சிரிப் புடன் பின்புறம் போய்விட்டாள். நானும் வெறுமனே கூட தொடர்ந்து போனேன்.

இப்படி ஒவ்வொரு காரியத் துக்கும் இந்த ஒரு வாரமாக என் றுல், பாரேன், புது நாட்டுப்பெண் என்றுல் காரியமே செய்யக் கூடாது என்று உண்டா? எத் தனை நாளைக்கு இப்படி இருக்கப் போகிறது. இருந்தாலும் நான் விடுவதில்லை. நீ தான் புத்திசொல்லி இருக்கிறுயே. பத்துக் காரியத் துக்கு ஒரு காரியமாவது செய்து விடுவேன். ஆனலும் இந்த ஒரு வாரத்தில் நான் தினசரி முக்ய மாகச் செய்த காரியங்களைச் சொல் லட்டுமா? நித்தியம் ஒரு புதுப் புடவையை கட்டிக்கொள்வதும், தலைவாரி, பின்னி நகைகளைப் போட்டுக்கொண்டு அலங்காரம் செய்துகொள்வதும்தான்.

அட, பெண்ணை இப்படிப் பத விசாக வைத்துக்கொண்டிருக் கிறுர்களே என்று நீ சந்தோஷப் படுவாய்.

இந்த ஒரு வாரத்தில், அம்மா, எத்தனை பெண்கள், பாட்டிகள், அம்மாமிகள் என்னை வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறுர் கள் தெரியுமா? கூடத்தி லிருந்து புவனம் என்று அம்மா ரொம்ப மிருதுவாக கூப்பிடு வாள். போய் பார்க்க வந்திருக் கிறவர்கள் முன்னல் போட்டோ வுக்கு உட்காருகிற மாதிரி உட் கார்ந்து அவர்கள் பரிசீலனை, கேள்வி முடியும் மட்டும் எழா மல் உட்கார்ந்துகொண்டிருப் பேன். இதிலே ஒரு வேடிக்கை, ஒருநாள் எழுபது வயதுக்கு மேலே ஒரு பாட்டி, பார்வையே சரியாக தெரியாமல் தடுமாறி வந்து என்னைக் படுத்தின பாடு முகத்தை கிட்ட கொண்டு வந்து அப்படியும் இப்படியும் திருப்பி. நல்ல வேளை, சுளுக்கிக்கொள்ள வில்லை. இந்த லக்ஷணத்தில் நான் நல்ல செகப்பு என்றும் சர்டிபி கேட் கொடுத்துவிட்டாள், எப் படி?

இந்த வாரம் இப்படி ஆகிவிட் டது. என்னை அடிக்கடி கடிதம் எழுதச் சொல்லிவிட்டு நீங்கள் எழுதாமல் இருந்துவிடாதீர்கள். அப்பாவோ, அண்ணுவோ, ஸர ஸாவோ யாராவதுஎழுதிக்கொண் டிருங்கள். ஆனல் என்னைப்போல் இப்படி விரிவாக வம்பு வளர்த்து கடிதம் எழுதப் போகிறீர்களா! எனக்கு என்னவோ எல்லாம் புதுசாகப் பட்டது எழுதினேன். உங்கள் எல்லோருக்கும் நமஸ் காரம்.

புவனம்

நிமிஷக் கதைகள்

வாஸ்தவம்

முதலாளி ஒருவர் தன்னுடைய கவலைகளுக்கெல்லாம் பரிகாரம் தேட விரும்பினர். கடைசியாக அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. தன் நண்பரைக் கூப்பிட்டு, "இனிமேல் நான் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. அதற்காக நான் ஒரு குமாஸ்தாவை மாதச் சம்பளத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டு விட்டேன். என்னுடைய கவலைகளையெல்லாம் இனி அவனிடம் தள்ளிவிடப் போகிறேன்," என்றார்.

"ரொம்ப சரி; அந்த குமாஸ்தாவுக்கு என்ன சம்பளமோ?"

"ஐந்நூறு ரூபாய்"

"அந்த ஐந்நூறு ரூபாய் சம்பளத்திற்கு எங்கே போவீர்கள்?"

"அது என்னுடைய கவலையில்லையே. கவலைப்பட வேண்டியது குமாஸ்தா அல்லவா?"

* * *

கேஸ் போட்ட காரணம்

நீதிபதி:—உம்மைப் பிரதிவாதி எப்போது காண்டாமிருகம் என்று கேலி செய்தார்?

நாட்டுப்புறத்தான்:—இரண்டு வருஷத்திற்கு முன்னல்.

நீதிபதி:—அப்படி என்ருல் ஏன் இரண்டு வருஷத்திற்கு முன்பே கேஸ் போடவில்லை?

நாட்டுப்புறத்தான்:—நேற்றுத் தானுங்க நான் காண்டா மிருகத்தை உயிர் காலேஜில் பார்த்தேன்.

* * *

ஒரு கடிதம்

ஒரு புத்தக வியாபாரிக்குக் கீழ்க்கண்டபடி ஒரு கடிதம் கிடைத்தது.

"ஐயா, தாங்கள் குறிப்பிட்டு அனுப்பியிருக்கும் அந்த மோசமான புஸ்தகத்திற்கு நான் ஆர்டர் கொடுக்கவேயில்லை. நான் ஆர்டர் கொடுத்திருந்தாலும் நீங்கள் அதை எனக்கு அனுப்பவேயில்லை. அனுப்பியிருந்தாலும் அது எனக்கு வந்து சேரவில்லை. சேர்ந்திருந்தால் நான் பணம் கொடுத்தாயிற்று. கொடுக்கா விட்டாலும் இனி கொடுக்கப் போவதில்லை."

* * *

தொண்டையின் உபயோகம்

"என் பெண்ணின் குரல் எதற்கு உபயோகப்படும் என்று யோசிக்கிறேன். ஒன்றும் தோன்றவில்லை."

"ஏன்? நெருப்புப் பிடித்துக் கொள்ளும்போது?..."

* * *

வருத்தப்படாதே!

பையன்:—அப்பா நீ நேற்று ராத்திரி எனக்குக் கணக்குப் போட்டுக் கொடுத்தாயே. அந்தக்

கணக்கை வாத்தியார் தப்புன்னு சொல்லிட்டார்.

தகப்பனர் :—தலைவா! தலைவா! நான் அவசரத்திலே போட்டேன். என்ன பண்ணுகிறது?

பையன் :—நீ கவலைப்படாதேப்பா. எல்லாப் பசங்களுடைய அப்பாவும் தப்பாத்தான் போட்டு அனுப்பிச்சிருக்கா.

* * *

ஓட வேண்டாமா?

பிரயாணி :—ஏனய்யா பயப்படுகிறாய்? கையிலே ஒரு சரியான பிரம்பா எடுத்துக்கிட்டு போனுப் புலி கிலி எல்லாம் என்ன பண்ண முடியும்?

அவர் :—ஆமாய்யா? ஆனு அந்தப் பிரம்பை எடுத்துகிட்டு எவ்வளவு வேகத்தில் ஓடணும்?

* * *

சொன்னுல் சொன்னபடி

ஜெயிலதிகாரி:—(கோபத்துடன்) ஏண்டா, கைதியைப் பார்க்க யாரையும் உள்ளே விடக்கூடாது. என்று சொல்லியிருந்தேனே. எங்கே கைதி?

வார்டர்:—வாஸ்தவம். ஸார் கைதியைத்தானே வெளியே விட்டிருக்கிறேன்.

* * *

நிற்கவில்லை

வேலைக்காரன்:—அம்மா, ஒரு பிசகு பண்ணிவிட்டேன். கடிகாரத்தைச் சாவி கொடுக்கும்போது கைதவறி கீழே விட்டுட்டேன்.

எஜமானி:—ஐயையோ அது நின்னுடுத்தா!

வேலைக்காரன்:—நான் கடைசியாய்ப் பார்க்கும்போது அது நிக்கலேங்கோ. உருண்டு ஓடிக்கிட்டே இருந்தது.

* * *

அதுவும் சரிதான்

"கிட்டு ரொம்பக் கெட்டிக்காரன். மகாமேதாவி. தம்பிடியில்லாமல் சென்னைக்குப் போய் கடன் வாங்கி வியாபாரம் செய்து இப்போது சுகமாகக் காலம் கழிக்கிறுன். எப்படி அவனுடைய தைரியம்?"

"அவன் தைரியத்தைக் கொண்டு உடைப்பிலே போடு. அவ்வளவு நம்பி நூறு ரூபா கடன் கொடுத்தானே அவன் தைரியத்தைப்பற்றி சொல்லு.

* * *

பார்த்துவிட்டானும்!

இரண்டு பைத்தியங்கள் சந்தித்தன.

ஒரு பைத்தியம் மற்றொன்றைப் பார்த்து, "அடே என் கைக்குள்ளே என்ன இருக்கு சொல்லுடா பார்ப்போம்" என்றது.

"டேய், ஏரோப்ளேன் இருக்குதுடா"

"அடேடே நான் கைக்குள்ளே ஏரோப்ளேனை மறைக்கச்சே நீ பார்த்துட்டேடா."

* * *

போட்டுத்தா!

"இந்த மோட்டார்காரை நீர் எனக்கு விற்கும்போது என்ன உடைந்து போனுலும் போட்டுத் தருவதாகச் சொன்னீரல்லவா?"

"ஆமாம்; இப்போது என்ன உடைந்து விட்டது!"

"என்னுடைய நாலு பற்களும் முழங்காலும் ஒடிந்து விட்டன."

காற்ருடி

சியாராம சரண குப்தா

அன்று அதிகாலேயில் சியாம் எழுந்திருந்தபோது வீட்டில் ஒரே கூக்குரலாக இருந்தது.

அவன் பாட்டி உமாவை ஒரு வெள்ளைத் துணியால் தலை வரையில் மூடி, சுற்றிலும் எல்லோரும் நின்றுகொண்டு, அழுதுகொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் உமாவை ஸ்மசானத்திற்கு எடுத்துச் செல்ல ஆரம்பித்தபோது சியாமன் ரொம்ப அழுது உபத்திரவப்படுத்தினன். அவனைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களின் கையிலிருந்து திமிறிக்கொண்டு அவன் பாட்டியின்மேல் விழுந்து அழுதான்.

"பாட்டி தூங்குகிருள். அவளே இந்த மாதிரி எங்கே எடுத்துக் கொண்டு போகிறீர்கள்? நான் விட மாட்டேன்" என்று அழுது அடித்துக் கொள்ளலானன். குழந்தை. அவனுக்கென்ன தெரியும், பாட்டி இந்த உலகத்தினிடம் விடைபெற்றுக் கொண்டுவிட்டாளென்பது?

இருந்தவர்கள் ரொம்ப பிரயத்தனத்துடன் சியாமனே விலக்கி உமாவை எடுத்துச் சென்ருர்கள். அக்னி ஸமஸ்காரங்களை எல்லாம் பார்க்க அவனை விடவில்லை. ஒரு வேலைக்காரி "ராம் ராம்" என்று சொல்லிக்கொண்டே அவனை வீட்டிலேயே நிறுத்திக் கொண்டாள்.

2

யாரோ புத்திசாலிகள் சியாமனிடம் "உன் பாட்டி சாகவில்லை. மேலே உன் மாமா ராமனிடம் போயிருக்கிருள்" என்று சொல்லி வைத்தனர். பாட்டிக்காக வெகுநாள் அழுது மெள்ள மெள்ள சமாதானமடையலானன் சியாமன். ஆனலும் அவன் மனதிலுள்ள துக்கம் மாறவே இல்லை. மழைத் தண்ணீர் இரண்டொரு தினங்களில் காய்ந்து போகிறது. ஆனல் பூமியின் அடியில் வெட்டினல் எப்படி எப்பொழுதும் இருக்கிறதோ அதே போல அவன் பாட்டி இறந்த சோகம் அவன் கண்ணீரினின்றும் மறைந்தாலும் அவன் உள்ளத்தில் போய் குடிகொண்டு விட்டது. அவன் அநேகமாக எப்பொழுதும் தனியாக உட்கார்ந்து கொண்டு, வறண்ட திருஷ்டியுடன் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் மேலே ஒரு காகிதக் காற்ருடி பறந்து கொண்டிருந்தது. எதைக் கண்டோ அவன் உள்ளம் ஒரு சந்தோஷத்தால் மலர்ந்தது. தன் தாத்த விச்வேச்வரரிடம் சென்று, "தாத்தா எனு

க்கு ஒரு காற்றாடி வாங்கித் தாருங்கள்!'' என்று கேட்டான்.

மனைவி இறந்த பிறகு விச்வேச்வரர் ரொம்ப மனோவியாகூலத்துடன் இருந்து வந்தார். அவருக்கு எதிலும் மனம் செல்லுவதில்லை. குழந்தை கேட்டவுடன், "ஆகட்டும், வாங்கித் தருகிறேன்" என்று சொல்லி வருத்தத்துடன் போய் விட்டார்.

சியாமன் காற்றாடிக்காக, ரொம்ப ஏங்கி இருந்தான். அவனால் தன் இச்சையை அடக்க முடியவில்லை. ஒரு மூலையில் ஆணியில் விச்வேச்வரருடைய கோட்டு மாட்டியிருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்து ஒரு கீழே ஸ்டூலை இழுத்து அதற்குக் போட்டு, சட்டைப் பையில் கையை விட்டுத் தேடினான். அதிலிருந்து ஒரு அணவை எடுத்துக்கொண்டு இறங்கி ஓடலானான்.

வேலைக்காரி சுகியாவின் மகன், போலா சியாமனுக்கு சம வயதுத் தோழன். சியாமன் அணவை அவனிடம் கொடுத்து, "ஒரு காற்றாடியும் நூலும் வாங்கிக்கொண்டு வா. ஆனால் தனியாகப் போய் யாருக்கும் தெரியாமல் வாங்கி வர வேண்டும்" என்றான்.

3

காற்றாடி வந்து சேர்ந்தது. சியாமனும் போலாவும் ஒரு இருட்டு அறையில் உட்கார்ந்து அதற்கு நூல் கட்டலானார்கள்.

சியாமன் போலாவிடம், "போலா! யாரிடமும் சொல்லலவில்லையே? தெரியுமா" என்றான்.

சரி, என்று தலை யசைத்தான் போலா.

சியாமன் ரகசியத்தைச் சொல்ல ஆரம்பித்தான். "போலா! நான் இந்த காற்றாடியை நூல் கட்டி வானத்தில் ராமுனிடம் அனுப்புவேன். இதைப்பிடித்துக்கொண்டு பாட்டி கீழே இறங்கி வந்து விடுவாள். எனக்கு எழுதத் தெரியாது. இல்லாவிட்டால் இதன் மேல் அவள் பெயரைக்கூட எழுதி விடுவேன்" என்றான்.

போலா சியாமனைவிடக் கொஞ்சம் தெரிந்தவன். அவன் உடனே, "விஷயம் என்னவோ சரிதான். ஆனால் ஒரு கஷ்டம்" என்றான்.

"என்ன கஷ்டம்?" என்றான் சியாமன்.

"இந்த நூல் ரொம்ப மெல்லியதாக இருக்கிறது. இதைப் பிடித்துக்கொண்டு பாட்டி இறங்கி வர முடியாது. இது அறுந்துபோய் விடும் என்று பயப்படுவாள். ஆகையால் காற்றாடியில் நல்ல மணிக்கயிராகக் கட்டிவிட்டால் சரியாகப் போய்விடும்" என்றான்.

சியாமனின் முகம் கம்பீரமடைந்தது. ஓ! சரியான விஷயம்தான்! ஆனால் மணிக்கயிற்றிற்கு எங்கே போவது? எப்படி வாங்குவது? விலை கொடுத்து வாங்க வேண்டும். பாட்டியை கருணை இல்லாமல் கொளுத்தி விட்டு வந்தவர்களா காசு கொடுக்கப் போகிறார்கள்? அன்று இரவு சியாமனுக்கு தூக்கமே வரவில்லை. இதே கவலைதான். அவனுக்கு அழுகைகூட வந்து விட்டது.

4

முதல் நாளைய உபாயப்படி அன்றும் விச்வேச்வரர் சட்டையிலிருந்து ஒரு ரூபாய் எடுத்துக்

கொண்டான் சியாமன். நேரே போலாவிடம் போய் ரூபாயைக் கொடுத்து, "இதோ பார், போலா, யாருக்கும் தெரியுக்கூடாது. நல்ல மணிக்கயிறாக இரண்டு பந்து வாங்கிக் கொண்டுவா. ஒரு பந்தானால் போதாது. நான் ஜவாஹர் அண்ணாவிடம் சொல்லி ஒரு காகிதத்தில், பாட்டி என்று எழுதி வாங்கி வைத்திருக்கிறேன். பெயர் இருப்பதால் காற்றாடி நேரே அவளிடமே போய்ச் சேரும்" என்றான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு சியாமனும் போலாவும் அதே இருட்டறையில் உட்கார்ந்துகொண்டு காற்றாடிக்கு கயிறு கட்டிக்கொண்டிருந்தார்கள்.

சுப காரியத்தில் அகஸ்மாத்தாக ஏற்படும் விக்னத்தைப் போல, கோபத்துடன் விச்வேச்வரர் அங்கே வந்து சேர்ந்தார். போலாவையும் சியாமனையும் மிரட்டி, "ஏண்டா பயல்களா, என் சட்டையிலிருந்து ரூபாய் எடுத்தீர்களா?" என்று அதட்டினார்.

இந்த ஒரே அதட்டலில் போலா பயந்துவிட்டான். "நான்



எடுக்கவில்லை. காற்றாடியும் கயிறும் வாங்கிவர சியாமன்தான் எடுத்து என்னிடம் கொடுத்தான்" என்று சொல்லிவிட்டான்.

விச்வேச்வரர் சியாமன் கன்னத்தில் இசண்டு அறை கொடுத்து, "ஏண்டா திருட வேறு கற்றுக் கொண்டாயா? ஆகட்டும் இன்று உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று சொல்லி, இன்னும் இரண்டு அறை கொடுத்து கீழே இருந்த காற்றாடியை எடுத்துக் கிழித்தெறிந்தார்.

அடுத்தபடியாக அருகே இருந்த கயிற்றில் விழுந்தது அவருடைய திருஷ்டி; உடனே இன்னும் அதிக கோபத்துடன் "இதை யாரடா வாங்கிக்கொண்டு வந்தது?" என்று கேட்டார்.

"இவன்தான் வாங்கிக்கொண்டு வரச் சொன்னான். இதில் காற்றாடியைக் கட்டி பாட்டியிடம் விட்டால் இதைப் பிடித்துக் கொண்டு பாட்டி இறங்கி வருவார் என்று சொன்னான்" என்றான் போலா.

விச்வேச்வரர் ஒரு கணம் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து கிழித்துப் போட்ட காற்றாடியின் பக்கம் பார்த்தார். அதில் ஒட்டி இருந்த காகிதத்தில் பாட்டி என்று எழுதி இருந்தது. அவரையும் அறியாமல் அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

(ஹிந்தியிலிருந்து 'ஜயம்' மொழி பெயர்த்தது)

Coffee
Ours for Quality

Raw, Roast or Ground
Available in several
grades to suit all.

GANESH & CO.
MADRAS.

Retail Branch:
285, CHINA BAZAR ROAD.



நட்சத்திர பலா பலன்கள்

(1) அஸ்வனி-மகம்-மூலம்

1-10-39 காலை 9-57 முதல்
1-10-39 காலை 11-25 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கான எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்குதல், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-17 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு செய்தல், சிறு கவலைகள், எக்காரியங்களை எடுக்கினும் அலைச்சல்தான் மீதியாகும், நேசர் அல்லது தொழிலில் மேலதிகாரிகள் குடும்பத்தார்கள் வகையில் கலகம், மன சஞ்சலமும் உண்டாகும், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வது நலம்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனால் மன மகிழ்ச்சி, நூதன வியாபாரங்கள் செய்யின் தக்கபலன் தரும், வீடு வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கு இந்நாள் தகுதியானதாம்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதி யறிதல், கொடுக்கல் வாங்கல் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ...த்தாசை செய்தற்கான எக்காரிய மெடுக்கினும் பலன் தரும், தனக்குப் ...ன் தாத்தக்க நூதனத் தொழில்களைச் செய்யின் நன்மை யுண்டாகாது.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

சர்வ காரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நலன்தரும், எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 பகல் 11-13 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சிறு இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மன மயக்கம், வீண் மனஸ்தாபம், இத்தினத்

தில் பலன் தாத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மையுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணினும் வீண் மன வருத்தமே உண்டாகும்' எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

6-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உல்லாசம், சிக்கிய தனத்தை மீண்டும் பெற எத்தனிக்கின் கைகூடும். நூதன பொருள் வாத்தி, தன் காரியங்களை முடித்துக் கொள்ள ஒரு தகுதியான நாள்.

(2) பரணி-பூரம்-பூராடம்

1-10-39 காலை 9-57 முதல்
2-10-36 காலை 11-25 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், சில காரியங்களைக் குறித்துச் சிந்தனை, இந்நாளில் முக்கியமான காரியங்களை நிறுத்தி வைப்பதே நலம், தன் காரிய ஜெயத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தலே நலம், எக்காரியத்தையும் யோசனையுடன் செய்தல் நலம்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கான எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்குதல், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்தியும் உண்டாகும்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு செய்தல், சிறு கவலைகள், எக்காரியத்தை எடுக்கினும் அலைச்சல்தான் மீதியாகும். நேசர் அல்லது தொழிலில் மேலதிகாரிகள், குடும்பத்தார்கள் வகையில் கலகம், மனசஞ்சலம். இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனுல் மனமகிழ்ச்சி, நூதன விபாபாரங்கள் செய்யின் தக்க பலன் தரும், வீடு, வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கு இந்நாள் தகுதியானதாம்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதியறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்வதற்கான எக்காரியமெடுக்கினும், பலன் தாத்தக்க நூதனத் தொழில்களைச் செய்யினுன் நன்மையுண்டாகாது.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 பகல் 11-13 வரை.

சர்வகாரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் சுலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும் பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

இந்நாளில் பழமையான தொழிலிலும் சிறு இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மனமயக்கம், வீணான மனஸ்தாபங்கள், இத் தினத்தில் பலன் தரத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மையுண்டாகாது. முக்கியமானவர்களைப் பேட்டிகாணின் வீண் மனவருத்தமே உண்டாகும், எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

தொழிலில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரியம் ஜெயம் நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மையுண்டாகும். உத்தம நாள்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற சில காரியங்களைக் குறித்துச் சிந்தனை, முக்கியமான காரியங்களை திருத்தி வைப்பதே நலம், தன் காரிய ஜெயத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசனையுடன் செய்தல் நலம்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 12-56 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கு எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்குதல், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு செய்தல், சிறு கவலைகள், எக்காரியத்தை எடுக்கினும் அலைச்சல்தான் மிதியாகும். நேசர், தொழிலில் மேலதிகாரிகள் அல்லது குடும்பத்தார்கள் வகையில் கலகம், மனசஞ்சலம், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையாயிருக்கின் நலம்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை அதனால் மனமகிழ்ச்சி, நூதன வியாபாரங்கள் செய்யின் தக்க பலன் தரும்,

வீடு, வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கு இந்நாள் தகுதியானதாம்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதியறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்வதற்கான எக்காரியமெடுக்கினும் பலன்தரும். தனக்குப் பலன் தரதக்க நூதனத் தொழில்களைச் செய்யின் நன்மையுண்டாகாது.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

சர்வ காரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அமைத்த லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும். பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

(4) ரோகணி-அஸ்தம்-திருவோணம்.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உல்லாசம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

தொழிலில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரியம் ஜெயம், நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மை யுண்டாகும், உத்தம நாள்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற சில காரியங்களைக் குறித்து சிந்தனை, முக்கியமான காரியங்களை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம், தன் காரிய ஜெயத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசனையுடன் செய்தல் நலம்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கு எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீக்கும், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிழை செய்தல், சிறு கவலைகள், எக்காரியத்தை எடுக்கினும் அலைச்சல்தான்

மீதியாகும். நேசர், தொழிலில் மேலதிகாரிகள் அல்லது குடும்பத்தார்கள் வகையில் கலகம், மன சஞ்சலம், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 பகல் 11-13 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனால் மன மகிழ்ச்சி, நூதன வியாபாரங்கள் செய்யின் தக்க பலன் தரும், வீடு வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கு இந்நாள் தகுதியனதாம்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதி யறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்வதற்கான எக்காரியம் எடுக்கினும் பலன் தரும், தனக்குப் பலன் தரத்தக்க நூதனத் தொழில்களைச் செய்யின் நன்மையுண்டாகாது.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11 25 வரை.

இந்நாளில் பழமையான தொழில்களிலும் சில இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மன மயக்கம், வீணான மனஸ்தாபம், இத்தினத்தில் பலன் தரத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மையுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணின் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம், எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உல்லாசம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

தொழிலில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரிய ஜெயம்; நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மை யுண்டாகும், உத்தம நாள்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற காரியங்களைக் குறித்துச் சிந்தனை, முக்கிய காரியங்களை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம், தன் காரிய ஜெயத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசனையோடு செய்தல் நலம்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கு எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்கும், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு செய்தல், சிறு கவலைகள், எக்காரியத்தை எடுக்கினும் அலைச்சல்தான் மீதியாகும், நேசர், தொழிலில் மேலதிகாரிகள் அல்லது குடும்பத்தார்கள் வகையில் கலகம், மனசஞ்சலம், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனால் மனமகிழ்ச்சி, நூதன வியாபாரங்கள் செய்யின் தக்க பலன் தரும், வீடு வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கு இந்நாள் தகுதியானதாம்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

சர்வ காரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கின் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

2-10-39 காலை 11-35 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

இந்நாளில் பழமையான தொழில்களிலும் சில இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மன மயக்கம், வீணான மனஸ்தாபம், இத்தினத்தில் பலன் தாத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மை யுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணில் மனஸ்தாபம் உண்டாகலாம், எதிலும் முன் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உல்லாசம், சிக்கிய தனத்தைப் பின்னும்பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

தொழிலில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரிய ஜெயம், நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மையுண்டாகும், உத்தம நாள்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற காரியங்களைக் குறித்துக் கவலை, முக்கிய காரியங்களை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம், தன் காரிய ஜெயத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசனையோடு செய்தல் நலம்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

இத்தினம் தக்கபடி தொழில் நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கு எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்கும், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு, சிறு கவலைகள், எக்காரியத்தை எடுக்கினும் அலைச்சல்தான் மீதியாகும், நேசர், தொழிலில் மேலதிகாரிகள் அல்லது குடும்பத்தார்கள் வரையில் கலகம், மன சஞ்சலம், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிதையாய் இருக்கின் நலம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்செய்தியறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்தற்கான எக்காரியமெடுக்கினும் பலன் தரும். தனக்கு நன்மை தரத்தக்க துதனத் தொழில்களைச் செய்யின் நன்மையுண்டாகாது.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

சர்வ காரிய ஜெயம்; பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக் கொள்ள எத்தனிக்கின் நலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழில் சாதாரணமாய் நடக்கும், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

இந்நாளில் பழமையான தொழில்களிலும் சில இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மனமயக்கம், வீணன மனஸ்தாபம், இத்தினத்தில் பலன் தரத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மையுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணின் மனஸ்தாபம் உண்டாகலாம், எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலம்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

இத்தினம் மிகவும் முக்கியமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உல்லாசம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

தொழிலில் உற்சாகம். முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரிய ஜெயம், நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மையுண்டாகும், உத்தம நாள்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற காரியங்களைக் குறித்து கவலை, முக்கிய காரியங்களை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம். தன் காரியத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலம்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

இத்தினம் தொழில் தக்கபடி நடக்கும், வேண்டிய தனத்தை அடைவதற்கு எத்தனம் செய்யின் ஜெயந்தரும், குடும்ப சம்பந்தமான கவலைகள் நீங்கும், எதிர்பாராத பேட்டிகளும் காரிய சித்திகளும் உண்டாகும்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனால் மன மகிழ்ச்சி, நூதன வியாபாரங்கள் செய்யின் தக்க பலன் தரும் வீடு, வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கான நாள்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதியறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலைச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்தற்கான எக்காரிய மெடுக்கினும் பலன் தரும், தனக்கு நன்மை தரத்தக்க நூதனத் தொழில்களைச் செய்யின் நன்மையுண்டாகாது.

3-10-39 பகல் 12-57 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

சர்வ காரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நிலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழி

வில் சாதாரணப் பலன், அனுமத்து லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்கவலையுமில்லாமல் நடக்கும்.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

இந்நாளில் பழமையான தொழில்களிலும் சிறு இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலைச்சல், மன மயக்கம், வீண் மனஸ்தாபம், இத்தினத்தில் பலன் தரத்தக்க எக்காரியம் தொடரினும் நன்மையுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணினும் மனஸ்தாபமே உண்டாகும், எதிலும் முன் ஜாக்கிரதையாய் நடக்கின் நலமாம்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்டகாரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உற்சாகம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

தொழில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரிய ஜெயம், நூதன காரியம் தொடங்குவதற்கு சிறந்த நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மையுண்டாகும், உத்தம நாள்.

7-10-39 பகல் 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

சாதாரணமாய்த் தொழில் நடக்கும், முன் சென்ற காரியங்களைக் குறித்துக் கவலை, முக்கிய காரியங்களை இந்நாளில் நிறுத்தி வைப்பதே நலம், தன் காரியத்திற்காக முக்கியமானவர்களைக் காணுதிருத்தல் நலம், எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

1-10-39 காலை 9-57 முதல்
2-10-39 காலை 11-25 வரை.

இந்நாளில் சாதாரணத் தொழிலிலும் மறதி, எழுத்து முறையில் பிசகு செய்கல், எக்காரியங்களை எடுக்கினும் அலைச்சல்தான் மீதியாகும், நேசர், தொழிலில் மேலதிகாரிகள் அல்லது குடும்பத்தார்கள் வகையில் கலகம், மன சஞ்சலமும் உண்டாகும், இத்தினத்தில் எக்காரியத்திலும் முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வது நலம்.

2-10-39 காலை 11-25 முதல்
3-10-39 பகல் 12-27 வரை.

முறைப்படி தொழில் நடக்கும், சௌக்கியம், குடும்ப சந்தோஷம், முக்கிய நேசர்களின் சேர்க்கை, அதனால் மன மகிழ்ச்சி, நூதன வியாபார

கள் செய்யின் தக்க பலன் தரும், வீடு, வாகனம் முதலிய சகல சுகங்களையும் அடைவதற்கான நாள்.

3-10-39 பகல் 12-27 முதல்
4-10-39 பகல் 12-56 வரை.

தொழிலில் சாதாரணப் பலன், களத்திர புத்திர முகத்திருப்பம், நற்சேதி யறிதல், கொடுக்கல் வாங்கலில் கவலை, நேசரால் அலேச்சல், பிறருக்கு ஒத்தாசை செய்வதற்கான எக்காரியம் எடுக்கினும் பலன் தரும், தனக்கு நன்மை தாக்கூடிய நூதனத் தொழில்களைச் செய்யின் நன்மை யுண்டாகாது.

4-10-39 பகல் 12-56 முதல்
5-10-39 பகல் 12-54 வரை.

சர்வ காரிய ஜெயம், பிறருதவியைக் கொண்டு தன் காரியங்களை முடித்துக்கொள்ள எத்தனிக்கின் நலந்தரும், எப்பொழுதும் உள்ள தொழிலில் சாதாரணப் பலன், அனுமத்த லாபம் பெற எத்தனிக்கினும் பலன் தரும், பொதுவில் இந்நாள் எக்கவலேயுமில்லாமல் நடக்கும்.

5-10-39 பகல் 12-54 முதல்
6-10-39 பகல் 12-19 வரை.

இந்நாளில் பழமையான தொழில்களிலும் சிறு இடையூறுகள், பிறர் காரியங்களுக்காக அலேச்சல், மனமயக்கம், வீணை மனஸ்தாபம், இத்தினத்தில் பலன் தாத்தக்க எக்காரியம் எடுக்கினும் நன்மை யுண்டாகாது, முக்கியமானவர்களைப் பேட்டி காணினும் மனஸ்தாபமே உண்டாகும், எதிலும் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலமாம்.

6-10-39 பகல் 12-19 முதல்
7-10-39 காலை 11-13 வரை.

இத்தினம் மிகவும் உத்தமமானது, இஷ்ட காரிய ஜெயம், தொழில் வெற்றிகரமாய் நடக்கும், மன உற்சாகம், சிக்கிய தனத்தைப் பின்னும் பெற எத்தனிக்கின் கைகூடும், நூதன பொருள் வரத்து, தன் காரியங்களை முடித்துக்கொள்ள ஒரு தகுதியான நாள்.

7-10-39 காலை 11-13 முதல்
8-10-39 காலை 9-36 வரை.

தொழிலில் உற்சாகம், முக்கிய நேசர் பேட்டி, எடுத்த காரிய ஜெயம், நூதன காரியம் தொடங்குவதற்கு ஏற்ற நாள், குடும்ப மகிழ்ச்சி, இடையில் சிறு கவலையுறினும் பின் நன்மை யுண்டாகும், உத்தம நாள்.

திரை உலகம்

தமிழ்

அஹிம்சா சக்தியின் ஒத்திகைகள் ஆரம்பமாகி விட்டன. இதில் எஸ். டி. சுப்புலக்ஷ்மி நடிக்கப் போகிறார். சீக்கிரம் மோஷன் பிச்சர் ஸ்டுடியோவில் படம் எடுக்க ஆரம்பிப்பார் டைரக்டர் ஸ்ரீ. சுப்ரமண்யம்.

* * *

பக்த சேதாவை ஸ்ரீ. பிரகாஷ் டைரக்ட் செய்யவில்லை. அவருக்குப் பதிலாக ஸ்ரீ. வி. எஸ். வி. அய்யர் (யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷன் உதவி டைரக்டராக இருந்து பிரசித்தி பெற்றவர்) டைரக்ட் செய்கிறார். ஸ்ரீ. சுப்ரமண்யம் அவருக்கு, கூட ஆலோசனை கூறுபவராக இருக்கிறார். இதில் கொத்தமங்கலம் சுப்பு, ஜி. சுப்புலக்ஷ்மி முதலியவர்கள் முக்ய நடிகர்கள். சென்ற வாரம் ஒரு சீன் எடுத்தாகி விட்டது.

* * *

மீனாக்ஷி பிலிம் கம்பெனியாரின் சரித்திரப் படமான பர்வத குமாரியை ஸ்ரீ இளங்கோவன் டைரக்ட் செய்வார். கதை, வசனமும் அவரேதான் என்று சொல்ல வேண்டுமா?

* * *

தமிழ்ப்பட முதலாளிகள் போட்டிருந்த திட்டப்படி இப்பொழுது படம் எடுக்க முடியுமா, முடியாதா என்று ஒரு பிரச்னை எழுந்திருக்கிறது. ஏனென்றால், படம் பிடிக்க, வெத்து பிலிம், சில ஸ்டுடியோக்களில் தவிர மற்றவர்களிடம் ஸ்டாக் இல்லை. சீக்கிரம் மோஷன் பிச்சர் காங்கிரஸ் ஏதாவது ஏற்பாடு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜெர்மன் பிலிம் சப்ளை கம்பெனியான ஆக்பா கம்பெனியை மூடினதினால் வந்த உபத்திரவம் இது.

* * *

ஸ்ரீ. தியாகராஜ பாகவதர் ஹிந்தி படித்துக் கொண்டு வருகிறாராம். சீக்கிரம் ஹிந்தி சினிமா உலகில் தோன்றுவாரென்று தெரிகிறது.

* * *

ஹிந்தி

இந்தியன் பிலிம் கார்ப்பொரேஷன் கம்பெனியார், பிரசித்தி பெற்ற வங்காள ஆசிரியரான ஸோலேஜ் முகர்ஜீயின், தேவி என்ற கதையை படமெடுக்கப் போகிறார்கள். இதை ஸ்ரீ கேதார் சர்மா டைரக்ட் செயயப் போகிறார். இதில் ஸ்ரீ நந்தரேகர், மஹேந்திர ஸைகால் (நியூ தியேட்டர்ஸ் ஸைகாலின் சகோதரர்) மிஸ் மோனிகா தேசாய் (மிஸ் லீலா தேசாயின் சகோதரி) ஆகியவர்கள் நடிக்கப்போகிறார்கள்.

* * *

ஸ்ரீமதி சாந்தா ஆப்தே பிரபாத் கம்பெனியை விட்டு நீங்கி,

இந்தியன் பிலிம் கார்ப்பரேஷனில் சேர்ந்துவிட்டதாக நம்பத்தக்க வதந்தி ஒன்று வந்திருக்கிறது. அடுத்த படத்தில் முக்கிய கதாநாயகியாக நடிப்பார்.

* * *

பிரபாத் கம்பெனியாரின் ஆத்மி அல்லது வாழ்வதற்கு உயிர் என்ற படம் தயாராகி, முடிந்துவிட்டது. அடுத்த வாரமே முக்கிய நகரங்களில் காக்ஷியளிக்கும். அவர்களுடைய பக்த தியானேச்வர் படப் பிடிப்பு வேலை மும்முரமாக நடந்து வருகிறது.

* * *

ஸாகர் பிலிம் கம்பெனியாரின் ஜீவன் ஸாதி என்ற படம் எடிட்டிங் முடிந்து காக்ஷிக்குத் தயாராகிவிட்டது. இதில், சுரேந்திரா, மாயா, புதோ அத்வானி, அனுராதா முதலியவர்கள் நடித்திருக்கின்றனர். இதை நந்தலால் டைரக்ட் செய்திருக்கிறார்.

* * *

பாரமவுண்ட் பிலிம் கம்பெனியார், ரோமியோ ஜூலியட் 1940 என்ற படத்தை ஹிந்தியில் எடுக்கப் போகிறார்கள். இதை சுன்னிலால் பக்ரீக் டைரக்ட் செய்வார். நடிகர்கள் பெயர் பின்பு அறிவிக்கப்படும்.

* * *

பேமஸ் சினி லெபரெட்டரி கம்பெனியார் பத்தாயிரம் சதுர கெஜம் அளவுள்ள பூமியை பாம்பாய் தாதரில் வாங்கி இருக்கிறார்கள். அதில் புது மாதிரியில் அமெரிக்க முறையில் ஒரு ஸ்டூடியோ நிர்மாணிக்கப்படும். அவர்கள் சொந்தப் படங்கள் எடுப்பதுடன், தனிப்பட்ட பட முதலாளிகளுக்கும் படம் பிடித்துத் தருவார்கள்.

* * *

ஆங்கிலம்

நார்மா ஷியரர் அடுத்த படியாக நடிக்கப்போகும் படத்தின் பெயர் ப்ரைட் அண்டு ப்ரிஜூடிஸ். இது மெட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியாரின் படம்.

இப்பொழுது அவள் நடித்துக் கொண்டிருக்கும் படத்தின் பெயர் தி உமன்.

* * *

பிரிட்டனில் ரொம்ப 'பாஷனைக்' இருக்கும் நடிகை யாரென்று ஒரு கேள்வி எழுந்தபோது, ஜோன் கிராபோர்டுக்கு முதல் ஸ்தானம் கிடைத்தது.

* * *

கிரேடா கார்போ எப்பொழுதும் மணிக்கணக்குப்படி தான் நடிப்பார். அதிக நேரம் நடிக்கமாட்டாள். தற்போது நடித்துக் கொண்டிருக்கும் எம்.ஜி.எம். படத்தில் டைரக்டர் எங்கேயோ அவசரமாகப் போக வேண்டி இருந்தது. என்ன செய்வதென்று தவித்துக் கொண்டிருக்கையில், கார்போ, "பரவா, இல்லை! இன்று இரவு முழுவதும் நடித்து முடித்துவிடுகிறேன்" என்று சொல்லி அப்படியே செய்தாள்.

* * *

மழை வருகிறது என்ற ஆங்கிலப் படத்திற்காக பின்னணி சங்கீதமும், (இந்திய சங்கீதம்) சில காக்ஷிகளும் எடுக்க ஒரு கோஷ்டியார் பரோடாவிற்கு வந்திருக்கிறார்கள். ஹாலிவுட்டி

ருக்கு அதிக தூரம் வந்தது இது தான் முதல் தடவை. இதில் டைரோன் பவர், மிர்னா லாய் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியார் இரண்டு பால்ய நக்ஷத்திரங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். (1) அன்னி ஷர்லி (2) லூஸிலி பால். அன்னி ஷர்லி சீக்கிரம் கரோல் லெம்பார்டுடன் விஜில் இன் தி நைட் என்ற படத்தில் நடிப்பாள். மிஸ் பாலும் சீக்கிரம் ஒரு படத்தில் தோன்றுவாள்.

* * *

தமிழ்

மனோகர் பிலிம் கம்பெனியார், மஹாத்மா புத்தர், சந்திராவளி என்ற இரு தமிழ்ப் படங்களை எடுப்பார்கள்.

* * *

பாண்டுரங்கனுக்குப் பிறகு வேல் பிக்சர் கம்பெனியார் பக்தி என்ற தமிழ்ப் படத்தை எ... பார்கள். நடிகர்கள் பெயர் பி... அறிவிக்கப்படும்.

* * *

டெக்கான் சினிடோன் கம்பெனியாரின் குமார குலோத்... கனில் சில காக்ஷிகளை ப... இருக்கின்றன. இதை வினி... கம் செய்யும் உரிமையை ஓரி... டல் பிலிம் கம்பெனியார் வா... இருக்கிறார்கள்.

* * *

மதுரை முருகன் டாக்கீ... ஏற்கனவே ஒப்பந்தம் செய்... பட்டுள்ள மஞ்சுகோஷா எ... படத்தை ஸ்ரீ தியாகராஜ ப... வதரைக்கொண்டு எடுக்கப் ... கிறார்கள்.

* * *

ராஜா சாண்டோ தயாரிக்... போகும் குல்தீபக் என்ற ப... தில் ஹாஸ்ய பாகத்தில் பி. எ... ஞானமும், பி. ஜி. வெங்கடே... னும் நடிப்பார்கள்.